NAVA LAW
Professional Corporation
Real Estate | Corporate | Commercial | Immigration | Family | Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

தாயகத்திலும் கனடாவிலும் வெளிவரும்

# உகுருவி

ekuruvi.com


INFORCE LIFe Financial Services Inc.
WE ARE HIRING
416.909.0400
www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough

சிறகு-04 | March 2016 | இணைய மாத இதழ் | பறப்பு-03

**5:30 Sunday April 03rd 2016 | Chandni Grand | 3895 McNicoll Ave, Scarborough**

ekuruvi NIGHT 2016
BIZTHA MARKETING EXCELLENCE AWARD

## விழாவின் பிரதம விருந்தினராக
## அரசியல் ஆய்வாளர்
# நிலாந்தன்






ஒரு பிரதமர் உருவானார
புகைப்படங்கள் அடங்கிய நூல் வெளியீடு

**சிறப்பு பக்கங்கள்**

- ரொறோண்டோவின் மக்கள் திலகம்
- ஒரு தமிழ் பெண்ணின் கதை
- நாலாம் கட்ட ஈழப்போர் ஏச்ரிவரில் ஆரம்பம்
- 2018 இல் ஆட்சிக் கனவில் கேன்சர்வேட்டிவ் கட்சி

MORTGAGE ALLIANCE THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
info@mortgageguardian.ca
Gini Annarasa
Mortgage Broker
Independently owned and operated franchise of the Mortgage Alliance Network | Lic#12521
gini.annarasa@gmail.com
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca



DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change $24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com



GT Brokers
Protect You & Your Family
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
Critical Illness | No medical Life | Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances. RRSP | RESP
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Foresters



MRI SUPER RENOVATIONS AND PAINTING
SINCE 1990
www.mrisuperrenovations.com
Raj Munees
General Contractor
Cell: 416-618-4584 | Off: 416-299-3633
Free Estimate | Reasonable Price | Quality & Relible Work
Full Basement Renovation | Kitchen Cabinets
Hardwood & Tiling | Painting | Electrical & Plumbing



அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
TIME FOR SOLUTIONS
BonaFide Mortgage Solutions Inc.
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8







Tam Sivathasan
Broker of Record
416.804.3443
MEDICAL & PROFESSIONAL CENTRE
AT MARKHAM & FINCH




800 SQ. FT AND UP
2015 FALL OCCUPANCY
CALL FOR INFORMATION
VEEDU REALTY INC. BROKERAGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

veeduliving
Your Home. Your Life. Better.

# HOME & GARDEN SHOW
APRIL 9 - 10
MARKHAM FAIRGROUNDS

PRESENTED BY
OHM DEVELOPMENTS

**FREE ENTRY & PARKING • HOURLY GIVEAWAYS**

**SATURDAY 10 AM - 8 PM** **SUNDAY 10 AM - 6 PM**

உங்கள் வீட்டை மேலும் அழகுபடுத்தவும், தேவையான அனைத்தையும் தெரிந்துகொள்ளவும், உங்கள் திட்டங்களுக்குப் பொருத்தமான துறைசார் வல்லுனர்களையும் அவர்களின் நேர்த்தியான வேலைப்பாடுகளையும் ஒரே இடத்தில் பார்த்து அறிந்துகொள்ளவும் ஓர் அரிய சந்தர்ப்பம்

80+ வர்த்தகர்கள் + உணவு சாவடிகள் + மணித்தியாலத்திற்கு ஒரு முறை இலவச பரிசுகள்

சுய செயல்முறை பயிற்சிப்பட்டறைகள் கருத்தரங்குகள் உணவு தயாரிக்கும் முறைகள் இன்னும் பல




நட்சத்திர தொகுப்பாளர் **Paul Lafrance** ஐ சந்திக்கும் வாய்ப்பு

PLATINUM SPONSORS
COMPUTEK COLLEGE EST. 1991 BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Abi Singam LAW PROFESSIONAL CORPORATION

GOLD SPONSOR: AJAX NS DENTAL Care, Comfort, Convenience, Confidence...
MEDIA SPONSOR: ATN ASIAN TELEVISION NETWORK
FOOD SPONSOR: Chef RAMANAA

தீபன் பாலசுப்ரமணியம்
416.317.2986
For more information visit
VEEDULIVING.COM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

# இகுருவியின் அழைப்பு

இகுருவியின் நான்காவது ஆண்டுவிழாவுக்கு முன்னதான பதிப்பில் எமது வாசகர்களுடன் மனம் திறந்து பேசுகின்ற சந்தர்ப்பம் இது. இணைய மற்றும் அச்சுஊடகப் பரப்பில் இகுருவிக்கு 2015ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகள் பிரதானமானவை. இகுருவி தன்னை ஒரு முக்கியமான காலகட்டத்திற்குள் இழுத்துச் செல்கின்றது.

தொழில் முனைவோருக்கான சந்தைப்படுத்தல் நிறுவனமாக தனது பயணத்தை ஆரம்பித்த Tamils Business Connections - Biztha.com நிறுவனம், அதன் ஒரு பகுதியாக இகுருவி செய்திப் பிரிவாகவும் வளர்த்துக் கொண்டது . இகுருவி கடந்த வருடத்தில் தன்னை ஒரு அசைக்க முடியாத எழுத்து ஊடகமாகவும் கனடிய தமிழ் ஊடகப்பரப்பில் பதிவுசெய்துள்ளது. இதற்காகநாம் கடந்து வந்துள்ள பாதை பல தடைக்கற்களை கொண்ட பாதையாகவே அமைந்தது. எமது இந்தப் பயணத்தில் எமக்கு உறுதுணையாக நின்ற வர்த்தகர்களுக்கும், எம்மை ஊக்கப்படுத்திய வாசகர்களுக்கும் மற்றும் எமது பத்திரிகையின் விநியோகத்திற்கு உதவி செய்யும் அனனத்து நிஜிகி வாழ் வர்த்தக நிறுவனங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளளோம். இகுருவி கண்ட இந்த வெற்றியின் பெரும்பங்கு சாரும் உங்களையே சாரும்.

இன்னும் பேசவேண்டி விடயங்களும், மக்கள் மத்தியில் கொண்டுவரப்பட வேண்டியசெய்திகளும் ஆயிரம் உள்ளன. ஒவ்வொறு செய்திகளின் பின்னணியை அறிந்து, தகவல்களை உறுதிப்படுத்தி உங்கள் முன் கொண்டுவருவதில் இகுருவி உறுதியாக உள்ளது. இந்த விடயத்தில் எமது வாசகர்கள் எம்மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை நாம் அறிவோம். அந்த நம்பிக்கை வீண்போகாத வண்ணம் எமது நகர்வுகள் அமையும் என்ற உறுதிமொழியினை வழங்குகின்றோம். இது ஒரு இலகுவான பயணமல்ல என்பதை நாம் அறிவோம். இருந்தும் இந்தப் பயணத்தின் தேவையை அறிந்துள்ளோம்.

இந்தத் தருணத்தில் கடந்து வந்த எமது பயணத்தின் வெற்றியைக் கொண்டாடவும், எமதுசமூகத்தின் மத்தியில் கொண்டாடப்படவேண்டியவர்களை கௌரவிக்கவும் வழமைபோல் இகுருவி தனது ஆண்டு விழாவை முன்னெடுக்கின்றது.

இகுருவியின் 2016ஆம் ஆண்டின் விழாவை இணைந்தே கொண்டாடவும் வெற்றிவிழாவாக்கவும் உங்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

அனந்தராஜ் நவஜீவன்

# உள்ளடக்கம்

றொப் போர்ட் - ரொறோண்டோவின் மக்கள்

இசைஞானி இளையராஜா - இசையாய் வாழ்பவர் - சிந்தனைப் பூக்கள்

ஆடலுடன் பாடலைக் கேட்டு (8) - ஆனந்தப்ரசாத்.

ஜெமனில் நடமாடும் கனேடிய எமன் ? - சிவமணி

2018 இல் ஆட்சிக் கனவில் முற்போக்கு கேன்சர்வேட்டிவ் கட்சி - ராகவி

ஒரு தமிழ் பெண்ணின் கதை - Jenny Starke

வலிமையான சமூகங்கள் வலிமையான மருத்துவமனைகளை உருவாக்குகின்றன - மருத்துவமனைக்கு ஆதரவளிக்கும் சுகுமார் கணேசன்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனம் கேட்கும் கனடா - ராகவி

நாலாம் கட்ட ஈழப்போர் சூச்சிவரில் ஆரம்பம் - இகுருவி ஐயாவும் நானும் கனடா மூர்த்தி

சீனத் தொழிலாளரின் அவலம் - குரு அரவிந்தன்

2016 இல் தீர்வு வரும் ஆனால் வராது - ரமணன்

தமிழர் அரசியல் குறிக்கோள்களை புறந்தள்ளிய யதார்த்த அரசியலுக்குள் செல்லவில்லை - புருஜோத்தமன் தங்கமயில், மதுரி தமிழ்மாறன்

உனக்கென்ன வேண்டும் சொல்லு? - இந்திரன் ரவீந்திரன்

ராஜீவ் கொலை அரசியல் - இந்திரன் ரவீந்திரன்

கனடா மத்திய வங்கியும் வட்டி விகிதமும் - செல்வா செல்வதுரை

தியாகத் திருநாள் பெரிய வெள்ளி - எஸ் ஆர் ராஜபாலன்

தமிழர் வாழ்வியல் பற்றிய செங்கை ஆழியானின் பார்வையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




AJAX
NS DENTAL
Care, Comfort, Convenience, Confidence...

1801 Harwood Avenue N
Suite 18 | Ajax ON | L1T 0K8

905 426 2222 905 426 2225 dmalini@ajaxnsdental.com

• Dental Hygienist
• Inventory Controllers
• Dental Assistants
• Customer Care Representatives
Careers @ AjaxNSDental.com
• Treatment Coordinators
• CRM Administrators
• IT Administrators

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016இல் தீர்வு! வரும். ஆனால் வராது!

இலங்கையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம்தமிழ்மக்களின்அரசியல் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்கின்றது என்பதும் அது தமிழ்ம க்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை மீளமுடியாதபடிக்கு புதைத்துவிடும் அபாயம் சூழ்வதையும் தமிழ்மக்கள் மெல்லமெல்ல உணரத் தொடங்கியிருக்கின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் ஒருமுடிவல்ல போராட்ட வடிவத்தின் பரிமாணமாற்றமாகவே அது கருதப்படவேண்டும் என்ற கருத்தியலை 2009ன் பின்னர் தமிழ்மக்கள் தெளிவாக உணரத் தொடங்கியிருக்கின்றார்கள்.

தோல்வியும் இழப்புகளும் தந்த அழுத்தங்களில் இருந்தும் மனஇறுக்கங்களில் இருந்தும் தமிழ்மக்கள் மெதுவாக விடுபட தொடங்கியிருக்கின்றார்கள்.

உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதபற்கும் கள யதார்த்தங்களுக்கு அமைவான வியுகங்களை அமைப்பதற்கும் ஏற்றவகையிலான தெரிவாக தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பை தமது தெரிவாக வெளிப்படுத்தினார்கள்.

ஆனால் அந்த தெரிவு மட்டுமே எல்லாவற்றையும் பெற்றுத்தந்துவிடும் என்று அவர்கள் நம்பியிருக்கவில்லை அல்லது அந்தநம்பிக்கையினை காலஓட்டத்தில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிட்டார்கள்.

அதனால்தான் தமிழ் தேசியகூட்டணிக்கு மாற்றாக தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்படவும் அது தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான முனைப்புகளை முன்னெடுப்பதற்குமான நிலை தாயகத்தில் தோன்றியது.

இலங்கையில்நிலவும்நீண்டகால அரசியில் பிரச்சினைக்கான தீர்வினை இப்போதுள்ள அரசியல் சூழலில் பெறத் தவறினால் பின்னர் எப்போதுமே பெற்றுவிடமுடியாது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏசுமந்திரன் தொடர்சியாக கூறிவருகின்றார்.

இந்த கருத்து வெளிப்பாட்டின் பின்னால் உள்ள இரண்டு முக்கிய விடயங்களை நாம்கூர்ந்நது கவனிக்கவேண்டும்.

முதலாவது தமிழர் பிரச்சினையில் மட்டும் ஒருமித்த கருத்தை (அதாவது தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கக்கூடாது ) கொண்டுள்ள தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளான சுதந்திர கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் கூட்டாக இந்த அரசாங்கத்தை உருவாக்கியுள்ளன.

எனவே இந்த அரசாங்கம் முன்வைக்கும் தீர்வு என்பது எதிர்ப்புகள் இன்றி பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுவிடும் என்ற மிகமலினமானவாதம்.

இரண்டாவது பலம்பொருந்திய இரண்டுகட்சிகளும் ஒன்றாகியுள்ள இந்ததருணத்தில் எதிர்கட்சியாக விளங்கும் தமிழ்தேசியக்கூட்டமைப்பும் அரசாங்கத்துடன் இணைந்து அவர்கள் முன்வைக்கின்ற தீர்வை ஏற்றுக்கொள்வது வரலாற்றில் இனி எப்போது நிகழமுடியாத ஒன்று என்ற முன்னையதைவிட மலினமானவாதம்.

இது தமிழ் தேசியக் கூட்டமைப்பை கண்மூடித்தனமாக ஆதரிக்கும் அவர்களின் தீவீர விசுவாசிகளுக்கு பெரியவிடயமாக தெரியலாம் ஆனால் உண்மை நிலை அதுவல்ல.

இலங்கை அரசாங்கம் இருகூறாகத்தான் இப்போதும் உள்ளது ஜனாதிபதி மைத்திரி பாலசீறிசேன மற்றும் அவரது சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் கொண்ட குழு மற்றையது ரனில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி. இதற்கு அப்பால் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச தலைமையலான சுதந்திரகட்சியின் ஒருபிரிவினரும் தீவிர சிங்களபௌத்தவாதம் கொண்ட பௌத்தபிக்குகள் மற்றும் அரசியல் தலைவர்கள் அணியும் உள்ளதையும் நாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமது அரசியல் இருப்பினை உறுதிப்படுத்துவதற்காக உருவாகியுள்ள ஐக்கியதேசியகட்சி மற்றும் சுதந்திரகட்சி கூட்டு என்பது நீண்டகாலம் நீடித்து நிலைக்கும் தன்மையை கொண்டதல்ல என்பதை மிகசுலபமாக புரிந்து கொள்ள முடியும்.

நீண்டகால அரசியல் தலைமைத்துவ இருப்பை நோக்கி ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரனில்விக்கிரமசிங்க செயல்பட்டு வருகின்றார்.

அதற்காக தனது கட்சியின் முக்கியதலைவர்களை ஓரம்கட்டி விட்டுமுன்னாள்இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை தேசியப்பட்டியல் மூலம் நாடாளு மன்றத்திற்கு அழைத்து வந்து அமைச்சராக்கியிருக்கின்றார்.

சரத்பொன்கோ மூலம் மகிந்தராஜபக்ச மற்றும் கோட்பாயராஜபக்ச ஆகியோர் உருவாக்கி வைத்திருக்கும் யுத்தவெற்றியின் நாயகர்கள் விம்பத்தை உடைப்பதேரனிலின் நோக்கம்.


ஏற்கனவே விடுதலைப்புலிகளை பலிவீனப்படுத்தும் நோக்கில் கருணாவை விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றிய ரனிலின் ராஜதந்திரம் இப்போதும் தொடர்கின்றது.

அசேமயம் ஐக்கிய தேசியக் கட்சியை ஓரம்கட்டும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் தீவிரம்காட்டி வருவதாகவும் தகவலகள்; வெளியாகி உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பங்களிப்பு இல்லாத ஓர் அரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்ற கூட்டுஎதிர்க்கட்சியின் கோரிக்கைக்கு, ஆளும்கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் களும் ஆதரவளித்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர்சியாக மைத்திரிபால சீறிசேனவையும் மகிந்தராஜபக்சவையும் மீண்டும் இணைக்கும் முயற்சியில்





சுதந்தரகட்சி முக்கியஸ்தர்கள் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ரனிலின் நகர்வுகளால் ஆடிப்போயுள்ள மைத்திரியும் மகிந்தவும் ஒன்று சேர்ந்தாலும் ஆச்சரியப்படுபதற்கில்லை.

இந்தபின்புலங்களுடன் பாராளு மன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்மாதம் 09ம் திகதி இலங்கை பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்டிருக்கின்றது.

இது இனப்பிரச்சினைக்கான தீர்வினை பெறுவதற்கான முதல் நகர்வு என தமிழ்தேசியக் கூட்டமைப்பு இந்தவிடயம் குறித்து ஆரம்பத்தில் கூறிவந்த போதிலும் இப்போது அரசியலமைப்பு பேரவைகுறித்து அதுகனத்த மௌனம்காக்கின்றது.

அதற்கு காரணமும் உள்ளது இந்த அரசியலமைப்பு பேர உருவாக்கத்தின் போது இதன்மூலமாக இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அரசியல் தீர்வினை காணப்போவதான வரைவு ஒன்றை தீர்மானம் கொண்டிருந்தது.

ஆனோல் இது தமிழ்மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதற்காகத் தான் பாராளுமன்றம் அரசியலமைப்பு சபையாக மாற்றப்படுகின்றதா என்ற சந்தேகங்களை சிங்களமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் இதனால் தமது அரசியல் எதிர்காலம் பாதிக்கப்படும் என இலங்கை அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் பலரும் கருதியதால் அந்தவிடயம் நீக்கப்பட்ட நிலையில் அரசியலமைப்பு பேரவை உருவாக்கத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் ஆவணம் ஒன்றில் வெறும்வார்த்தைகளில் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்கு திடமற்ற ஒரு அரசாங்கம் எவ்வாறு உண்மையான தீர்வினை தமிழ்மக்களுக்கு வழங்கப்போகின்றது என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

மீண்டும் மீண்டும் அரசாங்கத்தையும் அதன் தலைவர்களையம் நோகமால் இருப்பதற்காக அரசாங்கம் செய்கின்ற அனைத்தையும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் அடங்கிப்போதல் மனபாவம் மாறவேண்டும் அல்லது மாற்றப்படவேண்டும்.

தமிழ்மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பை தமது தரப்பாக தெரிவு செய்தமை தமக்கான தீர்வுகளை பெறுவதற்காக தவிர சிங்களஅரசு வழங்கப்போகும் தீர்வை விதந்தோம்பி தமிழ் மக்களிடம் திணிப்பதற்காக அல்ல என்ற உண்மை தெளிவாக உணரப்படவேண்டும்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு களையும் அதன் போக்குகளையும் மிகச்சரியாக உணரக்கூடிய ஆழுமைமிக்க இராஜதந்திரியாக விளங்கும் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் மீண்டும் மீண்டும் இணக்க அரசியல் என்ற போர்வைக்குள் தன்னையும் தமிழர்களையும் இழுத்து மூடிக்கொள்வது தமிழ்மக்களுக்கு மேலும் பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

மாற்றாக அவர்கள் வெளிப் படையாக தென்னிலங்கையின் அரசியல் நகர்வுகளை சர்வதேசத்திற்கு அறிவிக்க தயாராகவேண்டும்.

இந்த அரசாங்கம் குறைந்த பட்சமான அரசியல் தீர்வுகளைகூட தமிழ்மக்களுக்கு வழங்கும் நிலையில் இல்லை என்ற உண்மையினை தமிழ்தேசியக் கூட்டமைப்புதான் வெளியில் சொல்லவேண்டும்.

அதனை விடுத்து இந்த வருடத்திற்குள்தீர்வுவரும்தீர்வுவரும் என்று சொல்லிக்கொண்டே இருப்பது மிகமிக ஆபத்தானது.

கடந்தவையும் நடந்தவையும் நடந்தவையாகவே இருக்கட்டும் இனியாவது என்னதான் நடக்கின்றது என்ற உண்மையை எல்லோருக்கும் கேட்கும் வகையில் சொல்லிவிடுங்கள். ●

RE/MAX THIPAN RAJ NAVA•LAW GINI NS DENTAL COMPUTEK COLLEGE Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















THE GRAND OPENING CEREMONY OF KC DENTAL- Dr. Chandra & Associates, new location 280 Rossland Road East, Ajax,






"தேடிப்பார்" விளம்பர வர்த்தக கைநூல் வெளியீட்டு நிகழ்வு. நிகழ்வுகளோடு Ekuruvi. Mar 02, 2016




இம்மாதம் ஜேர்மனிக்குச் செல்லவிருக்கும் TAMIL CANADIAN BADMINTON FEDERATION அமைப்பினர்

THIPAN RAJ NAVA LAW NS DENTAL COMPUTEK COLLEGE Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு தமிழ் பெண்ணின் கதை...

எழுதியவர்: Jenny Starke தமிழில்: இலங்கதாஸ் பத்மநாதன்

எனக்கு ஐந்தாவது வயதில் இருந்து ஆரம்பமாகின்றது எனது ஆரம்பகால நினைவுகள். நடுநிசி நேரத்தில் எத்தவித சத்தமும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அவதானமாய் படிக்கட்டுகளில் என்னையும் தூக்கிக் கொண்டு அவர் செல்வது மட்டுமே என் நினைவில் உள்ளது. வரவேற்பறையில் உள்ள இருக்கைக்கு என்னைத் தூக்கிச் சென்று தன்மீது என்னைப் படுக்க வைத்துவிட்டு, பாண் துண்டு போன்ற எதையோ மென்று கொண்டிருந்தார். சில வினாடிகளில் அவர் மென்று கொண்டிருந்த அந்த பாண் துண்டை என் தொண்டைக்குள் தள்ள கட்டாயப்படுத்தினார். இது மட்டுமே எனக்குத் தெளிவாக நினைவிருக்கின்றது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்கு நினைவில்லை.

ஒரு குழந்தையாக எனக்கு நடந்த பாலியல் துஷ்பிரயோகத்தை மறப்பது எளிதாக இருந்திருக்கின்றது. இது ஒரு வரமா அல்லது சாபமா என உண்மையாகவே எனக்குத் தெரியவில்லை. குழப்பம், கோபம், அவமானம் மற்றும் மறுத்தல் ஆகியனவே எனது குழந்தைப் பருவமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் அவரைப் பார்க்கும்போதோ அல்லது அவர் பற்றி நினைக்கும்போதோ ஒருவித கோபம் மற்றும் அச்சத்திற்கு இடையே எனது உடல் சிக்கிக் கொண்டுள்ளதாக எனக்குத் தோன்றும்.

எனக்கு என்ன நேர்ந்து கொண்டிருக்கின்றது என்பதைக் கண்டறியவே பல வருடங்கள் கடந்தன.

எனக்கு 17 வயதாக இருக்கும்போது அதுவரை காலமும் அதுபோல் நான் அடிவாங்கியதே இல்லை என்பதைப் போல் என்னை காட்டுமிராண்டித்தனமாக அவர் அடித்தார். அவர் என்னை அடிக்கும்போது நான் எதுவும் பேசமாட்டேன். மேலும் மோசமாக அடிவாங்காமல் இருக்க நான் அமைதியாக உட்கார்ந்து கொள்வேன்.

அந்தத் தருணத்தில், அவரை நிறுத்தச் சொல்லும் அளவிற்கு எப்படியோ தைரியத்தை வரவளைத்தேன். என்னைத் தொட உங்களுக்கு உரிமையில்லை எனத் தெரிவித்தேன். எனது அம்மாவின் கண்கள் அதிர்ச்சியில் உறைந்திருந்ததைக் கண்டேன். என்னால் அம்மாவிடம் எதுவும் கூற முடியவில்லை — நான் ஏதேனும் கூறினால் அது எந்தவிதமான எதிர்வினைகளை ஏற்படுத்துமோ என்ற பயம் எனக்கு. என் சகோதரன் என்னை வேறொரு அறைக்கு அழைத்துச் சென்றார். எனக்கு என்ன நடந்தது என்பதைக் கூற எனக்கு தமிழில் தகுந்த வார்த்தைகள் தெரிந்திருக்கவில்லை. எனக்கு நடந்ததை ஆங்கிலத்திலும் சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் எனது சகோதரனிடம் நான் நடந்தவற்றைக் கூறினேன். அன்று எனது சகோதரனின் கண்களில் கண்ணீரைப் பார்த்தேன், அந்தக் கணம் முதல் அவரது வாழ்க்கையும் மாறியது என்பது மாத்திரம் எனக்கு நன்றாகத் தெரிந்தது.

எனது காயங்களில் இருந்து வடியும் இரத்தத்தை துடைத்துக் கொண்டும் எனது காயங்களுக்கு மருந்திட்டுக் கொண்டும் இருந்தபோது எனது அம்மா எனதறையில் என்னை அணுகினார். நடப்பவை அனைத்தும் உண்மைதான் என அவரால் நம்ப முடியவில்லை. அவர் சிரித்தார், எனக்கு கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது என்னால் எதுவும் கூறவோ அல்லது செய்யவோ முடியவில்லை.

அன்றிரவு நான் கூறியது உண்மை தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள எனது அம்மா என்னை அவர்களது படுக்கையறைக்கு அழைத்தார். அவர் அனைத்தையும் மறுத்தார். எனது வாழ்வின் மிக மோசமான காலகட்டம் முடிந்துவிட்டது என்று அன்று நான் நினைத்தேன்.

நாட்கள் கடந்து செல்லச் செல்ல, இதுவரை காலமும் இந்த விடயத்தை நான் ஏன் தன்னிடம் தெரிவிக்கவில்லை எனவும் உண்மையில் அவர் எனக்கு என்ன செய்தார் எனவும் என் அம்மா கேட்டுக்கொண்டே இருந்தார். இந்த விடயம் குறித்து நான் அவரிடம் முன்னரே கூறியிருந்தால் என்னை பாதுகாத்திருப்பேன் எனவும் அதனைத் தடுத்திருக்க முடியும் எனவும் அம்மா கூறினார். எனது அம்மாவிடமிருந்து இப்படியொரு பதில் வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை. எனக்குத் தோன்றியதெல்லாம் கோபம், அருவருப்பு மற்றும் சீற்றம். என்னை எனது அம்மாவால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் ஒரு குழந்தை என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது எனக்குள் ஏற்கனவே இருந்த குற்ற உணர்வு மற்றும் அவமானத்தை அதிகரித்தது. தற்கொலை செய்துகொள்ள எனது மனம் துடித்தது.

சில மாதங்களுக்கு பின்னர் நான் இளங்கலை மாணவியாக இருந்தபோது மனநல ஆலோசனை பெற்றுக் கொண்டேன். பழைய நினைவுகளுடன் நீண்ட நாட்கள் என்னால் வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும். ஒரு பொய்யான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்ததனால் மெதுவாக நான் பைத்தியமாகிக் கொண்டிருப்பதைப் போல் உணர்ந்தேன். அந்தக்காலகட்டத்தில் வீட்டிலிருந்து வெளியேறிச் செல்ல எனது அம்மாவின் அனுமதியை நான் கோராத நாள் இல்லை. ஆனால் அவர் அதற்கு என்னை அனுமதிக்கவில்லை. நான் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றால் தான் தற்கொலை செய்ய நேரிடும் எனவும் அவர் என்னிடம் கூறினார். தன்னால் அவருடன் வாழ முடியும் என்றால் என்னாலும் வாழ முடியும் என்பது அவரது கூற்றாக இருந்தது.

அதன் பின்னர் சில வருடங்கள், எதுவுமே நடக்காததுபோல் அனைவரும் பாசாங்கு செய்து கொண்டனர். ஆனாலும் எதுவுமே மாறவில்லை. நான் வெளிப்படுத்திய காட்டுமிராண்டியாக அவர் இல்லை. அவர் எங்களுக்கு தந்தையாக, எனது தாய்க்கு கணவராக, மீண்டும் எங்களது குடும்பத்தில் ஒருவரானார். இது என்னை மிகவும் ஆத்திரமடையச் செய்தது. சிலசமயம் நானும் எதுவுமே நடக்காதது போல் இருந்தேன். ஏனெனில் எனக்குத் தேவைப்பட்டது ஒரு ஒற்றுமையான குடும்பம்தான்.

ஆனாலும் இந்த விடயம் ஒரு கத்தியாக எனது இதயத்தை மேலும் மேலும் கிழித்துக் கொண்டிருந்தது போன்ற உணர்வு தொடர்ந்தது.

நான் வீட்டை விட்டு வெளியேறியபோது எனக்கு வயது 19. நான் மீண்டும் திரும்பி வீட்டுக்கு

RE/MAX THIPAN RAJ | NAVA LAW PROFESSIONAL CORPORATION | THE GUARDIAN GIRI | INFORCE LIFE | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



**Elankeeran .T**

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


வரவேண்டும் என எனது குடும்பம் வலியுறுத்தியது. ஒரு நல்ல குடும்பம் என்ற பெயர் இழக்கப்படுமோ என அவர்கள் பயந்தார்கள். தனது குடும்பத்தின் ஆதரவில்லாமல் ஒரு 19 வயது தமிழ் பெண் தனியே வாழ்கிறாள் என்பதை தமிழ்ச் சமூகம் ஏற்குமா? அவ்வாறானதொரு பெண் குறித்து தமிழ் சமூகம் எவ்வாறு சிந்திக்கும்?

குழந்தைப் பருவத்தில் எனக்கு நேர்ந்த பாலியல் துஷ்பிரயோகம் எனது வாழ்வின் பல தருணங்களைத் திருடிக் கொண்டது. அதில் பிரதானமானது ஒரு தமிழ் பெண் என்கின்ற அடையாளம் தான். நான் வீட்டில் இருந்து வெளியேறிய பின்னர் எனது குடும்பம் மட்டுமல்லாது எனது சொந்தங்கள் மற்றும் குடும்ப நண்பர்கள் உட்பட எனது தமிழ்ச் சமூகமே என்னை விலக்கி வைத்தது. எனக்கு தேவையான நேரத்தில் அவர்கள் எனதருகில் இருக்கவில்லை என்பதுதான் உண்மை. அப்போது நான் மிகவும் காயப்பட்டேன். கைவிடப்பட்டது போல் உணர்ந்தேன்.

எனது சொந்த குடும்பத்திலிருந்து நான் வெளியேறியபோது தமிழ் சமூகத்தின் துரோகம் மற்றும் ஆதரவு கொடுக்காத நிலையை நான் தூற்றினேன் என்பதை பதிவு செய்ய நான் அவமானப்படவில்லை. ஆனால் தமிழ் சமூகத்தின் அந்த முடிவு ஒரு தமிழ் பெண்ணாக எனது அடையாளத்தை நான் சந்தேகப்பட்டதற்காக அவமானம் கொள்கிறேன். நான் எதிர்கொண்ட காயம் எனக்கு இரக்கத்தைவிட வெறுப்பை வெளிக்காட்ட எளிதாக்கியது, எனது கடைசிப் பெயர் ஜெர்மனாக இருக்கலாம். ஆனால் ஒரு தமிழ் பெண்ணாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். அதை யாராலும் என்னிடமிருந்து பறித்தெடுக்க முடியாது.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானால் முதலில் நீங்கள் இழப்பது உங்கள் குரலைத் தான் என கூறுவார்கள். ஆனால் இனியும் யாராலும் என்னை அமைதியாக்க முடியாது. மீண்டும் துஷ்பிரயோகிக்கவும் முடியாது. எனது அவமானகரமான குடும்பத்தை என்னால் பொய் சொல்லி நல்ல குடும்பமாக்கவும் முடியாது. இதுவே எனது உண்மை — எனது கதை.

எனது கதையில் பல படிமானங்கள் உள்ளன. இருப்பினும் எனது கதையின் இந்த குறிப்பிட்ட பகுதி நான் இப்பொது இருக்கும் இடத்திற்கு என்னைக் கொண்டுவரவும் என்னை தைரியமாக பல முடிவுகளை எடுக்கவும் செய்திருக்கின்றது. இதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ளவேண்டியது, இது எனது கதையின் ஒரு பகுதி மட்டுமே என்பதைத் தான்.

இத்தகைய பிரச்சனைகள் எப்போதும் மறைத்து வைக்கப்பட்டிருக்கக் கூடாது. இதனை ஒரு இரகசியமாக வைத்திருக்கக்கூடாது. எவரும் அமைதியில் துன்புறுவது



ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. எவ்விதமான புறக்காரணிகள் இருந்தாலும் குழந்தைப் பருவத்தில் ஒரு குழந்தைக்கு நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு அந்தக் குழந்தை எந்த விதத்திலும் பொறுப்பாகாது. அந்தக் குற்றமும் அதற்கான பொறுப்பும் முழுக்க முழுக்க அந்தக் கொடுமையை செய்தவரையே சாரும்.

குழந்தைப் பருவ பாலியல் கொடுமை பற்றிய விழிப்புணர்வும் கல்வியும் எமது சமூகத்திற்குத் தேவை. மூன்று பெண் குழந்தைகளில் ஒருவர் மற்றும் ஆறு ஆண் குழந்தைகளில் ஒருவர் தேவையற்ற பாலியல் தொல்லைகளை 18 வயதாகும் முன்னரே அனுபவிக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இத்தகைய பாலியல் செயல்கள் இந்தக் குழந்தைகளுக்கு நன்கறிந்தவர்களால் அல்லது நம்பிக்கைக்கு உரித்தானவர்களினால் தான் மேற்கொள்ளப்படுகின்றது என்பதாவது உங்களுக்குத் தெரியுமா?


தங்களது குழந்தைப் பருவத்தில் பாலியல் வன்கொடுமைகளை தங்களுக்குப் பாதுகாப்பாக, வழிகாட்டியாக மற்றும் உறுதுணையாக இருக்கவேண்டிய பெற்றோர், வளர்ப்புப் பெற்றோர், உறவினர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களிடமிருந்து அனுபவித்த தமிழ் பெண்கள் மற்றும் ஆண்களின் கதையைக் கேட்டு நான் மிகவும் துன்புற்றிருக்கிறேன். இந்த இளம் பிஞ்சுகள் இதுபோன்ற கொடுமைகளை அனுபவித்திருக்கின்றார்கள் என்பதை அறிய எனது மனம் துயர் உறுகின்றது

ஆனாலும் என்னைப் போலவே பலரும் இத்தகைய அனுபவத்தை எதிர்கொண்டுள்ளனர் என நினைக்கும்போது அது எனக்கு ஒருவித பலத்தைத் தருகின்றது. இத்தகைய விடயங்களை தைரியமாகப் பலர் பகிர்ந்துகொள்கிறார்கள் என நினைக்கும்போது எதிர்காலம் குறித்து நம்பிக்கை துளிர்விடுகின்றது.

இந்தக் கட்டுரையை படித்த பின்னர் ஆத்திரத்தில் இருந்து அசௌகரியம் மற்றும் வெறுப்பற்ற நிலை என பலவிதமான உணர்ச்சிகளுக்கு நீங்கள் ஆளாகலாம். எமது தமிழ் சமூகம் இத்தகைய விடயங்களை திறந்த மனதுடன் எதிர்கொள்ளவேண்டும் என்பதே எனது ஆசை.

Jenny Starke அன்பு (A.N.B.U. - Abuse Never Becomes Us ) என்ற புதிய உதவி அமைப்பின் நிறுவனர்களின் ஒருவர். அன்பு குறித்த மேலதிக விபரங்களுக்கு www.anbu.ca ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் ரவீந்திரன்

# உனக்கென்ன வேணும் சொல்லு?



அவரின் பின்புறமிருந்து இரண்டு கைகள் களுத்தை நெரிக்கிறது. அவரின் கன்னத்தை ஒரு முத்தம் ஈரம் செய்கிறது. அவரின் தோள்பட்டை, காதுமடல்கள் எல்லாவற்றையும் ஒரு மூச்சுக்காற்று மெல்லிதாய் சூடேற்றுகிறது.

வேலைப்பளு, பொருளாதாரச் சுமை, இன்னும் சில காரணிகள் அவரை வாழ்க்கையின் விரக்தி நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. இது நாள்வரை நிமிர்ந்து நடந்த மனிதர் ஒருவர் இன்று மிகுந்த மன இறுக்கத்தோடு அமர்ந்திருக்கிறார்.

விபரீதமான முடிவெடுக்கும் முயற்சியில் இறங்கியிருந்த அவரின் மூளை இப்போது இயங்குகின்றதா? இல்லையா? என்று தெரியாத நிலையில் உறைந்துபோய் அமர்ந்திருக்கிறார்.

கழுத்தை இறுக்கிய கைகளும், தோளிலும் காதுமடல்களிலும் பரவிய மூச்சுக்காற்றும், முத்தமும், ஒன்றாய்இரண்டாய்உடைந்துவிழும் வார்த்தைகளும், அவர் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று உணர்த்துகிறது.

எல்லாமே அர்த்தமற்றதாக தெரிந்த அந்த இறுக்கமான தருணத்தை தகர்த்துப் போடுகிறது அந்தக்கைகளின் செயலும், மூச்சுக்காற்றின் வெப்பமும், முத்தத்தின் ஈரமும், மெல்ல உடைந்து விழும் வார்த்தைகளும்.

அது அவரை இருக்கையில் இருந்து கீழ் இறங்கி நிலத்தில் தவளச் செய்கிறது. ஆம் அவர் நிலத்தில் தவழ்கிறார். குழந்தை தோளில் ஏறி அமர்ந்துகொள்கிறது.

அந்த மண்டபத்தில் யானையும் பாகனுமாக அப்பாவும் பிள்ளையும் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். சிறிது நேரத்தில் களைத்துப்போய்விடுகிறார் அப்பா. மிகுதி யானை ஊர்வலம் நாளைக்கு என்ற வாக்குறுதியுடன் குளிக்கச்செல்கிறார். பின் சாப்பிட்டுவிட்டு எல்லோரும் தூங்கச் செல்கிறார்கள்.

அன்றிருந்த இறுக்கம் அடுத்தநாள் தளர்ந்துபோகிறது. வாழ்வதற்கான புதிய வழியொன்று வந்து சேர்கிறது.

இப்போது யோசிக்கிறார்.. ஒருவேளை நேற்று அந்த விபரீதமான முடிவை நான் எடுத்திருந்தால்? சிந்தித்துப் பார்க்கவே கடினமாக இருக்கிறது அவரிற்கு. நேற்று நான் ஏன் அந்த விபரீதமான முடிவை எடுக்கவில்லை? என்றொரு கேள்வியையும் கூடவே தனக்குள் கேட்கிறார். ஆனால் அதற்கான பதிலை அவரால் இலகுவாக கண்டுபிடிக்க முடியவில்லை.

நேற்று நிலவிய இறுக்கமான மனநிலை உடைத்து, அவரின் மனதை ஒருங்கிணைக்கும் உடற்பயிற்சிக்கூடத்திற்கு அழைத்துச்சென்று, அதன்பின் உணவருந்தச் செய்து, தூக்கத்திற்கு கொண்டு சென்றது அவரின் குழந்தை என்பது அவரின் அறிவிற்கு எட்டவில்லை.

ஆம் நேற்று யாருமே அவருக்கு உதவ முடியாச் சூழலில் அந்த அதிசயத்தைச் செய்தது அவர் குழந்தைதான்.

ஆனால் அந்தக் குழந்தைக்கு யாரும் அதைச் சொல்லிக் கொடுத்தது கிடையாது. தன்னை யறியாமலேயே குழந்தை அந்த வேலையை தன் தந்தைக்காக செய்து முடித்திருக்கிறது.

பெற்றோர்கள் குழந்தைகளை எப்படி வளர்க்கவேண்டும்? அவர்களின் உளவியலை கவனமாக கையாளுவது எப்படி? என நிறைய விடயங்களை பெற்றோர்கள் தம் குழந்தை வளர்ப்பின்போது கற்பதும் கவனிப்பதும் உண்டு.

ஆனால் தம் பெற்றோரை மகிழ்ச்சியாக வைத்திருப்பது எப்படி என்றும் பெற்றோரின் உளவியலை கையாளுவது எப்படி என்பது பற்றியும் குழந்தைகளுக்கு யாரும் சொல்லிக்கொடுப்பது கிடையாது. அவர்களுக்கு எந்த ஆய்வும் வழிகாட்டுதலும் கிடையாது. ஆனால் தம்மையறியாமலேயே குழந்தைகள் அதைச் செய்து கொண்டிருக் கின்றன.

நீங்கள் குழந்தைகளை வளர்க்க குழந்தைகளின் உளவியல் பற்றிய புரிதல் உங்களுக்கு வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் குழந்தைகளிடம் நீங்கள் வாழ்வில் கடந்துபோகும் மிகுதி இருபத்தி மூன்று வகை உளவியலையும் வெல்லும் வல்லமை இருக்கிறது.

குழந்தை வளர்ப்பு என்பது பொருளீட்டும் கல்விக்கூடங்களில் ஒருவேளை பெரிய பாடமாக இருக்கலாம். அந்தப் பாடப் புத்தகங்களில் இப்படி இப்படி என்று வரையறுக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் உண்மையில் அது ஒரு வரையறையற்ற வாழ்வியல் கலை. ஒவ்வொருவரிற்கென்றும் ஒவ்வொரு தனித்துவம் பொருந்திய, பெற்றோர் என்கின்ற ஒவ்வொரு கலைஞரும் ரசித்து ரசித்து செதுக்கும் நுண்கலைகள் நிறம்பிய படைப்பு. உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும்நிகர் நீங்களேதான். வேறு யாரும் முன்மாதிரியாகவோ, நிகராகவோ, பாடமாகவோ இருந்துவிடமுடியாது.

உங்கள் குழந்தைகளிடம் உங்கள் மரபணுவில் இருக்கும் ஆர்வம் (Interest) திறன் (Skills) குணநலன் (Personality) போன்ற உள்ளார்ந்த காரணிகள் பெரிதும் மாறாமல் இருக்கும்.

அத்துடன் உணவு, வளரும் சூழல் போன்ற புறம் சார்ந்த காரணிகளைக் கொண்ட அவர்கள் உலகத்தில் நீங்கள் எங்கும் நிறைந்திருந்தால் போதும் உங்கள் குழந்தைகள் இந்த உலகத்தை வெல்லும் வல்லமையை பெற்றுவிடுவார்கள். உங்களுக்கும் குழந்தை வளர்ப்பு கோடி மகிழ்ச்சியை கொண்டுவரும்.

பெற்றோர்கள் குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்கவேண்டும் என்று சொல்வது பொருத்தமானது அல்ல. நீங்கள் அவர்களைத் தோளில் சுமக்கும் நேரமும், அவர்கள் விரல் பிடித்து நடக்கும் நேரமும், அவர்களை முன்னே நடக்கவிட்டு நீங்கள் பின்னே செல்லும் நேரமும், நீங்கள் அவர்களுக்கு வழிகாட்டி முன்னே நடந்து செல்லும் நேரமும் என அவர்களுடன் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் அவர்களுக்கானது மட்டுமல்ல அவை உங்களுக்கானதும்தான்.

இதைத்தான் நம்பாட்டன் திருவள்ளுவர், ''மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (குழந்தையைத் தொட்டணைக்கும் போதும் மழலை மொழியைக் கேட்கும் போதும் மனதுக்கும் உடலுக்கும்இன்பம்உண்டாகின்றது)

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை யளாவிய கூழ் (சிறுகுழந்தை கையில் தொட்டளைந்த உணவு கூழேயாயினும் பெற்றோர்க்கு அது அமுதத்தைவிட இனிதாய் இருக்கும்)

குழலினிதி யாழினி தென்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர் (தம் பிள்ளைகளின் மழலைச் சொல் கேளாதவர்களே குழல் ஓசையும் யாழ் ஓசையும் இனிமையாய் இருக்கிறது என்பார்கள்) எனச் சொல்கிறார்.

பாண்டியன் அறிவுடைய நம்பியும் பலவகை வளத்தையுடையோராய், நாட்டிலுள்ள பலருடன் உணவு உண்ணும் செல்வர்கட்கும் இடையே குறுகுறுவென நடந்து வந்து, கையை நீட்டி, நெய்யுடைய உணவினை இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும், மெய்பட விதிர்த்தும் உள்ளதை மயக்கும் மக்கட்செல்வம் மகத்துவமானதென புறநானூற்றில் சொல்லப்படுகிறது.

உங்கள் குழந்தைகள் செய்யும் ஒவ்வொரு விடயமும் உங்களுக்கானது. குழந்தைகளுக்கு நீங்கள் சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு விடயமும் நீங்கள் கற்றுக்கொண்டது அல்லது கற்றுக்கொள்ள வேண்டியது.

ஒரு தந்தையாவதும் தாயாவதும் இலகுவானது. ஆனால் ஒரு தந்தையாய் இருப்பதுவும் தாயாய் இருப்பதுவும் கடினமானது என்ற பேச்சு சரியானது அல்ல

ஒரு தந்தையாவதும் தாயவதும் இயல்பானது. ஆனால் ஒரு தந்தையாய் இருப்பதுவும் தாயாய் இருப்பதுவும் சுகமானது என்பதே சரியானது.

எழுதிடும் விரல்களாலும் சிரித்திடும் இதழ்களாலும் வாழ்க்கை என்னும் அழகிய கவிதையை எழுதிவிட உங்களுக்கு உங்கள் குழந்தைகளும் அவர்களுக்கு நீங்களும் இருக்க வேறு என்ன வேண்டும் இந்த உலகத்தில் சொல்லுங்கள்?

RE/MAX THIPAN RAJ | NAVA LAW PROFESSIONAL CORPORATION | THE GUARDIAN GINI ANNARASA | Financial Service Inc. | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







TORONTO-PREMIER-CRICKET-LEAGUE AWARD NIGHT 2016. Mar 19, 2016






Grand Opening Ceremony MAYAS FURNITURE & MATTRESS- at 2615 Eglinton Avenue, Scarborough






Ninaivukal Night - 2016.

THE TIPSY COW SPORTS BAR & GRILL
Opening Mar 17,2016 @6298 main street whitchurch Stouffville Ontario




RE/MAX THIPAN RAJ
NAVA LAW
THE GUARDIAN
NS DENTAL
COMPUTEK COLLEGE
Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியல் 'குறிக்கோள்களை' புறந்தள்ளிய யதார்த்த அரசியலுக்குள் செல்லவில்லை!



இலங்கை தொடர்பாக தற்சமயம் ஒரு 'பொறுத்திருந்து பார்ப்போம்' நடவடிக்கையை சர்வதேச சமூகம் கையாள்வதால் உள்நாட்டு/வெளிநாட்டு தமிழ் அரசியல் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள்/செயற்பாட்டாளர்கள் சந்திக்கும் தேக்க நிலையின் விளைவு பற்றி யோசித்ததன் விளைவாகவே இப்பத்தி.

இலங்கை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைமுக ஆதரவுடனும் இலங்கை அரசாங்கத்தின் கூட்டுப் பங்களிப்புடனும் கடந்த செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேச ஈடுபாட்டுடன் ஒரு உள்நாட்டு விசாரணையே ஒத்துகொள்ளப்படுள்ளது. இதில் சர்வதேச ஈடுபாடு என்பது எந்தளவிலானது என்பது தொடர்பாக தற்போது விவாதங்கள் உள்நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது. அது மட்டுமின்றி, தற்போதைய அரசாங்கத்தின் 'உண்மையான குறிக்கோள்' என்ன என்பது தொடர்பாகவும் (அதற்கு உண்மையிலேயே தேசியப் பிரச்சினையை தீர்பதற்கான அரசியல் விருப்பம் (political will) இருக்கின்றதா?), அப்படியான விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவிப்போரின் கடும் போக்குவாத எண்ணங்கள் தொடர்பாகவும் கருத்துகள் தொடர்ந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தேசிய பிரச்சினையானது இரு சமாந்தர தளங்களில் பயணப்பட்டுள்ளது. அவையாவன, அதிகாரப் பகிர்வு மற்றும் உரிமைகளைக் கோருதல் என்பனவாகும். அதுவும் வெறும் மனித உரிமை மீறல்களைத் தாண்டி சர்வதேச குற்றங்களும், சர்வதேசத்தின் கண்முன்னேயே/ஈடுபாட்டுடன் பல தசாப்தங்களாக இழைக்கப்பட்டு வந்துள்ளன. இப்படியான ஒரு பயணத்தில் தற்போது வந்தடைந்திருக்கும் புள்ளி மிகவும் முக்கியமானது.

முள்ளிவாய்க்கால் பேரழிவு தொடர்பாக 'யுத்தக் குற்றங்களை' விசாரித்தல் (பொறுப்புகூறல்) மற்றும் புதிய அரசியல் யாப்பு அல்லது திருத்தம் ஒன்றினால் வழங்கப்படும் அதிகாரப்பகிர்வு மூலம் தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுதல் என்ற இரு விடயங்களில் தற்போதைய அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய உறுதிமொழிகளை தங்களின் புவிசார் அரசியல் தேவைகளுக்காக சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் தங்களின் குறிக்கோள்களை அடைவதற்கு ஏற்படும் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கிஎவ்வாறு வெற்றிகரமாக செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் நம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் தங்களின் பணிகளை செய்வார்கள், அவர்களின் வகிபாகம் என்ன என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது.

தற்சமயம் உள்நாட்டு கட்சி பேதங்களால் அரசியல் யாப்பு/திருத்தம் விடயமே தடுமாறிகொண்டிருக்கின்றது, புதிய அரசாங்கமோ மறுபுறத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அவரது ஆட்சிக் காலத்தில் உருவாக்கபட்ட ஏற்கனவே நடைமுறையில் இருந்த காணாமற் போனோர் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவை வைத்துக்காலங்கடத்த முயற்சித்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைக்கப்பட இருக்கும் விசாரணை நடைமுறை தொடர்பாக தகவல்கள் இதுவரை இல்லை, அதற்கான செயற்பாடுகள் எதுவும் ஆரம்பிக்கப்படவும் இல்லை. சர்வதேச ரீதியில் ஒத்துகொண்ட ஒரு விடயத்திலிருந்து உள்நாட்டு முரண்பாடுகளை காரணம் காட்டி தப்பிக்க முடியாது என்று இந்த அரசாங்கத்திற்கு தெரிந்தே இருக்கும். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை அது சிக்கிரம் ஆரம்பித்தேயாக வேண்டும். இந்த நேரத்தில் செயற்பாட்டாளர்களின் பங்கு என்ன?

இதிலேயே நாம் குறிக்கோள்மயவாதம் (Idealism) மற்றும் யதார்த்தவாதம் என்ற இரு கோட்பாடுகளையும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணுதல் என்ற ஒற்றை நோக்கில் அணுகவேண்டும். செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டளவு குறிக்கோள் மயவாதத்தினை தழுவியவர்கள். உதாரணமாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் இழைக்கப் பட்ட உரிமை மீறல்களுக்கு காரணமான எல்லோருக்கும் தண்டனை பெற்று கொடுப்பதில் குறியாக இருப்பார்கள். இது பல சமயம் யதார்த்தத்தினை புறந்தள்ளி ஒரு மேலான குறிக்கோளினை தழுவியதன் போக்கிலானது. ஆனால்,யதார்த்தம்வேறுமாதிரியாக முகத்தில் அறையும்.

இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பாக தமிழ்ச் செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளை அவதானித்தால் இது புரியும். தனி நாட்டுக் கோரிக்கை, இனப்படுகொலையை நிரூபித்தல் மற்றும் சர்வதேச விசாரணை என்பதனை உயர்ந்த குறிக்கோளாக சூடிக்கொண்டுள்ள செயற்பாட்டாளர்களால் இன்றைய இந்த தேக்க நிலை ஏற்றுகொள்ளப்படமுடியாதுள்ளது கண்கூடு. ஆனால், இதுவே யதார்த்தம். இந்த யதார்த்தத்தினை ஏற்று கொள்ள முடியாத சிலர் யதார்த்தத்தின் போக்கில் தேசிய பிரச்சினையை அணுகுவோரை துரோகி பட்டம் சூட்டி தம் ஆதங்கத்தை தீர்த்துக் கொள்கின்றனர்.

குறிக்கோள்மயவாதம் என்பது உண்மையில் செயற்பாட்டாளர்களுக்கு உத்வேகம் அளிப்பதற்கே தேவைப்படுகின்றது. உயர்ந்த குறிக்கோள் ஒன்றை நோக்கி பயணித்தல் செயற்பாட்டாளர்களுக்கு ஒரு வகையிலான மனதிருப்தியை அளிக்கின்றது. ஆனால், யதார்த்தம் இதற்கான முட்டுக்கட்டையாக இறங்கும்போது கடுமையாக எதிர்க்கப்படுகின்றது. செயற்பாட்டாளர்களுக்கு சிறு வெற்றிகளும் பாரிய உத்வேகத்தைக் கொடுக்கும் அது மட்டுமின்றி

RE/MAX THIPAN RAJ
NAVA LAW
GINI ANNARASA
Financial Service Inc.
AJAX NS DENTAL
COMPUTEK COLLEGE
Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புருஜோத்தமன் தங்கமயில் - மதுரி தமிழ்மாறன்



இப்படியான வெற்றிகள் தொடந்தும் கிடைத்தால் தான் இன்னும் நம்பிக்கையோடு செயற்படுவர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் செயற்பாட்டாளர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளின் போது பெரும் பங்களிப்பினை அளிக்கக் கூடியதாயிருந்தது. இதற்கு பெரும் காரணம் அப்போது இருந்த சூழ்நிலை, சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றிருந்த மஹிந்த அரசாங்கத்தினை தம் வழியில் கொண்டுவர மேற்கு நாடுகள் பிரயோகித்த அஸ்திரமே மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள். இங்கு யாருமே தமிழர் நலனை கருத்தில் கொண்டு செயற்படவில்லை.

இன்று, மேற்கு நாடுகளின் நண்பனாக இலங்கை இருக்கிறது. சூழ்நிலை மாறிவிட்டது, தமிழ்ச் செயற்பாட்டாளர்களின் தேவையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது அவர்களை ஒரு தேக்க நிலையில் தள்ளியுள்ளது.உள்நாட்டிலும்மக்கள் சற்றே கெடுபிடிகள் குறைவான ஒரு வாழ்க்கை முறையிற்கு பழக்கப்பட்டுவிட்டார்கள். இதுவே இன்றைய யதார்த்தம். இது, இதுவரை பெற்ற வெற்றிகளை அழித்து கொண்டு போகிறதோ/பின்னடைவுகளை ஏற்படுத்துகிறதோ என்ற எண்ணத்தை செயற்பாட்டாளர்களிடம் விதைத்து விடுகின்றது.

உதாரணமாக இன்று யாரும் இனப்படுகொலை என்று பேசுவது இல்லை. அப்படி சொல்வோர் கடும் போக்குவாதியாக பார்க்கப்படுவர்.

ஆனால் குறிக்கோள்மயவாதம் மீது நம்பிக்கை கொண்ட ஒருவருக்கு இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான் என்று நிறுவுதல் ஒருகட்டாயமாகஇருக்கும், யதார்த்தம் அதனை 'தற்சமயம்' அனுமதியாது. யதார்த்தம் என்பது தற்சமயம் அரசியல் கைதிகளின் விடுதலை, அரச படைகளின் கைகளின் இருக்கும் காணிகளை விடுவித்தல், போன்ற மனித உரிமை பிரச்சினைகளில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அதிலும், பெரும் வெற்றிகளை பெறவில்லை. யதார்த்தத்தினை ஒரு முகப்பாக வைத்திருப்பதன் ஆபத்தும் இதுவே.

யதார்த்தம் முட்டுக்கட்டையாக வருமிடத்து, யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பது மக்களை மட்டுமல்ல செயற்பாட்டாளர்களையும் தங்கள் குறிக்கோள்களிலிருந்து வழுவ செய்துவிடுமோ என்ற அச்சமே இன்று மேலெழுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வைக்கப்படும் விமர்சனங்களிலும் அதிகமாக காணப்படுவது இந்த அச்சமே.

யதார்த்தம் குறிக்கோள்களுக்கு முட்டுக்கட்டை இடுமிடத்து அதனை உள்ளீர்த்து தங்கள் செயற்பாடுகளை திட்டமிட செயட்பாட்டாளர்களில் பெரும்பாலானோர் தயாராக இல்லை. இது முற்றிலும் குறிக்கோள் மயவாதத்தினை தழுவியதால் யதார்த்தத்தினை பரிசீலிக்க மறுக்கின்ற நிலைமை. உதாரணமாக, சர்வதேச குற்றவியல் விசாரணையைக் கோருவோரினால் அதற்கான சாத்தியப்பாடுகள் என்ன, அது எவ்வாறு யாரின் ஆதரவினால் பெறப்படும் எனக் கூற முடியாது. ஏனென்றால், ஐக்கிய நாடுகளில் உள்ள ஒவ்வொரு நாடும் தன் தனிப்பட்ட அரசியல் நலன்களை கொண்டே எந்த முடிவையும் எடுக்கும். இதனாலேயே சர்வதேச விசாரணை என்பது 'தற்சமயம்' யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட விடயமாகிறது. தனி நாட்டுக் கோரிக்கையும் இவ்வாறானதொரு நிலைமையையே அடைந்துள்ளது.

இவை தற்போதைய சூழ்நிலைகளே, குறிக்கோள் மயவாதம் போலன்றி யதார்த்தம் தொடர்ந்தும் மாற்றமடைகின்ற விடயம். இதனையே குறிக்கோள் மயவாதிகள் கவனத்தில் எடுக்க வேண்டும். யதார்த்தத்தினை ஏற்றுகொள்வதை விடுத்து அதனை உள்ளீர்ப்பதன் மூலம் அடிப்படைக் குறிக்கோளை நோக்கி நகர முடியும் என்று உணர்ந்தால் குறிக்கோள்மயவாதமும் யதார்த்தவாதமும் இணைந்து செயற்படக் கூடிய ஒரு புள்ளியினை ஏற்படுத்த முடியும். இதுவே செயற்பாட்டாளர்களுக்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் தம் காரியங்களை முன்னெடுக்க உத்வேகத்தையும் கொடுக்கும்.

உதாரணமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இதனையே பொறுப்புக்கூறல் தொடர்பான தனது செயற்பாடுகளில் காட்டியுள்ளது, அதாவது மேற்கு நாடுகளும் தம்முடைய புவிசார் அரசியல் நலன்களை முதன்மையாக கொண்டே தமது நடவடிக்கைகளை தீர்மானிக்கின்றன என்பதனை சரியாக புரிந்துக் கொண்டே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு தன்னுடைய மறைமுக ஆதரவை அளித்தது. இது யதார்த்தத்தை உள்ளீர்த்து எடுக்கப்பட்ட முடிவே ஆகும். இதன் மூலம் அந்த தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தலில் தம்மையும் ஒரு பங்காளியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிணைத்துள்ளது. அத்தீர்மானத்தை எதிர்த்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கும்அதுபிரதிநிதித்துவப்படுத்தும் தமிழரின் பங்கும் இல்லாமலேயே தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தல் இருந்திருக்கும். இதுவே யதார்த்தத்தை உள்ளீர்த்து செயற்படுதல் ஆகும்.

தேசிய பிரச்சினையின் (அதாவது வட—கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் உரிமை பிரச்சினைகளின்) தீர்வே குறிக்கோள்மயவாதத்தினை தழுவியோரின் குறிகோளாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் இந்த யதார்த்தத்தினை உள்ளீர்த்து பயணிப்பதால் அந்த குறிகோளினை அடைய முடியும். இதனை உணராது வெறும் குறிக்கோள்மயவாதத்தினால் உந்தப்பட்டு செயற்படுதல் உயர்ந்த இலட்சியமாக கொண்டிருக்கும் குறிக்கோளினை தகர்க்கும் செயலாகவே முடிகிறது. இதில் எந்த செயன்முறை குறிக்கோளினை அடைதல் என்பதை நோக்கி செல்கிறது என்று யோசிக்க வேண்டும்.

இங்கு செயற்பாட்டாளர்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கண்காணிப்பு பொறிமுறைகள் (UN Human Rights Monitoring Mechanisms), சிறப்பு நடைமுறைகள் (UN Special Procedures), மனித உரிமைகள் பேரவையை என்பதனை ஏன் தொடர்ந்தும் முக்கியத்துவத்துடன் அணுகவேண்டும் என்றால், அங்கு அவர்கள் செய்யும் விவாதங்களே இலங்கை அரசாங்கத்தின் மீதான தொடர்ந்தும் அழுத்தங்களை வைத்திருக்க உதவும். ஒரு வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முதற்கொண்டு இலங்கை தொடர்பாக விவாதிக்கப்படுதலே குறிப்பிட்டளவு வெற்றி என்பதனையும் மனதில் நிறுத்தி இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமாக சர்வதேசம் தொடர்ந்தும் இலங்கை மீது ஒரு கண் வைத்துக் கொண்டிருப்பதனால், இலங்கை அரசாங்கமும் அவதானிப்புடனேயே செயற்படவேண்டியுள்ளது, தன்னுடைய நற்பெயரை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்திலுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினை போலன்றி தற்போது இருக்கும் மேற்கு நாடுகளிடம் நட்பாக இருக்கும் புதிய மைத்திரி— ரணில் அரசாங்கத்திற்கு இந்த தேவை மிக அதிகம். இந்த யதார்த்தம் கூட செயற்பாட்டாளர்களிற்கு உத்வேகம் அளிக்கவல்லது தான். இதனை, மதியாது தொடர்ந்து யதார்த்தம் நீங்கிய குறிக்கோள்மயவாதம் மூலம் இதை அணுகினால் அதாவது சர்வதேச விசாரணை தான் வேண்டும், தனி நாடு வேண்டும் (தனி நாட்டுக்கான சர்வசன வாக்கெடுப்பு கோரிக்கை) என்ற கோசங்களை எழுப்புதல், தற்போதைய அரசாங்கமும் மஹிந்த ஆட்சியில் இருந்த மாதிரியான ஒரு நேரெதிர் விளைவினை பதிலாக கொடுக்க எத்தனிப்பதில் முடிவடையும். இதனால், அதிகம் பாதிக்கப்படப் போவது தாயகத்தில் ஏற்கனவே அல்லற்படும் மக்களே. இத்தகைய யதார்த்தத்தை புறந்தள்ளிய முடிவுகளை அம்மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவோரினால் ஒரு போதும் எடுக்க முடியாது. அது மக்களை இன்னும் கஷ்டத்தில் தள்ளும் ஒரு செயற்பாடாகும். இதனை செயற்பாட்டாளர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே இங்கு வெளிபடுத்தப்படும் அவா.

செயற்பாட்டு தளம் மந்தமான நிலையில் இருப்பது மனித உரிமைகள் விடயங்களில் ஆபத்தானது. உரிமைகளைப் பெறுதல் தொடர்பில் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருத்தல் கட்டாயம், குறிக்கோள்மயவாதத்தின்

RE/MAX THIPAN RAJ
NAVA•LAW
THE GUARDIAN
INFORCE LIFE
NS DENTAL
COMPUTEK COLLEGE
Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாற்பட்டு விடயங்களை அணுகினாலும், அதனுள்ளும் யதார்த்தத்தினை உள்ளீர்த்து மாறிவரும் சூழ்நிலைகளை சரியாக அனுமானித்து செயற்பாட்டு உத்திகளை அதற்கேற்ப தீட்டவேண்டும். இதுவே இன்றைய கட்டயாயமாகிறது. மாறாக குறிக்கோள்மயவாதத்தினை முற்றாக தழுவியதன் பயனாக அறியாமலேனும் நம் எதிரிகள் என்று வரிந்துக்கொண்ட பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு தமிழர் விரோத போக்கினை பரப்புவதற்கு ஆதரவுகொடுப்பதாக இருந்துவிடக்கூடாது. அவ்வறியாமை கடைசியில் தாயகத்தில் உள்ள மக்களையே பாதிக்கும் என்பதை உணர்ந்து செயற்படுதலே அவசியமானது, இதனை யதார்த்தத்தினை உள்ளீர்த்து செயற்படுதல் மூலம் சரி செய்யலாம்.

இந்த இடத்தில், தமிழர் தரப்புக்குள் காணப்படும் அரசியல் நோக்கு, புலமை மற்றும் அணுகுமுறைகள் தொடர்பில் எழுந்திருக்கின்ற முரண்பாடுகளை கவனித்தால் அவற்றின் முட்டுப்பாடுகளை உணர்ந்து கொள்ள முடியும். அதாவது, 2009 இறுதி மோதல்களுக்குப் பின்னராக தாயகத்திலுள்ள மக்களின் ஏமாற்றம் மற்றும் நம்பிக்கையிழப்பு என்பன நம்பிக்கைகளின் பக்கம் நகருதலுக்கான அணுகுமுறைகளின் சார்பில் யதார்த்தப் போக்கு அதிகம் எழுந்ததாக கொள்ளப்பட்டது. குறிப்பாக, தேர்தல் அரசியலை மக்கள் எதிர்கொண்ட விதம் தொடர்பில் குறிக்கோள்மயவாதிகளினால் கடும் அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டது. தேர்தல்களை, தற்காலிக (ஜனநாயக) இடைவெளிகளை கருத்தில் கொண்டு எதிர்கொள்ளாமல் எதிர்காலத்துக்கான தீர்க்கமான நோக்கோடு எதிர்கொள்ளவில்லை என்பது பெரும் குற்றச்சாட்டாக மாறியது. அதாவது, ஆட்சி மாற்றங்களுக்கு வாக்களித்தமை என்பது எந்தவித அரசியல் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டவை அல்ல என்பதே அது.

தாயக மக்கள் தேர்தல் அரசியலை யதார்த்தத்தின் போக்கில் அணுகினார்கள் என்று கூறப்பட்டாலும், அதற்குள், வெளித்தெரியாமல் பெருமளவாக குறிக்கோள்மயவாதத்தின் கூறுகளே இருந்தன. இன்னமும் இருக்கின்றன. அதுதான், திரும்பத் திரும்ப தேர்தல் வாக்களிப்பின் போது ஓரணியில் மக்கள் திரள்வதற்கான காரணமாகவும் இருந்தன. ஆனால், அரசியல் உரையாடல்களின் போது கடும்தொனியிலான கருத்துப் பகிர்வை மக்கள் வெளிப்படுத்துவதிலிருந்து தற்காலிகமாக நகர்ந்திருக்கின்றார்கள் என்பது உண்மை. அதனையே,குறிக்கோள்மயவாதிகள் படுமோசமான யதார்த்தமாக கருதிக் கொள்கின்றார்கள். இதனை இருதளங்களில் இயங்கும் சாதாரண மக்களின் நிலைப்பாடுகளின் போக்கில் உணர்ந்து கொள்ள முடியும்.

அதாவது, தாயகத்திலுள்ள மக்களின் அரசியல் முடிவுகள் தேர்தல் வாக்களிப்பைத் தாண்டி வெளிவருவது குறைவு. காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் தொடர்பிலான போராட்டங்கள், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும்போராட்டங்கள் மற்றும் காணி மீட்புப் போராட்டங்கள் என்கிற அளவினைத் தாண்டி தமிழ் மக்கள் இப்போது பெருவரியாக ஒருங்கிணைக்கப்பட்ட போராட்டக்களங்களில் இணைவதில்லை. அது, ஒப்புநோக்கப்படும் போது, யதார்த்தத்தின் போக்கில் தமிழ் மக்கள் தங்களின் போராட்ட வழிமுறைகளை தொலைத்துவிட்டதான கருது நிலையை உருவாக்கிவிட்டிருக்கின்றது.

ஆனால், புலம்பெயர்ந்துள்ள மக்கள் இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் நீதி கோரி வீதிகளில் இறங்கினார்கள். இன்னமும், அதற்கான முனைப்புக்களில் குறிப்பிட்டளவில் பங்களிக்கத் தயாராக இருக்கின்றார்கள். அத்தோடு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் தினம் உள்ளிட்ட விடயங்களில் பேரணியாக ஒருங்கிணைகின்றார்கள். அதனை அவர்கள் பெரும் ஓர்மத்தின் போக்கிலும் கொள்கின்றார்கள். அப்படியான ஒருங்கிணைவொன்றை தாயக சூழல் கடந்த காலத்தில் அனுமதிக்கவில்லை. அதன்போக்கில் தம்மை தமக்குள் சுருக்கிக் கொண்டது போல தாயக மக்கள் உணர்ந்து கொண்டிருந்தது உண்மை. அந்த நிலையை, சில யதார்த்த அணுகுமுறைகளின் சார்பில் வெற்றிகொள்ள வேண்டியதன் அவசியமும், அழுத்தமும்கூட அவர்கள் மீது இறக்கி வைக்கப்பட்டது. அதன்போக்கிலேயே, குறிக்கோள்மயவாதிகளின் வேண்டுகோள்களை மீறி தேர்தல்களில் ஒருங்கிணைந்து ஆட்சி மாற்றக் கோரிக்கைகளுக்கு வாக்களித்தனர். அதனை, தமது குறிக்கோள்களை நோக்கிய நகர்வுகளை மெல்ல சீர் செய்வதற்கானபோக்கானதுஎன்றும் கொள்ளலாம். அவை, மீளவும் போராட்ட அணுகுமுறைகளையும், ஒருங்கிணைவையும் நோக்கி நகர்வதன் போக்கிலான எண்ணப்பாடுமாகும்.

இதனை இன்னொரு வடிவிலும் சொல்லாம். உயிர் வலியிருக்கும் மக்கள் தம்மை தக்க வைத்துக் கொள்வதினூடே தமது உரிமைகளுக்கான போராட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பது மாதிரியானது. அவ்வாறான நிலையில், உயிரினைத் தக்கவைத்துக் கொள்வதற்கான முனைப்புக்கள் பிரதானமானவை. அதுவே, மீண்டும் எழுந்து உரிமைகளுக்கான கோரிக்கையின் பக்கம் நகர வைக்கும். ஆக, யதார்த்தம் என்பது குறிக்கோள்மயவாதிகளின் எண்ணப்பாடுகளை முழுமையாக நீக்கம் செய்வது அல்ல. குறிப்பாக, தாயகத்திலுள்ள மக்கள் அப்படியான நிலைப்பாட்டின் போக்கில் இல்லை. மாறாக, உரிமைகளைக் கோருவதற்காக உயிர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான தருணங்களை கையாண்டிருக்கின்றார்கள். அதுவே, யதார்த்தம். அந்த யதார்த்தம் குறிக்கோள்களைப் புறந்தள்ளியவை அல்ல. அவை, குறிக்கோள்களை தக்கவைப்பதற்கானவை.

இந்த இடத்தில் இன்னொரு விடயம் துருத்திக் கொண்டு நிற்கிறது. அதாவது, யதார்த்தம் என்கிற முன்வைப்போடு எம்முடைய அரசியல் இருப்பு நிலையை ஒட்டுமொத்தமாக விட்டுக்கொடுக்கும் மனநிலையொன்று சிறு தரப்பினரிடம் மேலெழுந்து வருகின்றது என்பதை மறுப்பதற்கு இல்லை. அந்தத் தரப்பு அரசியல் உரையாடல்களின் போது வெளிப்படுத்தும் கருத்துக்களும், வியாக்கியானங்களும் பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆள்மன அரசியல் வெளிப்பாட்டின் அல்லது குறிக்கோளின் பக்கத்திலிருந்து வருபவை அல்ல. அதனை, கருத்தில் கொள்ள வேண்டியது குறிக்கோள்மயவாதிகள், செயற்பாட்டாளர்கள், அரசியல் நோக்கர்கள் உள்ளிட்டவர்களின் கடமையாகும். அதாவது, குறிக்கோள் எனும் நிலைப்பாட்டிலிருந்து அரசியல் நகர்வுகள்— சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளாமல் முற்றுமுழுதாக மக்களின் எண்ணங்களைப் புறக்கணிக்கும் சிறு தரப்பினர் போன்றதொரு இன்னொரு தரப்பே அது. ஆக, தமிழ் மக்களின் அரசியல் ‘குறிக்கோள்களை’ புறந்தள்ளிய யதார்த்த அரசியலுக்குள் செல்லவில்லை. மாறாக, குறிக்கோள்களை பிரதானமாகக் கொண்டு யதார்த்த களத்தினை எதிர்கொண்டு செல்கின்றது! ●

வீடென்ன உலகத்தையே வாங்கலாம்!
PURCHASE - REFINANCE - EQUITY TAKE OUT
Suganthan Thavarajasingam
Mortgage Agent Lic # M08010501
CALL 416.859.2564
Office: 416.283.2377 x 116
35 Grand Marshall Dr, Toronto ON M1B 5W9 FSCO #10473
OBSIDIAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு இது விசனமாகவே இருக்கும். ஆனால் நான் மதிக்கும் மனிதருள் ரொறொண்டோவின் முன்னாள்நகரபிதாறொப்போட்டும் ஒருவர். இந்த வாரம் அவரது உடல் ரொரொண்டோ மாநகரசபைக் கட்டிடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

நான் அவர்மீது வைத்திருக்கும் மதிப்பிக்குக் காரணம் தன் மனதில் பட்டதை ஒளிவுமறைவின்றிக் கூறுவது — அது அப்பட்டமான பொய் என்று தெரிந்தும்கூட. அது ஒரு குழந்தைக்கான குணம். ஒரு குழந்தையின் குழப்படிகளைக் கொண்ட ஒரு முழுமனிதர். அதனால்தான் ரொறோண்டோ பெரும்பாக மக்கள் மட்டுமல்ல உலகத்தின் கோடிகளில் இருக்கும்

ரொறொண்டோவின் 'குழந்தையால்' நகருக்கு ஏற்பட்ட நன்மைகள் அதிகமென்று நம்புபவர்களே அதிகம்.

றொப் போட்டின் வீழ்ச்சிக்கு அவரது எதிரிகள் காரணமல்ல. அவரைச் சூழ்ந்திருந்த, அவரால் பயன்பெற்ற, அவரை உசுப்பேத்திப் பின்னர் கைவிட்டு முதுகில் குத்திய நண்பர்கள்தான் காரணம். நண்பர்களுக்காக எதையும் செய்தத் துணிந்த வகையினரில் ஒருவர்தான் போட். அவரைப் போட்டுக் கொடுத்த ப்ரூட்டஸ்கள் அவரது சகபாடிகள்தான்.

றொப் போட்டின் குற்றம் குறைகள் திடீரென்று அறியப்பட்டவையல்ல. அவற்றை அரசியல்கவசங்கள் (political correctness) அவற்றை மறைத்து விடுவதுண்டு. கவசம் போடாமல் இருந்ததுதான் றொப்போட்டின் பிரச்சினை. தன்வார்த்தைகள் எவரையும் புண்படுத்துமா என்பதை யோசியாது மனதில்பட்டதை அப்படியே சொல்லும் பழக்கம் அவருடையது. பெண்களையும் மாற்று நிறத்தவர்களையும் தூற்றுபவர். ஆனால் அவரது இழப்பின் பின்னர் மரியாதை செலுத்துவதற்கு முண்டியடித்துக்கொள்பவர்களில் இந்த இரண்டு சாராருமே முன்னணியில் நிற்கிறார்கள். காரணம் யதார்த்தம்.

நாம் யாரும் சொல்லாத விடயங்களை அவர் சொல்ல வாழ்வுக்கான ஏக்கம் மிகுந்தவராகக் காணப்பட்டதாகச் சொன்னார்கள். தன் மனைவி குழந்தைகளோடு அதிக நேரத்தைச் செலவிடவேண்டுமென அவர் கூறியதாகக் கேள்வி.

றொப் போட்டின் பதவிக்காலத்தில் அவரது சகோதரர் டக்போர்ட் தனது தம்பியை நிழல்போல் தொடர்வார். இந்த இரண்டு சகோதரர்களுக்கும் இடையில்இருந்தபாசம் அதிசயமாக விருந்தது. மரணத்துக்குப் பின் தாயாரின் கூற்றிலிருந்தும் ஒரு உண்மை புலப்பட்டது. வீட்டிலுள்ள குழப்படியான கடைக்குட்டியின்மீது எவ்வளவு பாசத்தைப் பொழிவோமோ அதுவேதான் போட் குடும்பத்திலும்.




மக்களுக்கும் அவரது இழப்பு கவலையைத் தருகிறது.

அவர் ஒரு திமிர் பிடித்தவர், குடிகாரர், போதைவஸ்து பாவிப்பவர், கேடிகளோடு சகவாசம் வைத்திருப்பவர் என்பனவெல்லாம் ஊடகங்களால் ஊதப்பட்டன. பலரும் அதை நம்பினார்கள். அதில் சிலவற்றில் உண்மை இருப்பதும் மக்களுக்குத் தெரிந்திருந்தது. அப்படியிருந்தும் மக்கள் அவருக்காகக் கண்ணீர்விடுகிறார்கள் என்றால்?

இன்றய உலகில் எந்தவொரு குடும்பத்திலுமோ அல்லது அவர்களது உறவினர்களின் குடும்பங்களிலுமோ இப்படியொரு 'குழ்ந்தை' இல்லாமல் இருக்க வாய்ப்பில்லை. அக்குழந்தையால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போதுதான் அக்குழந்தையின் குற்றம் கவனத்தில் எடுக்கப்படுகிறது.

ஊடகங்களுக்கு எடுத்துச் சென்றவர்கள் பலரும் அவரைவிட அதிகம் கறைபடிந்தவர்கள். நாற்சந்தியில் அவரது மானம் தூக்கிலிடப்பட்டபோதும் மக்கள் அதைக் கண்டுகொள்ளவுமில்லை, கைகொட்டிச் சிரிக்கவுமில்லை. மாறாக அவரைத் தம் குழந்தைகளில் ஒருவராகவே தத்தெடுத்துக் கொண்டனர்.

அவரது முகத்தில் ஒரு குழந்தையின் களையே எப்போதும் தெரியும். எழுதுகோல்களைத் துப்பாக்கியாகப் பாவிக்கும் உடகங்களை அவர் மதித்ததில்லை. ஆனால் அவர்களை எதிர் கொள்ளாது அவர் போவதுமில்லை. ஊடகங்களை நையாண்டி செய்யும் அளவுக்குத் தைரியமுள்ள ஒரு அரசியல்வாதி அவர்.

அவர்மீது காட்டப்பட்ட அழுக்குகள் அவரில் குறைகாணும் எல்லோரிடமும் இருந்திருக்கவேண்டும். அவர்களது வில்லை. ஓய்வு நேரங்களில் பணம் ஏதும் அறவிடாமல் வறிய குழந்தைகளுக்கு விளையாட்டுக் கற்றுக்கொடுத்தார். குடியான வர்களில் எந்த ஒருவர் எந்த நேரத்தில் அழைத்தாலும் அவர்களது குறைகளை நிவர்த்தி செய்தார். இதுவெல்லாம் சபைக்கு வந்தது இப்போதுதான்.

இது சமூக உறவாடல் தளங்களின் காலம். செய்திகளைத் திரிபுபடுத்தித்தம் சுயதிட்டங்களை முன்னெடுக்கும் அரசியல்வாதிகள் ஒதுக்கப்பட்டு உண்மையான 'மக்கள் தீர்ப்புகள்' வெளிப்படும்காலம். றொப் போட் ஒரு சாதாரண மனிதர் என்பதை அவர்கள் கண்டு கொண்டுவிட்டார்கள். தீர்ப்பும் வழங்கிவிட்டார்கள். ஆனால் அததீர்ப்பைப் பெற்றுக்கொள்ள றொப்போட் உயிரோடுஇல்லை.

போதைச் சிகிச்சைபெற்று மீண்டபோது றொப்போட் தனது 'திருந்திய' இரண்டாவது அவர்கள் நம்முடையதைப்போல ஒரு சாதாரண குடும்பம்தான். அவர் நகர பிதாவாகியதுதான் அசாதாரணம். சாதாராண மக்கள்விட்டு விடுதலையாகி விட்டதற்கான அறிகுறியே அவர் நகரபிதாவாகியது. அதுவே அவர் அடுத்த சந்ததிக்கு விட்டுப்போகும் குறிகாட்டி.

றொப்போட்டின்வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடியது பல. அவர் தன மனத்தைப் பேசியவர். நடிக்கவில்லை. அவர்பணக்காரராயினும் ஒரு சாதாரண மனிதனாகவே வாழ்ந்தவர். குறைகளுடையா தாயினும் 'அதுஎன்குழந்தை' எனமுத்தம் பொழியும் ஒருதாயின் உணர்வுடனே மக்கள் அவரை நேசித்தனர். அதைத் தெரிந்துகொண்டு மனநிறைவுடன்மரணத்தை எதிர்கொண்டதே அவரது பலம்.

So long Rob! ●

RE/MAX THIPAN RAJ · NAVA LAW · THE GUARDIANS GINI · COMPUTEK COLLEGE · Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



President & C.E.O.
**Raj Nadarajah**

# Mega Financial Group

## ANNUAL AWARD CEREMONY 2016

MARKHAM CONVENTION CENTRE
27TH FEBURARY 2016



Director
**Abiramie Shanmuganathan**

## MEGA TOP WINNERS - 2015

**Gold Winner**




Jay Nadarajah

**Silver Winner**



Guru Thevarajan

**Bronze Winner**



Sharmila Neleishkumar

**RESP Gold Winner**



Santhila Ravichandran

# MEGA TOP 10 PRODUCERS




**Top Producer - Industrial Alliance**



Jay Nadarajah

**Top Producer - La Capitale**



Poonam Batth

**Top Producer - Desjardin**



Vasanthakumaran Markandu

**Top Producer - Investments**



Trevor Chew

**Top Producer - Assumption Life**



Christopher Dhanaraj

**2nd Top Producer - Industrial Alliance**



Guru Thevarajan

**2nd Top Producer - La Capitale**



Murugiah Gandhiram

**2nd Top Produer - Desjardin**



Steve Dwyer

**2nd Top Producer- Assumption Life**



Jay Nadarajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mega Financial Group

## ANNUAL AWARD CEREMONY 2016



## Congratulations to all the AWARD RECIPIENTS


Philip Antony


Vany Jeganmohan


Santhan Nadarajah


Celina Regalado


Marites Garcia


Gowry Yogeswaran


Maribeth Restua


Mohan Subramaniam


Racquel Josol


Ravi Ponnudurai


Ravi Supramaniam


Roy Wignarajah


Sathya Sharma


Selvakumaran Nadarajah


Siva Panchalingam


Thiru Nagarajah


Thiruvatharan Subramaniam


Rajeswaran Rajathurai


Selvi John


Vasi Simaak

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகுருவிக்காக ராகவி

# 2018இல் ஆட்சிக் கனவில் முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி

ஒன்ராரியோ மாகாணத்தில் ஆளும் மாகாண லிபரல் அரசாங்கத்தின் செல்வாக்கு சரிகின்றது. இறுதியாக நடைபெற்ற Whitby-Oshawa தொகுதியின் இடைத் தேர்தலில் மாகாணத்தின் முதல்வர் தேர்தல் பிரச்சாரத்திற்கு கனடிய பிரதமரை அழைத்தும் வாக்கு வங்கியில் அது எந்தவிதமான மாற்றங்களையும் மேற்கொள்ளவில்லை. மறுபக்கம் முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி மெதுவாக தமது இழந்த செல்வாக்கை மீட்கின்றனர். அல்லது மீட்க முனைகின்றனர். முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி தமது கட்சியின் தலைவராக May மாதம் 2015ஆம் ஆண்டு Patrick Brown¬ப் தேர்வு செய்த ஒன்பது மாதங்களுக்குப் பின்னர், ஒட்டாவாவில் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் வருடாந்த கட்சி மாநாட்டை நடத்தியிருந்தது



2018 தேர்தலை கருத்தில் கொண்டு இந்த கட்சி மாநாடு வடிவமைக்கப்பட்டிருந்தது. ஒன்ராரியோ மாகாணத்தில் ஒரு காலகட்டத்தில் பெரும் சக்தியாக விளங்கிய முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சியின் பலத்தை மீண்டும் புதிப்பிக்க துடிக்கின்றது கட்சித் தலைமை என்பதை இந்த மாநாடு சுட்டிக்காட்டியது. தேர்தலுக் கு முன்னதாக கால எல்லைக்குள் கட்சியின் கொள்கைகளை சரிசெய்யவும், உறுப்பினர் அடிப்படையை புதுப்பிக்கவும் மற்றும் பெரிதாக அறியப்படாத கட்சியின் புதிய தலைவரை ஒன்ராரியோ வாக்காளர்களுக்கு அறிமுகம் செய்யவும் கட்சியின் தலைமை உறுதிபூண்டிருப்பதை இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் பகிர்ந்துகொண்ட கருத்துக்களில் இருந்து அறியமுடிந்தது.



ஆனாலும் அவை அனைத்திற்கும் முன்னர் முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி கவனம் செலுத்த வேண்டிய சில முக்கிய விடயங்கள் உள்ளன. ஒரு புதிய கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சியின் ஒட்டாவா மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது. Patrick Brown தன்னை ஒரு பாகுபாடற்ற அரசியல்வாதி என காட்டிக்கொள்ளவும் அனைத்துக் கட்சிகளிடம் இருந்தும் நல்ல விடயங்களை ஏற்றுக்கொள்ளவும் தயாராகவுள்ளதையும் இந்த மாநாட்டில் அவர் ஆற்றிய உரை உறுதிப்படுத்துகின்றது. கட்சியின் அடிமட்ட விடயங்கள் சார்ந்த முக்கிய முடிவுகளை முன்கூட்டியே எடுக்க மாட்டேன் என அவர் தெரிவித்திருப்பது இதற்கு ஒரு தகுந்த உதாரணமாகும்.

தனது தலைமைத்துவ பிரச்சாரத்தின் வெற்றிக்கான வழிமுறை 2018ஆம் ஆண்டின் மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஒரு துருப்புச்சீட்டாக இருக்கும் என Patrick Brown நம்புகின்றார். முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சிக்கான தலைமைத்துவப் போட்டியின்போது பெருமளவிலான புதிய உறுப்பினர்களை கட்சியில் இணைத்திருந்தார் Patrick Brown. இவற்றில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் தமிழர்கள் என்பது பலரும் அறிந்த உண்மையே. ஆனால் இந்த உத்தியை பல மில்லியன் மக்கள் வாக்களிக்கும் தேர்தலில் செயல்படுத்துவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பதுதான் யதார்த்தம்.



புதிய நகர்வொன்றை முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி முயல்கின்றது. புலம்பெயர் மக்களின் வாக்குக்களில் குறிவைப்பது அந்த புதிய நகர்வாகும். ஒரு காலத்தில் தமிழர்களின் உடனடித் தெரிவாக இருந்த லிபரல் கட்சி மாகாண ரீதியில் தன்னை தமிழர்களிடமிருந்து அந்நியப்படுத்திவரும் நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்ப முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி முனைகின்றது. நடைபெற்று முடிந்த கட்சி மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் பெருமளவில் தமிழர்களும் இடம்பிடித்திருந்தனர். அடுத்த மாகாணசபைத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவில் தமிழர்களுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றில் வெற்றிபெறக்கூடிய தொகுதிகள் பலவும் அடங்கும் என்பதுதான் உதிரித் தகவல்.

கட்சியின் பலத்தை அதிகரித்து 100,000 புதிய உறுப்பினர்கள் வரை கட்சியில் இணைப்பேன் என உறுதியளித்துள்ளார் Patrick Brown. ஆனால் அவ்வளவு எண்ணிக்கையிலான உறுப்பினர்களை கட்சியில் இணைப்பது மிகக் கடினமான செயல் என்பதை கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர். இதுதவிர முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சியை கடன்சுமை ஆட்டிக் கொண்டிருக்கின்றது. கடந்த மாகாணசபைத் தேர்தல் செலவுகளில் 5 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகை கடனில் உள்ளதால் கட்சியின் நிதி பலம் மிகச் சவாலான ஒன்றாகவே உள்ளது.

கடன்சுமை தவிர முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி எதிர்கொள்ளும் மற்றுமொரு சவால் கட்சியினர் இடையேயான உட்கட்சிபூசல். இதற்கு ஓர் உதாரணம் Nepean-Carleton தொகுதியின் மாகாணசபை உறுப்பினர் Lisa MacLeod மற்றும் Carleton-Mississippi Mills தொகுதியில் மாகாணசபை உறுப்பினர் Jack MacLaren ஆகியோருக்கு இடையேயான பனிப் போர். இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பதில் Patrick Brown தடுமாறுவது பல்வேறு மட்டங்களிலும் நன்கு வெளிச்சமிட்டு காட்டப்படுகின்றது. இந்த உட்கட்சி பூசல் குறித்த கட்சியின் கருத்து, உட்கட்சி ஜனநாயகத்தை Patrick Brown ஆதரிக்கிறார் என்பதே ஆகும்.

13மில்லியன் ஒன்ராரியோ மக்களை ஆட்சி செய்யவேண்டுமெனில் முற்போக்கு கென்சர்வேட்டிவ் கட்சி முதலில் தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தங்கள் கடன் சுமையை குறைக்க வேண்டும். அதன் பின்னரே 2018இல் ஆட்சிக் கனவு காணலாம்.

ஆனாலும் 2018 வெகு தொலைவில்லை இல்லை. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


THIPAN RAJ · NAVA LAW · GINI · DIFORCE · NS DENTAL · COMPUTEK COLLEGE · HARRY

## கனடாவின் வரலாறு - 2

குரு அரவிந்தன்

# சீனத் தொழிலாளரின் அவலம்





சென்ற வாரம் கனடாவின் பழங்குடி மக்கள் பற்றியும், வட அமெரிக்காவிற்கு ஐரோப்பியரின் வருகை பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். கனடாவின் வரலாற்றில் ஆதிகாலத்தில் வந்து குடியேறிய முதற்குடி மக்களின் வரலாறும், அதைத் தொடர்ந்து ஐரோப்பியரின் வருகையும் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்களின் வருகையே கனடாவில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்திக் கனடிய சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறது.

கனடாவின் வரலாற்றில் முக்கியமான போராகவும் இறுதிப் போராகவும் 'பட்டில் ஒவ் த பிளென்ஸ் ஒவ் அப்ரகாம்' ( Battle of the Plains of Abraham) இடம் பெற்றிருந்தது. இந்தப் போர்தான் பிரித்தானியரின் ஆதிக்கம் கனடாவில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்குக் காரணமாக இருந்தது. இந்தப் போரில் பிரித்தானிய படைகளின் திடீர் தாக்குதலால் நிலை குலைந்த பிரெஞ்சுப்படைகள் பிரித்தானிய படைகளிடம் சரணடைந்திருந்தன. வடஅமெரிக்காவின் மத்திய பகுதியில் இருந்த பிரெஞ்சுக் குடியேற்றங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக 1759 இல் நடந்த இந்தப் போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றதன் மூலம் அதை நிறைவேற்றினர். இதனால் வடஅமெரிக்காவில் இருந்த பிரெஞ்சுக் குடியேற்றங்கள் முழுவதும் பிரித்தானியரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. குடியேற்றங்கள் பறிபோனதால் பிரான்சின் வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டது. 1763 ஆம் ஆண்டு பிரான்சுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நியூபவுன்லான்ட் பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை மட்டும் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது.

### கனேடிய சமஷ்டரசு உருவாக்கம்

வட அமெரிக்காவின் குடியேற்றத்திட்டங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பிரித்தானியர் அவற்றை ஒன்றாக இணைத்து 'கனடா' என்னும் பெயரில் ஒரு நாடாக பிரகடனப்படுத்த முற்பட்டனர். இதன் மூலம் பிரித்தானியாவின் குடியிருப்புகளாக இருந்த ஒன்ராறியோ, கியூபெக், நியூ பிரன்ஸ்விக், நோவோ ஸ்கோஷியா ஆகியன பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்திற்கு (British North American Act 1867) அமைய கனேடிய கூட்டரசாக உருவானது. கனடாவின் பிற மாகாணங்கள் முதலில் இந்தக் கூட்டரசில் சேரவில்லை. இதன் பின்னர் ஒவ்வொன்றாகக் கூட்டரசில் இடம் பெற்றன. கூட்டரசில் சேராமல் இறுதிவரை காத்திருந்த நியூபவுண்லண்ட் 1949 ஆண்டு கனடாவின் கூட்டரசுடன் இணைந்து கொண்டது. இதனால் கனடா பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சி நிலப்பகுதிகளையும் கொண்ட கூட்டமைப்பு நாடாக உருவாகியது.

### அவையாவன:

அல்பேட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, மனிற்ரோபா, நியூ பிறவுண்ஸ்விக், நியூபவுண்லான்ட், நோவாஸ்கோசியா, ஒன்ராறியோ, பிறின்ஸ் எட்வேட் ஐலண்ட், கியூபெக், சக்கச்சுவான் போன்ற மாகாணங்களையும், நோர்த்வெஸ்ற் ரெரற்ரரி, நுனாவுட், யுகோன் ஆகிய ஆட்சி நிலப்பரப்புக்களையும் கொண்டதாகும். இப்போது கனடாவின் எல்லைகளாக, வடக்கே வட முனையும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும், தெற்கே அமெரிக்க ஒன்றியமும், மேற்கே பசுபிக் பெருங்கடலும், அலாஸ்கா மாநிலமும் எல்லைகளாக அமைந்திருக்கின்றன.

கனடா தினம் என்பது கனடாவின் தேசிய தினமாகும். இத் தினத்தைத் தொடக்க காலத்தில் 'டொமினியன் தினம்' என அழைத்தனர். 1868 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி கனடாவின் முதலாவது பிறந்த தினம் கொண்டாடப் பட்டது. 1982 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி 'கனடா தினம்' என சட்ட பூர்வமாக இத்தினம் மாற்றப்பட்டது. கனடாவின் 'பிறந்த தினம்' எனவும் இத்தினத்தை அழைப்பதுண்டு. 'ஒட்டாவா' கனடாவின் தலைநகரம் ஆகும். ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டு முக்கியமான மொழிகளும் கனடாவின் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. 1867 ஆம் ஆண்டே அரசியல் சட்ட அமைப்பு கொண்ட ஒரு நவீன கூட்டாட்சி நாடாகக் கனடா உருவானது.

### பல்நாட்டவர் வருகை

கனடாவின் முதற்குடி மக்களைத் தொடர்ந்து, பிரெஞ்சு, ஆங்கிலேயக் குடிவரவாளர்களாலும் கனடா நாடு உருவாக்கப்பட்டது. கனடா கூட்டமைப்பாகும் போது சில ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப் பட்டன. இந்த ஒப்பந்தங்களின்படி கனடாவை இணைக்கும் ஒரு தொடருந்துப் பாதை கட்டவேண்டிய தேவை அப்போது இருந்தது. இதன் காரணமாக 1870களில் தொடருந்து பாதை கட்டமைபில் வேலை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் சீனநாட்டில் இருந்து சுமார் 15,000 சீனர்கள் வரவழைக்கப்பட்டனர். 1885ம் ஆண்டு தொடருந்துப் பாதை போட்டு முடிக்கப்பட்டது. தொடருந்துப்பாதை கட்டமைப்பிற்காக வந்த தொழிலாளர் குறைந்த ஊதியம் காரணமாக மிகவும் கஷ்டப்பட்டனர். அவர்களுக்கு நாள் ஒன்றுக்குக் கிடைத்த ஊதியம் ஒரு டொலர் மட்டுமே! அதுமட்டுமல்ல, ஒப்பந்த அடிப்படையில் வந்த இவர்களுக்குப் போதிய வசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படவில்லை. விபத்துக்களாலும், போதிய மருத்துவ வசதிகள் இல்லாததாலும், தங்குவதற்குச் சரியான இடம் இல்லாததால் கடும் குளிராலும் பாதிக்கப்பட்ட இவர்களில் பலர் இறந்து போயினர். இவர்களைப் போன்ற பலரின் உயிர்த் தியாகத்தால்தான் சிபிஆர் (CPR) தொடருந்துப் பாதை உருவாக்கப்பட்டது என்பது கனடிய சரித்திரத்தில் மறக்கமுடியாத முக்கியமான நிகழ்வாகும்.

அதன் பின்பு சீனர்களின் வருகை கனடாவிற்குள் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்கான உடன்படிக்கை 'Chinese Exclusion Act' 1923 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. சீனர்களைப் போவே கறுப்பின மக்களும் வெவ்வேறு காலப்பகுதியில் கனடாவிற்கு வந்து குடியேறினார்கள். தொடக்கத்திலேயே அவர்கள் பிரெஞ்சு மக்களுடன் அவர்களின் அடிமைகளாகவே கனடாவுக்கு வந்தனர். 1793 ஆண்டில் மேல்கனடாவில் அடிமைகளுக்கு விடுதலை கிடைத்தைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்த பல கறுப்பின மக்கள் சுதந்திரமான வாழ்வைத் தேடிக் கனடாவுக்கு வந்தனர். இவர்களைப் போலவே காலத்திற்குக் காலம் பல்வேறு நாடுகளில் இருந்து பல்லின மக்களைக் கனடா உள்வாங்கியது. உள்நாட்டு யுத்தம் காரணமாக ஈழத்தமிழர்கள் 1980 களில் புலம் பெயர்ந்த போது அவர்களையும் கனடா தாராள மனதுடன் உள்வாங்கிக் கொண்டது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா மூர்த்தி எழுதும்

# 'இகுருவி ஐயாவும் நானும்'

'இனியென்ன கொஞ்ச நாளைக்குப் பொழுது நல்லாப் போகப்போகுது..." என்றுகொண்டு வந்தார் இகுருவி ஐயா.

'ஓம் ஐயா... ரூஜ்ரிவர் எம்பிபி மிஸ்டர் பாஸ்பால்கிரூன் தன்ரை பதவியை ராஜினாமா பண்ணி எங்கட ஆக்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியைக் குடுத்திட்டார். காலியான இடத்தில போட்டி போட எங்கட ஆக்கள்மும்முரமாக அடிபடுகினம்.. அதைத்தானே சொல்லுறியள்.."என்றேன் நான் சிரித்துக் கொண்டே.

'நிறையப்பேர் போட்டி போடுற ஆசையோட இருக்கினமெண்டாலும் ஒரு கட்சி ஒரேயொரு ஆளைத்தான் எலக்சனில நிக்க வைக்கும் எண்டபடியால ரூஜ்ரிவரில மும்முனையில ஒரு தமிழ்ச்சண்டை நடக்கலாம் ஆனால் ஆர் ஆர் களத்தில குதிக்கினம் எண்டது கட்சியளின்ரை முடிவாத்தான் இருக்கும்." என்றார்.

'ஓம்.. ஓம்...இனி இனி கன முசுப்பாத்திகளைக் காணலாம்... கட்சிக் கட்டுப்பாடுகள் ஒருபக்கம் இருக்க அதுக்கும் மேலபோய் தான்தான் இந்தத் தொகுதியில போட்டி போடச்சரியான ஆள் எண்டு சொல்லி தன்னையே தெரிவு செய்யக் கோரிநொமினேசனுக்கு ரகசியமா கட்சியிட்ட விண்ணப்பம் கொடுக்கிற விளையாட்டுக்கள் ஒரு பக்கம் இருக்கப்போகுது... தனக்குப் பிடிக்காத ஆள் போட்டி போட்டா இழுத்து அவரை விழுத்த முதுகுக்குப் பின்னால நடக்கிற கழுத்தறுப்புகள் இன்னொரு பக்கத்தில இருக்கும்... நான்தான் கிங்மேக்கர் எண்டு காட்டுறதுக்கு ஒரு குறூப் இயங்கும்..."

'போடா... கொச்சைப்படுத்தாத... எந்த ஊர் அரசியலிலும் இது இருக்கும்.. வீட்டுக்கு வீடு வாசல்படி... தேர்தல் அரசியல்ல இதெல்லாம் சகஜம்..." என்றார் இகுருவி ஐயா சற்றே கோபமாக.

'மற்றவை அப்பிடி இருக்கினம் எண்டதுக்காக நாங்களும் அப்படித்தான் இருக்கவேணும் எண்டு சொல்லுறது பிழை ஐயா..." என்று நானும் ஆட்சேபித்தேன்.' அப்படியெண்டா... இலங்கைப் பாராளு மன்றதமிழ் அரசியல் வாதியளைப் பற்றி நாங்கள் கிண்டலாச் சொல்லுறதும், தமிழகத்து அரசியல்வாதிகளை நக்கலாச் சொல்லுறதும் முறையோ? அதுகளும் அப்பிடித்தான் இருக்கும் எண்டிட்டுப் பேசாம இருக்கலாம்தானே..?" என்று குதர்க்கமாக எதிர்க் கேள்வி கேட்டேன்.

'எல்லாரும் நல்லாயிருக்க வேணும் எண்ட ஆதங்கம் எல்லாரிட்டையும் இருக்கடாப்பா." என்றார் இகுருவி ஐயா.



## நாலாம்கட்ட ஈழப்போர் ரூஜ்ரிவரில் ஆரம்பம்.

'ஐயா... டாக்குத்தர் நமக்கு நோய் இருக்கவேணும் எண்டு ஆசைப்படுவர்.. லோயர் நமக்கு பிரச்சினை இருக்கவேணும் எண்டு ஆசைப்படுவர்.. மெக்கானிக் எங்கட வாகனங்கள் பழுதாக வேணும் எண்டு ஆசைப்படுவர்.. திருடன் நாங்க காசு பணத்தோட இருக்கவேணும் எண்டு ஆசைப்படுவர். இதில ஆர் நல்லவர்?" என்று கலாய்த்தேன் நான்.

'சரி.. சரி.. விடு.. இண்டை வரைக்கும் லிபரலிலயிருந்து ஒருத்தரும், என்டிபியிலயிருந்து ஒருவரும் போட்டியிட ஆசைப்படுகினம் எண்டது வெளிப்படையா வந்தாச்சு..." என்றார் இகுருவி ஐயா.

'அதுகட்சியின்ரை கடைசித் தீர்மானம் எண்டோ அல்லது எங்கட சமூகத்தின்ரை முற்றுமுழுதான ஆசை எண்டோ சொல்ல முடியாது. அதுதேர்தலில நிக்கிறவையின்ரை தனிப்பட்ட ஆசை எண்டுதான் நான் சொல்லுவேன். இங்க தேர்தலில நிக்கிறவையைக் கவனிச்சுப் பாருங்கோ... தேர்தல தோல்வி வந்ததும் மறைஞ்சும் போயிடுகினம்.. அல்லது வியாபாரத்தைக் கவனிக்கப் போயிடுவினம்... பிறகு அடுத்த தேர்தலில ஈஸ்டர் பெருநாள்மாதிரி உயிர்த்து வந்து நிப்பினம்." என்றேன்.ஷ

'அதாவது மக்களோட தொடர்ச்சியாக நிண்டு மக்களுக்கு சேவை செய்யிற ஆக்கள் அல்லது எல்லாருக்கும் அறிமுகமான கல்விமான்கள்தான் அரசியலுக்கு வரவேணும் எண்டுறியோ?"

'எக்ஸாட்லி... இதுவரைக்கும் கனடாவின் ஈழத்தமிழ் மக்கள் மூண்டு கட்ட தேர்தல் களேபரத்தைக் கண்டவை.. உள்ளாட்சித் தேர்தல்கள், மாநிலஅவைத் தேர்தல்கள், மத்திய அரசுத்தேர்தல்கள் எண்ட மூன்று கட்டமும் தாண்டி இப்ப நான்காம் கட்டமா இடைத்தேர்தல் களேபரத்தைக் காணப் போகிறம்... எந்தத் தேர்தலா இருந்தாலும் மக்களோட மக்களா நிக்கிறவைதான் மக்களைச் சரியாப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும்... கனடாவில எங்கட தமிழ்ச் சமூகத்தில இருக்கிற பெரிய பிரச்சினையே ஒவ்வொரு தேர்தலும் வரேக்க புதிசு புதிசா ஆக்கள் அறிமுகமாகிறதுதான்... ஒரு சாதாரண வேலைக்கு அப்பிளை பண்ணுறவங்கள்கூட தகுதியோடதான் அப்ளை பண்ணுவங்கள்..."

'ரூஜ்ரிவர் தொகுதியை பொறுத்தவரை கரி ஆனந்த சங்கரியின்ரை தேர்தல் வெற்றி அலையால ஒருவித லிபரல்கட்சி மூட் இங்க இருக்கு எண்டது உண்மை..." என்றார் இகுருவி ஐயா.

'ஓம்.. ஓம்.. கரியின் வெற்றி பெரிய இம்பாக்ட்... ஆனாலும் அதுவே இந்த இடைத்தேர்தலில ஒன்ராறியோ லிபரல் வேட்பாளருக்கு எப்படிச் சாதகமா போய்முடியும் எண்டும் நாங்க யோசிக்கவேணும்.. லோகன் கணபதி இங்க இப்ப வந்து குதிச்சிருந்தாரெண்டா ஒரு சுவாரஸ்யமான களம் அமைந் திருக்கக்கூடும். லிபரலில கேக்க ஆசைப்படும் பிரகல்திரு பலகாலமா சமூக சேவகரா இருந்தவர் எண்டு சொல்லப்பட்டாலும் இப்பஅவர் ஒரு புதுவரவாத்தான் மக்களால பாக்கப்படுகிறார்."

'என்டிபி?" என வினாவினார் இகுருவி ஐயா.

'ராதிகா? முன்னாள் பெடரல் எம்பி ராதிகா இப்ப மாநில அவையின்ரை இடைத்தேர்தலுக்கு வாறா... என்டிபியின்ரை நீதன் சான் ஸ்கூல் ட்ரஸ்டியா போயிட்டார்... போகாம நிண்டிருந்தார் எண்டாகட்டாயம் அவர் குதிச்சிருப்பார்."

'கொன்சவேடிவ்கட்சியைப்பற்றி எதுவும் சொல்லமாட்டாய்போல..." என்று கொடுப்புக்குள் ஒருவித சிரிப்புடன் கேட்டார் இகுருவி ஐயா.

'சொல்ல என்ன கிடக்கு.. புதுத்தலைவர் பற்றிக் பிரவுணுக்கு இந்த இடைத்தேர்தல் ஒரு அக்கினிப்பரீட்சை மாதிரி! பற்றிக் பிரவுணை ஒன்ராறியோ பிசி கட்சியின் தலைவராக்குவதற்கு தமிழ் மக்கள் 10ஆயிரம் பேர் ஆதரவு கொடுத்தார்கள் எண்டது நாடறிந்த செய்தி... அதிலயும் எங்கட ரூஜ்ரிவர்தான் அதிகப் படியான வாக்குக்களைத் தந்தது. அதனாலதான் ஒட்டாவாவில நாடாளுமன்றத்தில பற்றிக் பிரவுண் தன்ரை கடைசி உரையை நிகழ்த்தும்போதும் தனக்கு ஆதரவு தந்த தமிழ்மக்களுக்கு பிரத்தியேக நன்றி தெரிவித்தார். இதெல்லாம் இப்படியிருக்க தமிழ்த் தொகுதி எண்டு அறியப்பட்ட ரூஜ்ரிவருக்கான இந்த இடைத்தேர்தலில — அவர் நியமிக்கும் ஒன்ராறியோ பிசி வேட்பாளர் தோத்துப்போயிட்டா அது பிசி கட்சி தலைவராக பற்றிக் பிரவுணைத்தான் கடுமையாகப் பாதிக்கும்."

'ஓம்.. ஓம்... பற்றிக் நியமிக்கும் பிசி வேட்பாளர் ஒருவேளை தோத்துப் போயிட்டா அதுக்குப்பிறகு தமிழ் மக்களின் நண்பன் தான்தான் எண்டு பற்றிக் பிரவுண் சொல்லுறதுக்கும் ஏலாமல் போயிடும். அப்பிடி ஒருதோல்வியைத் தடுக்கவாவது பற்றிக்கின்ரை தமிழ்க்குழுவினர் தீவிரமாவேலைசெய்தேதீரவேணும்.. மற்ற போட்டியாளர்களை விடத்

RE/MAX THIPAN RAJ | NAVA LAW | THE GUARDIAN GINI ANNARASA | INFORCE Financial Service Inc. | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திறமான ஒருத்தரைவேட்பாளராக்கி போட்டிபோட வைக்கவேணும். அப்பிடிப்பட்ட கன்சவேடிவ் யாரும் கண்ணில படேல்ல... இதுவரைக்கும் பிசிகட்சியின்ரை வேட்பாளர் தெரிவாக முத்தான ஒரு தமிழ் தொழிலதிபர் மட்டும் இருக்கிறதாத்தான் கேள்விப்படுகிறன்."

'என்ன வேணுமெண்டாலும் நடக்கட்டும்... ஆனா மூண்டு கட்சிகளிலயிலுமிருந்து போட்டிக்கு வாற வேட்பாளர்கள் தமிழர்களா இருந்தாப் போதும்... கட்சி சார்பில்லாமல் அதைத்தான் நாங்க வலியுறுத்தவும் வேணும். பிறகு மக்கள் தீர்மானிக்கட்டும். அதாவது இந்த முறை ரூஜ்ரிவர் தொகுதியில ஒரு தமிழ் எம்பிபி வந்திடவேணும்." என்றார் இகுருவி ஐயா.

'ஓம்.. ஓம்...அப்பிடித்தான் செய்யோணும்... தமிழை எங்கும் வாழவைப்போம்! தமிழனையே என்றும் ஆளவைப்போம் எண்டுற சீமானின்ரை கொள்கையோட எனக்கு நல்ல உடன்பாடு.." என்றேன் நான்.

'கிளிஞ்சுது போ.. சீமானின்ரை அந்தக் கொள்கையை தமிழ்த் தூய்மைவாதம் அல்லது தமிழ் பாஸிஸம் என்டெல்லே முற்போக்காளர் கனபேர் சொல்லுகினம்.."

'அதெல்லாம் லூசுக் கதை ஐயா... தமிழன்தான் தமிழனை ஆளவேணும் எண்டுறது தமிழர் சார்ந்ததொரு ஜனநாயகக் கோஷம்... சீமானை பொறுத்தவரை அது ஒரு மாற்றத்திற்கான கோஷம்."

'போடா.. வாக்கு வங்கிப் பலம் இல்லாத கட்சி சீமான்ரை கட்சி! அது எப்பிடி மாற்றத்தைக் கொண்டுவரும்?"

'அட போங்க ஐயா... கம்யூனிஸ்ட்டுகள் ஒரு மாற்றம் வேண்டும் என்று ரஷ்யாவில் கிளம்பியபோதும் இதுபோன்ற சந்தேகம்தான் அப்போதும்தெரிவிக் கப்பட்டிருக்கும்... ஆனால் அந்த ஒரு சிறிய பொறி ஒரு புதிய தத்துவத்தையே கற்பித்துயுகப்புரட்சி கண்டு மனித குலத்தை அடுத்த தளத்தில் இட்டபின் ஓய்ந்தது. கருத்து மக்களை பற்றிக்கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்.."

'பற்றிக் கொண்டால் தானடாப்பா..." அலுத்துக் கொண்டார் இகுருவி ஐயா 'எங்கட நிலைமை அப்பிடி இல்லை.. ஒரு பேச்சுக்கு சீமான் தமிழக முதல்வர் ஆகிவிட்டார் எண்டு வை... பிறகு அவரும் மற்றவர்கள் போலத்தான் ஆகிடுவார்" என்றார்.

'இது அவநம்பிக்கைவாதம்! தலைவர்கள் மாற்றப்படுவார்கள்.. விதைக்கப்பட்ட கருத்து மக்களிட மிருந்து சுலபமாக அழிந்துவிடாது. திருப்பியும் சொல்றன்... கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்.."

'இதெல்லாம் உருவேத்திற வேலை... இப்பிடியெல்லாம் எங்களுக்கும் சிலர் உருவேற்றினதாலதான் நாங்க முள்ளிவாய்க்கால்வரை போனோம் எண்டும் கனபேர் இப்ப சொல்லுகினம்.. சமீபத்தில காலமான மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தைக்கூட தன்ரை மேடைப்பேச்சால தமிழ் மக்களுக்கு உருவேற்றி ஆயுதப்போராட்டத்தை தூண்டிவிட்டு மக்களை அழிய வைச்சவ எண்டு பேஸ்புக்கில திட்டிறவை கனபேர் இருக்கினம்.."

'ஐயோ... ஐயா... மங்கையர்க்கரசி இளைஞர்களைத் தூண்டி அழிய விட்டவ எண்டா அதுக்குப்பிறகு ஆயுதப் போராட்டத்தை நடத்தினவையை என்னனெண்டு சொல்லப் போயினம்...?" என்று எதிர்க் கேள்வி கேட்டேன்.

இகுருவி ஐயா எதுவும் பேசவில்லை.

'தமிழீழப் போராட்டத்துக்கு விதை போடப்பட்ட அந்த ஆரம்ப நாட்களில தமிழ்நிலைப்பட்ட அரசியல் ஆர்வம் பலருக்கும் ஏற்பட பெரியதொரு காரணமாக இருந்த அரசியல் பெண்மணி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்...! அந்தக் காலத்தில தமிழீழ விழிப்புணர்வுக் கூட்டங்களில முழங்கி, காசி ஆனந்தன் எழுதின பாட்டுக்களை அவ பாடிப்பாடி கேக்கிறவையின்ரை மனதில தமிழீழம் எண்டதை ஆழமாப் பதிய வைச்சவ... எழுபதுகளில பிரபாகரன், உமாமகேஸ்வரன், பத்மனாபா, சிறிசபாரத்தினம், டக்ளஸ் தேவானந்தா எண்டு பலவிதப்போராட்டத் ஆயுதப்போராட்டத் தலைவர்களும் உருவாக மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் பேச்சாற்றலும் உதவி செய்தது என்பதே உண்மை."

'அவவின்ரை ஆத்மா சாந்தியடையட்டும் மதிக்கப் படவேண்டிய அரசியல் ஆளுமை." என்றார் இகுருவி ஐயா .சற்று அமைதியாக இருந்தோம். பழைய நினைவுகள்.

பிறகுஒரு பெருமூச்சுடன் 'பாராளுமன்ற அரசியல்வாதியளோட ஆயுத இயக்கங்கள் இணைந்து போயிருந்தா ஈழத் தமிழ்ச் சரித்திரமே மாறியிருக்கும்.. அதுநடக்கேல்லை.." என்றார் இகுருவி ஐயா மெதுவாக.

'ம்... பழைய பாராளுமன்ற அரசியல்வாதிகள் இருந்த காலமே தொடர்ந் திருந்தாலும் பரவாயில்லை எண்டுதான் இப்ப நினைக்கலாம் போல இருக்கு.. இளையர்கள் கைளில ஈழப்போராட்டம் போன பிறகு முதலில பலியானது எங்கட ஒற்றுமைதான்! பிறகு இரண்டாவதா தமிழீழ மக்கள் பலியாகிச்சினம்.. மூண்டாவதா தனிஈழப் போராட்டம் பலியாச்சுது. இனி எங்கட நான்காவது கட்டப் போர் எப்படி இருக்கும் — அதுக்கு யார் யார் பலி எண்டதுதான் தெரியேல்ல... ம்..ம்..ம்... ஐயா ஒரு கதை சொல்லட்டே..." என்றேன்.

'ஓ.. நேரமாச்சு என... சரி கதையைச் சொல்லு..."

'ம்..." என்று செருமிக்கொண்டு ஆரம்பித்தேன். 'அந்த வீட்டில் வாழ்ந்து வந்த அண்ணனுக்கும் தம்பிமாருக்கும் ஒரே இலக்குத்தான். வந்திருப்பதோ நல்ல வேளாண்மை... ஆகவே விளைந்த விளைச்சலை சந்தைக்குக் கொண்டுபோய்விட வேண்டும். விளைச்சலில் ஒரு சிறுபகுதியை ஒரு மூட்டையாக கூட்டணியாகக் கட்டி, தன் சைக்கிளில் வைத்து வீட்டில் இருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார் அண்ணன்." என ஆரம்பித்தேன் நான்.

'வீடு எண்டுறாய், சைக்கிள் எண்டுறாய், கூட்டணி எண்டுறாய்.. சரிகதையைச் சொல்லு.." என்றார் இகுருவி ஐயா எதையோ புரிந்து கொண்டதுபோன்ற புன்னகையுடன்.

'ஒரு கால கட்டத்தில.... அண்ணனைப் பார்த்துஏனோ கோபப்பட்டனர் தம்பிமார். அண்ணன் மெதுவாகப் போகிறாராம்... இனித் தாமே சந்தைக்கு போவது என தீர்மானித்தனர் தம்பிமார். நீங்க சந்தைக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் பிடிக்கும் எண்டு என அண்ணனிடம்சந்தேகமாகக் கேட்டுப்பார்த்தனர். நான் போற வேகத்திற்கு எனக்கு குறைந்தது ஒரு மணித்தியாலமாவது பிடிக்கும் எண்டு பதில் சொன்னார் அண்ணன்...."

'ஒரே ஒருமணித்தியாலம்.. ஓகே..ம்.. மிச்சத்தைச் சொல்லு.."

'அண்ணா.. உங்கட வேகம் போதாது. வேகமாய் நாங்க இனிப் போகப்போறம் என அண்ணனைத் தவிர்த்துத் தனித்துப்போக முனைந்தனர் தம்பிமார். எல்லாரும் சேர்ந்து ஒண்டாப் போனா நல்லதுதானே எண்டு அண்ணன் சொல்லிப்பார்த்தார்.. தம்பிமார் கேக்கேல்ல... என்னவோடாப்பா உங்கட வேகத்தில போனீங்கள் எண்டாபோய்ச்சேர குறைஞ்சது ஒருநாளுக்கு மேலயெண்டாலும் கட்டாயம் பிடிக்கும் என்றார்அண்ணன் அமைதியாக."

'மெதுவாகப் போனா ஒரு மணித்தியாலம்... வேகமாப் போனால் ஒரு நாள் பிடிக்குமோ..?" என்று திகைத்தார் இகுருவி ஐயா.

'இதைக்கேட்ட தம்பிமாரும் கோபமயமாகி வண்டியை வேகமாகச் செலுத்தினர். போகும் வழியில் கற்கள் கொட்டிக் கிடந்தன. வண்டி தடுமாறியது. வேகமாகப் போன வண்டியின் சக்கரத்தின் மையமான அச்சு உடைந்தது. வண்டியும் உடைந்து கீழே விழுந்தது. வேளாண்மை சிதறி விழுந்து நாசமானது. கவிழ்ந்த வண்டியைத் திருத்தி எடுத்துசிந்திய நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்து வண்டியில் போட்டு பயணத்தை திரும்பவும் ஆரம்பித்து போகவேண்டிய இடத்தை போய் அடைய இன்னும் எவ்வளவு நாட்கள் எடுக்கும் எனத் தெரியாமல் எல்லாரும் தவித்தபோதுதான்..." என நான் தொடர..

'போகின்ற புதியபாதை குறித்த அண்ணனின் அனுபவ அறிவு எல்லாருக்கும் புரிந்தது எண்டு சொல்லவாறாய்... அப்பிடித்தானே.." எனகேள்வியுடன் முடித்துவைத்தார் இகுருவி ஐயா.

நானும் சிரித்துக் கொண்டே பதிலளித் தேன் 'இதே கதை இங்கையும் கனடிய அரசியலில வேகமாப் போக நினைக்கிற சில தம்பிமாருக்கும் பொருந்தும் எண்டுதான் நினைக் கிறன்.. நீங்க என்ன நினைக்கிறியள்? ●

RE/MAX THIPAN RAJ · NAVA LAW · THE GUARDIAN GINI ANNARASA · INFORCE LIFE Financial Service Inc. · AJAX NS DENTAL · COMPUTEK COLLEGE · Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“விடுதலைப் புலிகள் செய்ததிலேயே மிகப்பெரிய தவறு ராஜீவ் காந்தியைக் கொன்றதுதான்” என பாலசிங்கம் தன்னிடம் கூறியதாக எரிக்சொல்கெய்ம் தெரிவித்துள்ளார்.

செய்தவை எல்லாமே சரி என்று ஒரு அமைப்போ ஒரு நாடோ ஒரு தலைவரோ உலகத்தில் இருந்ததும் கிடையாது. இருப்பது சாத்தியமும் இல்லை. இதில் விடுதலைப்புலிகள் மட்டும் விதிவிலக்காக இருந்துவிடமுடியாது.

ஆனால் ராஜீவ் கொலை விடுதலைப்புலிகள் செய்த தவறு என்று தொடர்ந்து பேசுவது ஒன்றும் தற்செயலாக நடப்பது அல்ல. ஒரு வேளை விடுதலைப்புலிகளே ஏற்றுக்கொண்டாலும் கூட உண்மையில் ராஜீவ் கொலை விடுதலைப்புலிகள் செய்த தவறு என்ற அடிப்படையில் பார்ப்பது பொருத்தமானது அல்ல.

காரணம்

1919 ஏப்ரல் 13 அன்று இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் (Amritsar) நகரில் உள்ள யாலியன்வாலா பாக் (Jallianwala Bagh) என்ற மைதானத்தில் கூட்டம் நடத்திய பொதுசனம்மீது பிரித்தானியாவின் பஞ்சாப் கவர்னர் டயரின் (General R.E.H. Dyer) ஆணைப்படி இராணுவ பிரிகேடியர் ஜெனரல் ரெஜினோல்ட் டயர் (Brigadier-General Reginald Dyer) தலைமையில் ஐம்பதிற்கு மேற்பட்ட பிரித்தானிய இராணுவத்தினர் நடத்திய கொலைவெறித்தாக்குதலில் அப்பாவி இந்தியப் பொதுமக்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயப்படுத்தப்படுகிறார்கள்.

அங்கே காயப்பட்டு துடித்துக்கொண்டிருப்பவர்ளுக்கு தண்ணீர் வழங்குவதோடு தன்னால் முடிந்த உதவி வழங்கிக்கொண்டிருக்கிறான் ஒரு சிறுவன். அவன் பெயர் உத்தம் சிங்.

இரத்தமும் சதையுமாக துடித்து துடித்து இறக்கும் தன் உறவுகளைக் கண்முன் பார்த்தவனால் தாங்கவும் முடியவில்லை தூங்கவும் முடியவில்லை. அந்த படுகொலைக்கு காரணமான பிரித்தானிய தளபதிகளை பழிவாங்க வேண்டுமென சபதம் எடுக்கின்றான்.

இருபத்தியொரு வருடங்களின் பின் 1940 மார்ச் 13 அன்று பிரித்தானியாவின் கக்ஸ்ரன் கோலில் (Caxton Hall) வைத்து தன் உறவுகளை படுகொலை செய்த பிரித்தானிய தளபதிகளை கொலைசெய்து பழி தீர்த்துக்கொள்கிறான்.

உடனே அவனைக் கைது செய்த பிரித்தானியா அரசு யூலை 31 ஆம் திகதி தூக்கிலிடுகிறது.

1971 ஆம் ஆண்டு இந்திரா காந்தி உத்தம் சிங்கின் சாம்பலை இந்தியாவிற்கு எடுத்து வருகிறார். இரண்டுநாட்கள் துக்க தினம் அனுபவித்து இந்திய தேசத்தின் மாவீரன் என புகழாரம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்படுகிறார் உத்தம் சிங்.



# “ராஜீவ் கொலை” அரசியல்

**இந்திரன் ரவீந்திரன்**



காலம் மாறுகிறது.

இந்திரா காந்தி இறந்துபோகிறார். இந்திரா காந்தியின் மகன் ராஜீவ் காந்தி ஆட்சி அதிகாரத்திற்கு வருகிறார். இலங்கையில் அமைதியை நிலைநாட்டவென இந்திய அமைதிப்படையை அனுப்புகிறார்.

அங்கே அமைதியை நிலைநாட்டும் வேலையை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லா வேலைகளிலும் ஈடுபடுகிறது இந்திய அமைதிகாக்கும் படை.

அமைதிகாக்க வந்த காந்திய தேசத்தின் படைகளிடம் அமைதியான முறையில் தமது அதிருப்தியை முன்வைக்க முடிவெடுக்கிறார்கள் ஈழ மக்கள். அதன் முதல் கட்டமாக திலீபன் என்ற ஆயுதம் தாங்கிய போராளி அகிம்சைப்போராட்டத்தில் குதிக்க முடிவெடுக்கிறார்.

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

ஆகிய ஐந்து அடிப்படை விடயங்களை நிறைவேற்றித்தருமாறு நீர் ஆகாரம் இன்றி உண்ணாவிரதம் இருக்கின்றார்.

அவரின் குறைந்த பட்ச கோரிக்கையைக்கூட நிறைவேற்றாமல் திலீபனை தன் அகங்காரத்தால் சாகடிக்கிறார் ராஜீவ்காந்தி. தண்ணீர் கூட அருந்தாமல் பசித்திருந்து பசித்திருந்து துடித்து துடித்து இறந்து போகிறான் ஒரு ஆயுதப் போராளி.

ஒப்புக்காவது ஒரு வாக்குறுதியை வழங்கி அவன் உயிரைக்காக்க முன்வராமல் காந்தி மகானின் தேசத்திற்கு உலக அளவில் அபகீர்த்தியை ஏற்படுத்திவிடுகிறார் ராஜீவ் காந்தி.

அகிம்சையை தோற்கடித்து ஆயுதம் ஏந்தும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறார் ராஜீவ் காந்தி. தொடர்ந்துவிடுதலைப்புலிகளுக்கும் இந்தியப்படைகளுக்கும் போர்மூளுகிறது.

ஒரு புறம் விடுதலைப் புலிகளோடு போர் மறுபுறம் அப்பாவிப் பெண்கள் குழந்தைகள் முதியவர்கள் பாடசாலை மாணவர்கள் என வயது பால் வேறுபாடுபாராது பொதுமக்கள் மீது ஈவிரக்கமற்ற மனிதவேட்டை ஆடுகிறார்கள்.

மூவாயிரத்தி ஐநூறிற்கும் அதிகமான பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகிறார்கள். இதில் பெற்ற பிள்ளைகளிற்கு முன்னாலேயே தாயை பாலியல் வன்கொடுமைசெய்தசம்பவங்களும் அடக்கம். எட்டாயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயப்படுத்தப்படுகிறார்கள். நான்காயிரத்திறக்கும் மேற்பட்டவர்கள் காணமல் போகச்செய்யப்படுகிறார்கள். பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள். ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் செல்ல வைக்கப்படுகிறார்கள்.

இந்த பேரவலத்திற்கு காரணமான ராஜீவ்காந்தி அவர்கள் 1991 மே 21 அன்று சிறி பெரும்புதூரில் வைத்துக் கொல்லப்படுகிறார். கொலையை திட்டமிட்டவர் விடுதலைப்புலிகளின் பொட்டு அம்மான் என அறிவித்து அவரிற்கான தண்டனையும் அறிவிக்கப்படுகிறது.

ஒரு வேளை விடுதலைப்புலிகள் அதைச் செய்திருக்காவிட்டாலும் யாலியன்வாலா பாக்கில் சபதமெடுத்த உத்தம் சிங்போல் யாராவது ஒரு பாதிக்கப்பட்ட ஈழத்தமிழன் நிச்சயம் ராஜீவ் காந்தியை கொலை செய்திருப்பான். அதுதான் யாதார்த்தம்.

இதை உளவியலாளரும் புரட்சியாளருமான திக்ஷீணீஸீமீக்ஷ் ளினீ ணீ க்ஷீ தி ணீ ஸீ ஷ் ஸீ அவர்கள் மொழியின் சொல்வதானால் “தொடர்ந்து புதுப்பிக்கப்படும் அடக்குமுறைகள் எம்மை பணியச் செய்வதற்கு பதிலாக தாங்கிக் கொள்ள


RE/MAX THIPAN RAJ | NAVA LAW | THE GUARDIAN GINI ANNARASA | INFORCE LIFE Financial Service Inc. | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத முரண்பாட்டிற்குள் அழுத்துகின்றன. இதற்குத்தான் நாம் பதில் சொல்கிறோம். அவமானமும் பசியும் வலியும் என்னவென்று எங்களுக்கு ஆக்கிரமிப்பாளன் கற்பித்த போது எழுந்த அழுத்தத்திற்கு சமமான சிற்றமான உணர்வை இன்று நாம் வெளிப்படுத்துகிறோம். இப்போது எங்களை பயங்கரவாதிகள் என்கிறீர்கள். எங்களுக்கு வன்முறையைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது என்றும் சொல்கிறீர்கள். ஆமாம், உண்மைதான். ஆனால் ஆரம்பத்தில் அது எதிரியினுடையது. விரைவில் நாம் அதை எமதாக்கிக் கொண்டோம். உண்மையைச் சொல்லப்போனால் நாம் வன்முறையின் குழந்தைகள்" எனச் சொல்லலாம்.



உண்மையில் ஈழத்தீவில் அகிம்சையை சாகடித்து, வன்முறையை திணித்து, வன்முறையைத் தூண்டியதோடு, மனிதகுலத்திற்கு எதிரான குற்றமும் இனக்கொலையும் புரிந்த ராஜீவ் காந்தி அவர்களும், தம் அமெரிக்க இந்திய பனிப்போரின் பலி ஆடுகளாக ஈழத்து இளைஞர்கள் கையில் ஆயுதக்கலாச்சாரத்தை ஊக்குவித்து தம் உறவுகளைக் கொலைசெய்தவர்களை இன்னுமொரு நாட்டுக்குச் சென்று பழிவாங்கிய உத்தம் சிங்கை மாவீரன் என்று கொண்டாடி வழிகாட்டிய இந்திரா காந்தி அம்மையாரும்தான் ராஜீவ் காந்தி கொலைக்கு காரணம்.



ராஜீவ் காந்தி கொலையை விடுதலைப் புலிகளின் தவறுகளின் பட்டியலில் வைத்து பேசுவதே தவறானது. உள்நோக்கங்கள் நிறைந்தது.

விரும்பியோ விரும்பாமலோ தமிழ்த்தேசிய அரசியல் இந்தியாவைச் சார்ந்திருப்பதால் தமிழ்த்தலைமைகளும் செயற்பாட்டு இயக்கங்களும் அதற்குள் செல்ல விரும்பாமல் கடந்து செல்ல விரும்புகின்றன.

ஆனால் ராஜீவ் காந்தி ஒரு மனிதகுலத்திற்கு எதிரான குற்றவாளி, இனக்கொலையாளி என்பதையும், காந்திய தேசத்திற்கும் சிந்தனைக்கும் எதிரானவர் என்பதையும் இந்தியமக்கள் உட்பட உலகம் முழுமைக்கும் கொண்டுசேர்க்கப்படாதவரை தமிழ்த்தேசிய அரசியல் "ராஜீவ் கொலை மிகப்பெரிய தவறு" என்ற ஒற்றைச்சொல்லில் மின்சாரக்கம்பி வெளவால்போல் அவ்வப்போது ஊசலாடிக்கொண்டுதான் இருக்கும்.

எரிக்சொல்கைம்போன்றவர்கள் வரலாற்றை வசதியாக மறைத்து விடுதலைப்புலிகள் செய்த மிகப்பெரியதவறுராஜீவ்காந்தியைக் கொன்றதுதான் என்ற விம்பத்தை மட்டும் பெரிதாகக் காட்டி தமிழ்த்தேசிய அரசியலை உள்ளும் வெளியும் தமது தேவைக்கேற்ப கையாண்டுகொண்டுதான் இருப்பார்கள்.

(குறிப்பு: விடுதலைப் புலிகள் தாம் ராஜீவைக் கொன்றோம் என வெளிப்படையாக எங்கும் ஒப்புக்கொள்ளவில்லை. அத்துடன் பாலசிங்கம் சொன்னார் என எரிக்சொல்கெய்ம் தான் சொல்கிறார். ராஜீவ் கொலையில் மிகப்பெரிய மர்ம முடிச்சுக்கள் இன்னமும் அவிழ்படாமல் அல்லது அவிழவிடபடாமல் பார்த்துக்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இருந்தாலும் இக்கட்டுரை எரிக்சொல்கைம் சொன்னதின்படி ராஜீவ் கொலையை விடுதலைப் புலிகள் செய்தார்கள் என்றே எடுத்துக்கொள்கிறது.) ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





VASISHTA Ayurvedic Wellness Inc ன் கோலாகல திறப்பு விழா unit no 01 , 2195 Midland Ave, Scarborough, ON M1P 3E7 எனும் இடத்தில் நடைபெற்றது





கனடாவில் இயங்கிவரும் சரவணபவான் சைவ உணவகம் தனது 15 வது ஆண்டு நிறைவு நாளில் (Feb 22, 2016) உணவக வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், நிர்வாகத்தினர் ஸ்காபுரோ பொது வைத்தியசாலை உதவி நிதிக்காக, அன்பளிப்பாக சேர்க்கப்பட்ட 25,000.00 கனடிய டொலர்களை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்தனர்.





AGA Beauty Skin Spa Grand opening.2761 Markham Road , Unit B10 Sun City Plaza இல் நடைபெற்றது

THIPAN RAJ NAVA LAW GINI COMPUTEK COLLEGE Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE 25 CTCC 1991 - 2016

கனேடியத் தமிழர் வர்த்தக ச

# வெள்ளிவிழா

புரட்டாதி மாதம் 09 மற்ற

GOLD SPONSOR

Lebara

GOLD SPONSO

NAVA LA
PROFESSIONAL CORPOR
www.nava.law

உலக நாடுகளில் இருந்து தமிழ் தலைவர்களும், கல்விமான்களும்,
கனேடிய அரசியல் பிரமுகர்களும், பல்லின மக்கள் பிரதிநிதிகளு
நிகழ்விற்கான அனுசரன

Community Sponsor
HOME & AUTO INSURANCE
SUREN NAVARATNARAJAH
416-520-6916

Community Sponsor
Life100
INSURANCE & INVESTMENTS INC.
www.life100.ca

Community Sponsor
TET HD
www.iwatchtet.tv

Community Spons
Moon Mahalingam
Manager, Mobile Mortgage Specialist
T: 416 319 6654
F: 416 298 4957
Moon.Mahalingam@td.com
TD Canada Trust

Community Sponsor
SUJAN SHANI
Real Estate Broker 416.282.2000
RE/MAX

Community Sponsor
Ravi Kanagasabey
647-629-4434
Arthur Fire Protection Inc.
www.arthurfire.com
(905) 494-1408 Toll-Free: 1-(866) 315-1408

Community Sponsor
We Decorate, You Celebrate!

Community Spon
Shinol
GROUP OF COMP
www.shinol.c

Community Sponsor
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
WWW.SANTHA.ca 416-200-5470

Community Sponsor
Senthooran Punithavel
416-396-0707
spunithavel@cooperators.ca
the co-operators
A Better Place For You

Community Sponsor
Active Green Ross
Tire Expert Christy
416.321.3443
3505 KENNEDY

Community Spon
ASIYANS
www.asiyans.c

கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தி

## " இளைய சாதனைத் த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு

# ழாக் கொண்டாட்டம் 2016

09 மற்றும் 10ம் திகதிகளில்

LD SPONSOR

VA LAW
ONAL CORPORATION
www.nava.law

GOLD SPONSOR

Kanish& Partners LLP
Chartered Accountants and Business Advisors

ர்களும், வர்த்தகத் துறையில் சாதனை நிலை நாட்டிய தமிழர்களும்,
திநிதிகளும் கலந்துகொள்ளும் எமது பிரமாண்ட வெள்ளிவிழா
அனுசரணையாளர்கள்

mmunity Sponsor

Moon Mahalingam
Manager,
Mobile Mortgage Specialist
T: 416 319 6654
F: 416 298 4957
Moon.Mahalingam@td.com
Canada Trust



Community Sponsor

747 AUTOPARTS
The Right Price, The Right Choice
www.747autoparts.com

Community Sponsor

Chef RAMANAA
www.cheframanaa.com

Community Sponsor

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416-993-0826
Christeen Seevaratnam
Funeral Counsellor
416-258-6759

mmunity Sponsor

Shinol inc.
GROUP OF COMPANIES
www.shinol.ca

Community Sponsor



Sathya Law
Barrister, Solicitor & Notary Public
www.sathyalaw.com

Community Sponsor



DILANI GUNARAJAH
BARRISTER | SOLICITOR | NOTARY PUBLIC
Phone : 416-755-7777 Fax : 416-288-8633
2401 Eglinton Avenue East, Suite 210, Toronto, Ontario M1K 2N8
E-Mail : dilani@rogers.com

Community Sponsor

altona
custom homes
www.altonahomes.ca

mmunity Sponsor

ASIYANS
w.asiyans.com

அனுசரணையாளர்களாக உங்களையும் இணைந்துகொள்ள உடன் அழையுங்கள்

ரோசான் தவரட்ணம் (Roshan)
வெள்ளிவிழா நிகழ்வு இயக்குனர்

(416)-561-5733

னத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

தமிழர்களை நோக்கி ”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெமனில் நடமாடும் கனேடிய எமன்?!



சிவமணி



இலங்கைத் தமிழர்களுக்கும் இயந்திரத் துப்பாக்கிகளுக்கும் இடையே இருந்த பந்தம் மூன்று தசாப்தங்களுக்கு மேலானது எனலாம். தனிநாடு வேண்டிபோராடிய தமிழ் குழுக்கள் எல்லாமே இயந்திரத் துப்பாக்கிகளை தமது இதயமாக நம்பியிருந்தன. அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதபலம் என்பது அபாரமானதும் ஆயுதம் தான் தமிழர் தீர்வின் தீர்க்கமான பிரதிநிதி என்றும் நம்பியிருந்தார்கள். அதனால் புலிகள் இயக்கம் உலகின் பல பாகங்களில் இருந்தும் தருவிக்கப்பட்ட சுடுகலன்கள் மூலம் தமது படைப்பலத்தை மேன்மைப் படுத்தியிருந்ததை சர்தேசமும் அறியும். ஓர் இராச்சியம் தனது இறையாண்மையை பாதுகாப்பதற்கு பாரிய பங்காளியாக நம்பியிருப்பது தனது ஆயுத படைபலத்தைத் தான். அதேபோல் அடிமைப்படுத்தப்படும் ஒடுக்கப்படும் மக்களும் தமது ஜனநாயக ரீதியிலான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் போது தமக்கான பிரதேசத்தை பிறப்பிப்பதற்கும் ஆயுத போராட்டத்தினையே நம்புகிறார்கள்.

முப்பது வருடகாலத்துக்கும் மேலான ஈழத்தமிழர்களின் ஆயுதபோராட்டம் பல்வேறுபட்ட அனுபவங்களையும் இழப்புகளையும் வேதனைகளையம்நம்எல்லோர்மீதும் கொட்டிவிட்டுச் சென்றுள்ளது. இந்த ஆயுதபோராட்டத்தின் கொந்தளிப்பில் கனடாவில் கரை ஒதுங்கிய ஈழத்தமிழர்களாகிய நாம் ஈழத்தின் வேதனைகளை மனச்சுமையாக்கிக் கொண்டு கனேடிய பொருளாதாரத்தின் பொதிகளைச் சுமந்து கொண்டு செல்கிறோம். காரணம் ஆயுததாரிகளுக்கு நமது உயிரைக் கொடுக்க நாம் விரும்பவில்லை. எங்களைப் போல் பலரை குடியேற்ற வாசிகளாக வந்தவர்களே கனடாவின் பொருளாதாரப் பிரமுகர்களாக விளங்குகிறார்கள் என்பதும் மறைக்க முடியாத உண்மை.

தலைப்பு என்னவோ சொல்ல தம்பி என்வோ சொல்கிறார் என சிந்திப்பீர்களேயானால் இப்பொழுது தான் நீங்களும் நானும் ஓர் புள்ளியில் சந்தித்திருக்கிறோம் என அர்த்தப்படுகின்றது. ஆதாவது அமைதியான நாடு அடிதடிக்கு போகாத நாடு என்று எங்களை எல்லாம் நாங்கள் நம்புகின்ற கனடாவும் ஆயுத விற்பனை மூலம் தனது பொருளாதாரத்துக்கு வலுச் சேர்க்கின்றது என்பதும் உண்மைதான். அப்படியாக ஆயுதம் விற்கும் நிறுவனம் தான் வினிப்பெக்கைச் சேர்ந்த PGW Defence Technology Inc இந்த நிறுவனத்தின் இயந்திரத் துப்பாகிகளின் விற்பனை கனடாவிற்கு கணிசமான அளவு அனியச் செலாவாணியைப் பெற்றுக் கொடுக்கிறது, ஆனால் தற்போதைய விடயம்என்னவென்றால் PGWDefence Technology Inc சவுதி அரேபியாவிற்கு விற்பனை செய்யும் LRT-3 எனப்படும் 50 கலிபர் சுடுகலங்களில் பல ஜெமன் நாட்டு அரசுக்கு எதிராக போராடும் HUTHI போராளிகளிடம் சென்றடைந்துள்ளது. விளைவு கனேடிய ஆயுத வியாபாரத்தில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.




சவுதி அரேபியா தனது ஆயுத வினையோக நாடுகளுள் கனடாவை இரண்டாவது இடத்தி வைத்துள்ளது. இந்த அடிப்படையில் PGW Defence Technology Inc தனது இயந்திர துப்பாக்கிகளை சவுதி அரேபியாவிற்கு விற்பனை செய்து வருகிறது. ஜெமன் உள்நாட்டு யுத்தத்தில் அன்நாட்டு அரசுக்கு ஆதரவாக சவுதி அரேயியா தனது படைகளைப் பிரசன்னப் படுத்தியுள்ளது, ஜெமன் அரசுக்கு எதிராக போராடும் HUTHI போராளிகளுக்கு ஆதரவாக ஈரான் ஆயுத வினையோகங்களை செய்து வருகிறது. HUTHI திவிரவாதிகள் சவுதி இராணுவத்தினருடன் போரிடும் போது அவர்களிடம் இருந்து சிறிது சிறிதாக கைப்பற்றப்படும் இயந்திரத் துப்பாக்கிகளில் பெரும்பான்மையானவை கனடாவின் PGW Defence Technology Incஇனால் தயாரிக்கப்பட்ட LRT-3 வகைத் துப்பாக்கிகள் ஆகும் என ஆய்வாளர்களில் ஒரு சாரார் தெரிவிக்கின்றார்கள். HUTHI போராளிகள் லிஸிஜி—3 வகைத் துப்பாக்கிகளுடனும் மற்றும் PGW Defence Technology Inc தயாரிக்கும் "Timberwolf" Sniper Rifleகளுடன் காணப்படும் புகைப்படங்களை பிஹிஜிபிமி போராளிகளுக்கு ஆதரவான தொலைக்காட்சி வெளியிட்ட போதே இந்த விடம் சர்வதேசத்தின் பேசுபொருளாகியிருக்குறது.

ஜெமன் தீவிரவாதிகளின் கைகளில் கனேடிய ஆயதங்கள் என்னும் ஊடகச் செய்திகள் கனடாவின் ஆயுத ஏற்றுமதியில் ஏதாவது ஓட்டை உடைசல் உள்ளதா என பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்த கனேடிய ஆயுதங்களின் இடமாற்றம் பற்றி PGW Defence Technology Inc கருத்து தெரிவிக்க முன்வராவிட்டாலும் கனேடிய அரசாங்கத்தின் தகவலின்படி சவுதி அரேபியாவிற்கு விற்பனை செய்யப்படும் அனைத்து ஆயுதங்களும் கனடாவின் ஆயுத ஏற்றுமதி சட்டத்துக்கு அமைவாகவே நடைபெறுகிறது என கூறப்பட்டுள்ளது.

ஆனால் கனேடிய ஆயுத ஏற்றுமதியின் மீதான மனித உரிமை ஆர்வலர்களின் பார்வை தலைகீழாக இருக்கிறது. அதாவது சர்ச்சைக்குரிய பல மனித உரிமை மீறல்களை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு நாடு சவுதி அரேபியா. வேற்று நாட்டு பணியாளர்கள் மீதும் உள்ளூர் மக்களின் மீதும் சர்வதேசத்தினால் அனுமதிக்க முடியாத பல கொடூர தண்டனைகளை நிறைவேற்றுகின்ற நாடாக சவுதி அரேபியா பார்க்கப்படுகிறது. அவ்வாறான ஒரு நாட்டிற்கு கனடா ஆயுதம் விற்பதை கனடா நிறுத்த வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் ஒரு வாதத்தினை முன்வைக்கிறார்கள்.

மறுபுறத்தில் தொடர்ந்தும் HUTHI போராளிகள் சவுதி படைகளின் வசம் உள்ள திறமைவாய்ந்த இயந்திரத்துப்பாக்கிகளையும் கனரக ஆயுதங்களையும்கைப்பற்றுவார்களே ஆனால் யுத்தத்தின் திசை இரத்தச் சுவடகளை நோக்கியதாக இருக்கும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகிறார்கள். ஏற்கனவே இந்த யுத்தம் 6000க்கும் அதிகமான மக்களை காவுகொண்டிருக்கிறது. அதனை விடவும் ஜெமனின் கட்டுமானங்கள் தகர்ந்து நாசப்படுத்தப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 2,5 மில்லியன் மக்களை ஜெமனுக்கு உள்ளேயோ வெளியேயோ இடம் பெயர வைத்துள்ளது. பெரும்பாலான மக்களை அன்றாடம் பட்டினியோடு போராடவும் செய்துள்ளது இவ் யுத்தம்.

இன்று HUTHI போராளிகளின் கைகளுக்குச் சென்றடையும் கனேடிய ஆயுதங்கள் காலப்போக்கில் அல்கைதா போன்ற அமைப்புகளிடம் சென்றடைந்தால் விளைவுகள் வேறுமாதிரி அமையக் கூடும் என்றும் ஆய்வாளர்கள் அச்சம் கொள்கிறார்கள். ஆனால் மறுபுறம் கனடா போன்ற மேலத்தேய நாடகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தமது ஆயுதங்கள் விற்பனை செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். ஏன் எனில் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கிடைக்கும் ஓடர்கள் பெரிதானவை இலாபமும் அதிகமானவை. வியாபாரம் என்று வந்து விட்டால் உயிரே போனாலும் இலபம் தான் முன்னிலைப்படுத்தப்படும், சமூக ஆவலர்கள் எவ்வகைக் குரல் கொடுத்தலும் ஆயுத வியாபாரிகளின் பலம் பெரியது,

இந்த ஜெமன் உள்நாட்டு யுத்தத்தில் கடந்த 8ம் திகதி முக்கிய நாளாக கருதப்படுகிறது. காரணம் ஜெமன் அரசையும் அதன் பிரதான அனுசரணை நாடான சவுதி அரேபியாவையும் எதிர்த்து ஆயுதத்தாக்கதல் நடாத்தி வந்த HUTHI போராளிகள் அமைப்பு யுத்தத்தை முடிவுக்கு கொ ண்டுவரும் நோக்கிலான அமைதிப் பேச்சு வார்த்தைக்கு சவுதி அரேபியா சென்றிருக்கிறது. இவ் அமைதிப் பேச்சுவார்த்தையின் மூலம் யுத்தம் முடிவுக்கு வருமேயானால் எமன்களின் நடமாற்றமற்ற ஜெமன் மறுஜென்மம் எடுக்க வாய்ப்பிருக்கிறது. ●

THIPAN RAJ NAVA•LAW THE GUARDIAN INFORCE LIFE NS DENTAL COMPUTEK COLLEGE Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியமும் புரிதல்களும்

ராஜ்மோகன் செல்லையா

இன்றைய உலகில் வளர்ந்துவரும் கருத்தோட்டங்களில் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. பெண்களின் உரிமைகளை அடக்கிவைத்திருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கும், கருத்துரிமைப் போக்குகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் எழுச்சி கொண்டெழும் பெண்ணியக் கொள்கைகள் "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில்பெண்கள்நடத்தவந்தோம்;, எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லைகாணென்று கும்மியடி"என்றபாரதியாரின் பெண் விடுதலைக் கனவுகளை நினைவுபடுத்திச் செல்கின்றன.

Feminism என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் பெண்ணியம் அல்லதுபெண் நிலைவாதம் எனப்படுகின்றது. பெண்ணின் உரிமைகள் பேணப்படுவதற்காக, அவர்களின் நிலையிலிருந்து உள்வாங்கப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்வதும் அல்லது அவற்றை ஆராய்வதும் பெண்ணியம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. பெண்ணியச் சிந்தனைகள் மீதானவிழிப்புணர்வு, பெண்ணியக் கருத்துருவாக்கம், சமூகவிழிப்புணர்வுமற்றும் அதன் மூலம் ஏற்படும் பரவலாக்கம் போன்றபலவிடயங்களில் அக்கறை காட்டப்படுவது பெண்ணியத்தின் சமூகச் செயற்பாடு களாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திவரும் பெண்ணியத்தின் கொள்கைகள், தெளிவானவையாக மட்டுமல்லாமல் புனிதத்தன்மை வாய்ந்தவையாகவும் இருக்கின்றன. இருந்தும் பெண்ணியத்தின் சுதந்திர வெற்றியை முழுமையாக அனுபவிப்பதற்கு பெண்கள் கடக்கவேண்டிய தூரம் அதிகம் உள்ளது. பெண்கள் தமது செயற்பாட்டின் ஊடாக சிந்தனைகளையும், தத்துவங்களையும் புரிந்துகொண்டு, தமது ஆளுமைக்குட்பட்ட வலுக்களை முன்னிறுத்தி, வாழ்க்கைத் தளத்திலும், கருத்துலகத்திலும் நேர்மையுடன் போராடவேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.

பெண்ணியக் கொள்கைகளின் தவறான புரிதல்களினால் பெண்ணியம் பற்றிய மாற்றுக் கருத்துக்கள் சமூகத்திடையே ஊடுருவி, பெண்ணியம் பற்றியதவறான எண்ணங்களை வலுப்பெறவைத்துள்ளது. இது ஒரு சமுதாயத்தின் சாபக்கேடாகவே கருதப்படுகின்றது. இந்தத் தவறான எண்ணங்களாலும், நடவடிக்கைகளாலும் பெண்ணிய வாதிகளுக்கும், சமூகத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள விரிசலைக் குறைப்பதற்கு பல விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் தேவைப்படுகின்றன. பெண்ணியம், ஆண்களுக்குஎதிரானது என்ற விகாரப்படுத்தப்பட்டுள்ள சிந்தனைகளும், தவறான வழி நடத்தல்களில் இயங்கிவரும் பெண்ணிய அமைப்புகளின் பொறுப்பற்ற செயல்களும், பெண்ணியத்தை தவறான பாதையில் இட்டுச் செல்வதை மறுக்கமுடியாது.

பெண்களின் பிரச்சனைகளுக்குக் கொடுக்கும் தவறான தீர்வுகள்மூலம், கட்டுக்கோப்பாகப் பேணி வளர்க்கப்பட்ட 'குடும்பம்' என்ற அத்திவாரத்தை இலகுவாகத் தகர்த்து, அவர்கள் மனதில் அறியாமையை விதைப்பது ஒரு பொது நோக்கிய பார்வையில் ஆரோக்கியமான தீர்வாக இருக்கமுடியாது. பெண்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து அறியாமல், தீர்வுகளுக்குரிய நீண்டகால இலக்கு இன்றி, எழுந்தமானமாக எடுக்கப்படும் குடும்பப்பிரிவினைத் தீர்வுகள், சமூகத்தைப் பெரிதும் பாதித்துவருகின்றன. இதிலிருந்து வெளியேறுவதற்குப் பல்வேறு



கோணங்களில் மீளாய்வு செய்யப்படும் பெண்ணியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை பெண்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியநிலை ஏற்படுகின்றது. இதேவேளை பெண்களின் வாழ்க்கையை சரிபாதியாகப் பங்குபோடும் ஆண்களும், பெண்ணியத்தின் கோட்பாடுகளை தெளிவாகப் புரிந்துகொள்வதன் மூலம், பலசமுதாயச் சீர்கேடுகளைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். இந்தத் தெளிவான புரிதல்கள் மூலம் பல ஆண்களின் ஆதரவு பெண்களுக்குக் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், பெண்ணியம் ஆண்களுக்கு எதிரானது அல்ல என்ற விடயமும் தெளிவுபடுத்தப்படும்.

மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியில் தமது இருப்பை உறுதிசெய்வதற்காக ஆண்களுக்கு ஈடாக பெண்களும் சமநிலையில் இருந்தார்கள் என்பதை பல சங்ககால இலக்கியங்கள் மூலம் தெரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அத்துடன் இந்தக் காலங்களில் இருந்த சமூகக் கட்டமைப்பில் பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள் என்பதை வெளிப்படுத்தவேண்டிய தேவையும் இருக்கவில்லை. தமது தனித்துவமான திறனை வெளிப்படுத்தியவாறே அவர்களது இயங்குநிலை காணப்பட்டது.இந்தத் தனித்துவமான இயங்குநிலையில் மாற்றம் எதுவும் இன்றி, இன்றும் இலைமறை காயாக பல பெண்கள் காத்திரமான நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. கருவின் உருவாக்கத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமபங்கு இருக்கின்ற போதும், கருவைச் சுமந்து, அதனைத் தக்கவைத்து, அதன் வளர்ச்சிக்கான விடயங்களில் அக்கறை கொள்ளும் பெறுமதிமிக்க பொறுப்பை பெண்கள் இயல்பாகவே பெற்றுக் கொண்டார்கள். சமுதாயக் கட்டமைப்பு உருவாக்கத்தின் போது இந்தப் பொறுப்புணர்ச்சி சமூகப்பரப்பில் பெண்களுக்கு எதிரான அடக்குமுறையாக படிப்படியாக உருவாகம் பெற்றது.

ஆண்டாண்டு காலமாகஉலகின் பல்வேறு பகுதிகளிலும் பெண் அடிமைத்தனம் இருக்கின்றது என்றும், இனவிருத்தி, குடும்ப நிர்வாகம் முதற்கொண்டு பல பொறுப்புள்ள கடமைகளைச் செய்துவருகின்ற போதும், பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றது என்றும், எல்லாக் கருத்துக்களும், செயல்களும் ஆண்களை மையமிட்டே நடக்கின்றன என்றும் பெண்ணியவாதிகள் ஆண்களுக்கு எதிராகதீவிரமான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் பெண்ணடிமைத்தனம் அழிக்கப் பட்டு, ஒவ்வொரு பெண்ணின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கள் அடையாளப் படுத்தப்பட்டு, சமூகம்,பொருளாதாரம், அரசியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில்பெண்களின்சமத்துவநிலைபேணப்படவேண்டும்என்பதுபெண்ணியவாதிகளின் கொள்கையாகஉள்ளது.

ஆண் — பெண்களுக்கிடையிலான சமத்துவ இடைவெளி பற்றிய தரவுகளின் படி,உலகில் 100 சதவீதமாக இருக்க வேண்டிய ஆண் — பெண் சமத்துவநிலை (Global gender gap index) 56 சதவீதத்துடன் மட்டுமே காணப்படுவதாக World economic forum என்ற அமைப்பின் கணிப்பீடு தெரிவிக்கின்றது.பொருளாதார அபிவிருத்தி, அரசியல் பங்களிப்பு, கல்வித்துறை, வருமானஏற்ற இறக்கம், வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரநிலைஉள்ளிட்டபலவிடயங்களைஅடிப்படையாகக் கொண்டு இந்தக் கணிப்பீடு142 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.ஐஸ்லாந்து,பின்லாந்து,நோர்வேபோன்றபலநாடுகள் இந்த விடயத்தில் முன்னேற்ற நிலையில் உள்ள போதும், உலகளாவிய ரீதியில் பெண்கள் பயணிக்க வேண்டிய தூரங்கள் இன்னும் அதிகமாகவே காணப்படுவதாக இந்த அறிக்கையின் சாராம்சம் மேலும்; விளக்கி நிற்கின்றது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் பெண்கள் வகிக்கும் பங்குமிகவும் முக்கியமானது என்பதை உலகவரலாறுகள் மட்டுமல்ல ஆண் — பெண்களுக்கு இடையிலான சமத்துவநிலை அறிக்கையின் முடிவுகளும் நிரூபித்து நிற்கின்றன. ஆண் வழியூடான சமூக, அரசியல் மற்றும் சட்டஅமைப்பு என்று கூறப்படும் கருத்தியல் மேம்பாடுகளின் அடிப்படையில், ஆண்களின் அதிகாரம் மேலோங்கி உள்ள நிலமை பல நாடுகளில் தொடர்ந்தும் காணப்படுவதாக இந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

ஆண் — பெண் சமத்துவ நிலையின் அடிப்படையில் பெண்களின் அரசியல் பங்களிப்பை மேலும் பலப்படுத்துவதற்கான வழிமுறைகள் செயற்படுத்தப் படுவதும், சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்றதளங்களில் முக்கிய தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் பெண்களின் அதிகாரத்தை அதிகரிப்பதும் இந்த நூற்றாண்டின் பெண்களின் உரிமைக்கான போராட்டத்தில் பிரதான நோக்கமாக அமையவேண்டும்.

ஒரு இனத்தின் அடிப்படைக் கட்டமைப்பு அந்த இனத்தின் தனித்துவமான அடையாளங்கள் சார்ந்தே தீர்மானிக்கப்படுகின்றது. கணத்திற்குக் கணம் மாறிக் கொண்டிருக்கும் உலக மாற்றங்களுக்கேற்ப ஒவ்வொருவரும் தமது தனித்துவமான அடையாளங்களை மீள் கட்டுமானம் செய்யும் போது பெண் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு,ஆண் — பெண் சமத்துவநிலையுடன் கூடியஉறுதி பெற்ற சமுதாயத்தின் இருப்புஉறுதிப்படுத்தப்படும். ●

RE/MAX THIPAN RAJ | NAVA LAW | THE GUARDIAN GINI ANNARASA | INFORCE LIFE Financial Service Inc. | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாற்றான் மல்லிகை மட்டும் மணம் வீசுமா?


கலைஞனின் வாழ்வாதாரம் கலையாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே அவன் கலையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்த முடியும். கலை மேம்பாட்டிற்காக உழைக்க முடியும். அப்போதுதான் தரமான கலப் படைப்புக்களை தரமுடியும். முழுநேர வேலைக்கு போய்வந்து மாலையிலும் வாரஇறுதியிலும் பிள்ளைகளுக்கு வகுப்பு எடுப்பவர் நிச்சயமாக ஓர் தரமான நிகழ்ச்சியை வழங்கமுடியாது. அப்பியாசம் செய்யாதவரின் குரலோ விரலோ இஸ்டப்பட்டபடி வளைந்து கொடுக்காது. அப்படியான நிகழ்ச்சிகளைப் பார்க்கும் எம்மவர் "அவனும் பாடுறானெண்டு இதுகளும் பாடத் தொடங்கியிட்டுதுகள்" என இந்திய இசையோடு ஒப்பிட்டு சலிப்பதை காணமுடிகிறது. இந்தியாவில் ஏன் கலை செழிக்கிறது? ஏன் ஈழத்தவரால் முடியவில்லை? என்ற கேள்விகட்கு விடையறிய எவரும் எத்தனித்ததில்லை.

இந்தியாவிலே கலைக்கு மிகப்பெரிய சந்தையுள்ளது. தனது கலைத்திறமையை அந்தச் சந்தையிலே விற்று காசாக்கும் நிலை அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஆதிகாலத்தில் கலைஞர்களை மன்னன் காத்து வந்தான். வெள்ளையன் போனபின் அரசாங்கம் மானியங்களைக் கொடுத்து கலைக்கான சந்தையை உருவாக்கிவிட்டது. இப்போது எவனுக்கு திறமையுள்ளதோ அவன் அந்த கலையால் மிக சந்தோ~மாக வாழும் நிலை உருவாகியிருக்கிறது. ஈழத்தமிழனுக்கோ ஒரு அரசுமில்லை, கொண்டுநடத்த ஓர் தலைவனுமில்லை. எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும் சந்தைவாய்ப்பு இல்லையென்றால் ஈழத்தமிழ் கலைஞர்களால் பிரகாசிக்கவே முடியாது. அது என்ன சந்தை? எப்படி உருவாக்குவது என நினைக்கின்றீர்களா? இந்திய அரசு எப்படி "இந்தியனாயிரு இந்திய உற்பத்தியை வாங்கு" என்ற கோ~த்துடன் செயற்பட்டு அதே வேகத்தில் கலைஞர்களையும் வளர்த்துவிட்டதோ அதை ஈழத்தமிழ் சமூகம் செய்ய வேண்டும். ஒரு தரமான கலைஞன் ஒரு கச்சேரி செய்யும்போது அவன் தனது திறமைக்கேற்ற ஊதியத்தை பெறுவதற்கான நிலைமை உருவாக்கப்படவேண்டும். கச்சேரி செய்பவனின் ஊதியம் எவ்வளவு என எவர் நிர்ணயம் செய்வது என்ற கேள்வி எழலாம். ஒரு அரங்கேற்றத்தில் பாடகருக்கு 2500 டொலர் வாத்தியக்காரருக்கு 2000 டொலரெனக் கொடுக்கப் படுகிறது. அரங்கேற்ற ஊதியம் தட்சணையாக கணிக்கப்படுவதால் கொடுப்பனவு அதிகமாகவே உள்ளது. அதுவே கச்சேரியாக இருந்தால் பாடகருக்கு 1500, வயலினுக்கு 1000, மிருதங்கம் 1000, கெஞ்சிரா 500, மோர்சிங் 500 என வைத்தால் மொத்தம் 3500 டொலர்கள். மண்டபம் ஒலி இதர செலவுகள் 1500 என வைத்தால் கச்சேரிக்கு மொத்தம் 5000 டொலர் வருமானம் வரவேண்டும். 250 பார்வையாளர்கள் 20 டொலர் நுழைவுச்சீட்டை வாங்கினால் போதுமானது. இது நடைமுறைச் சாத்தியமானதே. இந்த விழிப்புணர்வுதான் சந்தையை உருவாக்கும். அது எப்படி முடியும் என கேட்பவர்களும் இருக்கத்தான செய்கிறார்கள். அண்மையில் நடந்த அனிருத்தின் இசைநிகழ்ச்சிக்கு 200,000.00 டெலர்களை ஈழத்தமிழர்கள் அள்ளி கொடுத்தார்களாம். நாம் யார்யாருக்கெல்லாம் எமது உழைப்பை அள்ளிக் கொடுக்கிறோம். ஆனால் எமது கலைஞர்களின் நிகழ்வுகட்கு கிள்ளிக் கொடுக்க தயங்குகின்றோம்.

"இசைக்கு ஏது எல்லை" என்கிற நிகழ்வு ஈழத்தமிழர்கடுகோர் இசை வடிவம் என்னும் கோ~த்துடன் நடைபெற்று வந்தது. முற்றிலும் ஈழத்தமிழர்களின் படைப்பு. ஈழத்தமிழ் கவிஞர்களின் வரிகளுக்கு எம் கலைஞர்களில் ஒருவர் மெட்டமைக்க மற்றக்கலைஞர்களும் இணைந்து ஒத்திகையின்போது பின்னணி இசை அமைக்கப்பட்டு மேடையில் பாடப்பட்ட பாடல்கள். மொத்தம் 7 கலைஞர்களின் இசைக்கச்சேரி. ஒவ்வொரு மேடையிலும் புதிதாக 3 பாடல்கள் சேர்க்கப்படும். புதிய பாடல்கள் புதிய மெட்டுக்கள் கலைஞர்களுக்கு நல்ல பரிச்சயம் இல்லாவிட்டால் மேடையில் தரமான இசையை தரமுடியாது என்பதற்காக 7 ஒத்திகைகள் நிச்சயமாக பார்க்கப்படவேண்டுமென்பது நிபந்தனை. அவ்வளவு நேரம் செலவழிப்பதற்கான ஊதியம் போதாதென்பதால் "இசைக்கு ஏது எல்லை" நிகழ்வு தற்காலிகமாக நின்று விட்டது. அது ஈழத்தமிழர்களுக்கு பேரிழப்பு என எண்ணுபவர்கள் எத்தனை பேர்.

சினிமாவை எடுத்துக்கொண்டால் பல முழுநீளப் படங்கள் வந்தபோதும் உயிர், கரைதேடும் அலைகள், 1999, உறவு, புரஸீ யனெ வாந சுவீபெ என்ற படங்கள் தரமான தயாரிப்புக்கள் எனலாம். அதிலும் லெனின் படமான புரஸீ யனெ வாந சுவீபெ சர்வதேச திரைப்பட விழாக்களில் சில பரிசுகளையும் பெற்றிருக்கிறது. ஆனால் தயாரித்தவர் தனது முதலீட்டை மீளப் பெற்றாரா என்றால் இல்லையென்பதே பதில். சுப்பசிங்கரில் ஈழத்தமிழ் இளைஞர்கள் தமது திறமைகளை நிரூபித்தபோதும் அவர்களால் சிறந்த பாடகனாக தனது வாழ்க்கையை ஓட்டமுடியுமா என்பது கேள்விக் குறியே. இது எல்லாவற்றிற்கும் காரணம் எமது கலைக்கான சந்தை ஒன்று எம்மிடையே உருவாக்கப்படாததுதான்.

எமது கலைத்தேவைகள் அனைத்தையும் தமிழ்நாடு பூர்த்தி செய்வதால் ஈழத்தமிழர்கள் தம்மையுமறியாது அதற்கு அடிமையாகிவிட்டார்கள். அந்த அடிமைத்தளையை வெட்டியெறிய எம்மிடம் ஓர் தலைமையில்லை. ஈழத்தமிழ் சமூகம் விழிப்படைந்து எமது கலைஞர்களைக்காக்க முன்வந்து கலைக்கான சந்தையொன்றை உருவாக்காதவரை நாம் கலையில் மேம்படவே முடியாது. மக்களாவது விழிப்படைந்து செயற்படுவார்களா? ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகுருவிக்காக ராகவி

# ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனம் கேட்கும் கனடா



2021ஆம் ஆண்டு முதல், இரண்டு வருட காலத்திற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஒரு இடத்தைப் பிடிக்க கனடா போட்டியிடும் என கனடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ அண்மையில் அறிவித்திருந்தார். 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஒரு இடத்தை கனடா மீண்டும் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட அறிவிப்பையே அவர் வெளியிட்டார். ஜஸ்டின் ரூடோ விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனம் கேட்கும் கனடாவின் இந்தப் பிரச்சார ஆரம்பம் குறித்த அறிவித்தல் அமெரிக்காவின் நியூ யோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கட்டிடத்தில் மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மேடையில் கனடா மீண்டும் ஒரு சக்திவாய்ந்த நாடாக உருவெடுக்க தயாராகவுள்ளதாக இந்த அறிவிப்பை வெளியிடும் உரையில் ஜஸ்டின் ரூடோ மீண்டும் மீண்டும் தெரிவித்தார். தனது உரையில், கனடா உலகத்துடனான தனது உறவையும் புதுப்பிக்க விரும்புவதாக கூறியதுடன், சர்வதேச அமைதி காத்தல் என்ற விடயத்தில் கனடா தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். பாலின சமத்துவம், அகதிகள் மறுவாழ்வு, பன்முகத்தன்மை மீதான மரியாதை, மத்திய கிழக்கில் தொடரும் ஸ்திரத்தன்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான விடை என ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் இலக்குகளில் இடம்பெற்றுள்ள பிரச்சனைகளில் தனது தலைமையிலான அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் ரூடோ தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டுடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தனது இரண்டு வருடகால கனடாவின் பங்கேற்பு முடிவடைந்தது. தற்போது இறங்கியுள்ள இந்தத் போட்டியில் கனடா வெற்றி கண்டால், ஐக்கிய நாடுகள் சபை வரலாற்றிலேயே அதிக வருடம் பாதுகாப்பு சபையில் இல்லாத நாடு என்னும் வரலாறு முடிவிற்கு வரும். 2010ஆம் ஆண்டு கனடாவில் ஆட்சியில் இருந்து கொன்சவேட்டிவ் அரசாங்கத்தின் மந்தமான போக்கினால் போத்துக்கல் நாட்டுடன் நடந்த போட்டியில் தோல்வி அடைவதற்கு முன்னர் வரை, 1940ஆம் ஆண்டுகளின் கடைசியில் இருந்து ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கு ஒருமுறை என ஆறு முறை பாதுகாப்பு சபையில் கனடா இடம்பெற்றிருந்தது.

சடத்தின் அடிப்படையில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதே ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் முழுமுதல் பொறுப்பாகும். பாதுகாப்பு சபையில் மொத்தம் 15 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஒருவருக்கு ஒரு வாக்குரிமை. அனைத்து உறுப்பினர் நாடுகளும் சபையின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டாக வேண்டும். பிரச்சனைகளை சுமூகமாக தீர்த்துவைப்பது மற்றும் பிரச்சனைகளை தீர்க்க பரிந்துரைகளைச் செய்வது ஆகியவையே இதன் பிரதான வேலை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையினால் பொருளாதாரத் தடைகளை விதிக்க முடியும், இராணுவ பயன்பாட்டினை அங்கீகரிக்கவும் முடியும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை சர்வதேச நீதிமன்றத்திற்கான நீதிபதிகளை நியமிக்க உதவுகின்றது. ஐக்கிய நாடுகள் பொது சபைக்கு பொது செயலாளரை நியமிக்க பரிந்துரை செய்யும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் புதிய உறுப்பினர்களை இணைப்பதற்கான பரிந்துரைகளையும் செய்யவும் முடியும்.

தற்போது ஜஸ்டின் ரூடோ ஆரம்பித்துள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனம் கேட்கும் படலத்தில் ஒரு விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 2020ஆம் ஆண்டுவரை, வெற்றிடமாகவுள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனத்திற்கு போட்டியிடுபவர்கள் மீது பொது சபை உறுப்பினர்கள் வாக்களிக்க மாட்டர்கள். இதனால் கனடா மீண்டும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்குத் திரும்புவதை ஜஸ்டின் ரூடோ காணவேண்டுமாயின் அவர் மீண்டும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கனடிய பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றாகவேண்டும்.

ஆனால் கனடா மீண்டும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு திரும்ப வேண்டும் என்பது எதிர்பார்ப்பை மாத்திரம் சார்ந்திருக்கக்கூடிய முடிவல்ல. எந்தவொரு பிரச்சாரமும் அதனை முன்னெடுப்பவரின் நிகழ்ச்சி நிரல் பற்றிய தெளிவை கொண்டிருக்க வேண்டும் என்பது இந்த விடயத்தில் நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

கனடாவின் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபையில் இடம்பிடிக்கும் முயற்சியை ஆதரிப்பவர்கள் ‘கனடா உலகத்துடன் மீண்டும் இணைந்துவிட்டது” என்பதை மட்டும் கேட்க விரும்ப மாட்டார்கள் என்பதை நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையாக கனடா இந்த உலகிற்கு என்ன வழங்கப்போகின்றது என்பதையும் அறிய விரும்புவார்கள் என்பதும் நிபுணர்களின் கருத்தாக உள்ளது. இந்த விடயத்தில் மேற்கத்திய குழுக்கள் மத்தியில்தான் ஏனைய நாடுகளை விடவும் அதிக போட்டி உள்ளது. குறிப்பாக ஐரோப்பாவில் கனடா அதிக போட்டியை சந்திக்கும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

2020ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் கனடா இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை என ஆலோசகர்கள் ஏற்கனவே ரூடோவின் காதுவரை கொண்டு சென்றிருக்க வேண்டும். அதேவேளை பாதுகாப்பு சபைக்காக பிரச்சாரம் செய்வது பல ஆண்டுகள் நீடிக்கும் ஒரு நடைமுறையாகும். இதற்கு அதிக அரசியல் மற்றும் சமரசப் பேச்சுக்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய விடயங்களில் கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் செயற்பாடற்ற ஒருவராகவே இருந்து வந்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே கனடா ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனம் கேட்கின்றது. கிடைக்குமா இல்லையா என்பதை அறிய 2020வரை காத்திருக்கவேண்டும். ●

RE/MAX THIPAN RAJ | NAVA LAW | GINI ANNARASA | Financial Service Inc. | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலுடன் பாடலைக்கேட்டு-8



Bon Jour

இந்தத் தொடரை எழுத வாரம்பிக்கும் போதில் ஒரு துயர் தோய்ந்த செய்தி வருகிறது. இங்கிலாந்தின் பிரபலமான இசைத்தட்டு தயாரிப்பாளர் சேர். ஜோர்ஜ் மார்ட்டின் தனது 90 ஆவது அகவையில் காலமானார். ஐந்தாவது Beatles என்றழைக்கப்படும் இவர் யார்? அறுபதுகளில் இருந்து இன்றும் உலகம் முழுவதும் அறியப்பட்ட The Beatles நால்வரை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டுகொண்டு குடிசைக்குள் இருந்த அவர்களது இசையை கோபுரத்துக்குத் தூக்கிய பெருமனதுக்காரன். நமது கனடாவின் பாடகி செலீன் ட்யோன் அவர்களை உலகறியச்செய்து அண்மையில் மறைந்துபோன ரேனே ஆஞ்ஜலில் அவர்களைப் போல...... சித்ரா, சுஜாதா இவர்களைக் கைதூக்கிவிட்ட கலைஞர் யேசுதாஸ் அவர்களைப் போல..... "ஊக்குவிக்க ஆளிருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்" என்ற கவிஞர் வாலி அவர்களின் வரிகள் நினைவில் ஓடுகிறது.

அசாத்திய திறமைகளோடு அரும்பும் கலைஞர்களை பொறாமையின் புழுக்கத்தில் கால்தடம் போட்டு வீழ்த்துவதில் கை தேர்ந்து உலகப் புகழ் பெற்ற நமது ஈழத் தமிழ் சமூகத்தின் இசைக்கு சேர்.ஜோர்ஜ் மார்ட்டின் போன்றவர்கள் ஒத்துவராத சங்கதிகள்.

''அமைதிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்"

என்ற கவித்துவமான வரிகளோடு 'பாப்' இசைக் கலாச்சாரத்தை அறுபதுகளில் புதிய பரிணாமத்தோடு கட்டியெழுப்பி இன்றளவும் யுத்தத்திற்கு எதிரான கருத்துக்களைப் பாடியதால் நெற்றியில் பொட்டு வைக்கப்பட்ட John Lennonமண்டையைப் போட்ட பின்னரும் Beatlesஸின் கடைசித் தூண் Paul McCartney

வரை இசையரங்குகளைக் கலக்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

இதன் தாக்கத்தால் 'உலகக் கவிதை இயக்கம்' என்ற தலைப்பில் கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம்' காலாண்டிதழில் முன்பொரு முறை நான் எழுதிய விரிவான கட்டுரையின் சில பகுதிகளை இங்கு மீண்டும் பதிவிடுகிறேன் 'காலம்' காலாண்டிதழ் ஆசிரியர் திரு. செல்வம் அருளானந்தம் அவர்களின் அனுமதியுடன்.

'பெரியதோட்டத்திலே

ஒரேயொரு பூ தான் பூத்திருக்கிறது!

ஆயிரக்கணக்கான பட்டுப்பூச்சிகள்

அந்த ஒரு பூவைக் கண்டு கொள்கின்றன.

தேடிக்காண்பதே கவிதை..

தேடாமல் காண இயலாது."

பிரபல எழுத்தாளரும், விமர்சகருமான க.நா. சுப்ர மண்யம் அவர்கள் 'தேடிக்காண்பது' என்ற தலைப்பில் எழுதிய கவிதை இது. எவ்வளவு உண்மை?

1930களில்கம்யூனிஸ்டுகளிடையே வழக்கிலிருந்த new verse என்கிற பதத்தை புதுக்கவிதை என்று மொழிபெயர்த்ததோடு அறுபதுகளில் புதுக்கவிதை இயக்கத்தில் தீவிரமான பங்கெடுத்துக்கொண்டவர் இவர். இவரது கவிதைத் தொகுதியொன்றின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"சங்கீதத்தின் மொழி பிரபஞ்சம் முழுவதுக்கும் உரியது என்கிறார்கள். இது காரணமாகத்தானோ என்னவோ மொழிகளால் எல்லை வகுக்கப்பட்ட கவிதைசங்கீதத்துடன் சேரும்போது பிரபஞ்ச பாஷையாக மாறிவிடுகிறது என்று ஒரு மரபு நம்மிடையே ஏற்பட்டிருக்கிறது. இதனை நான் ஏனிங்கே குறிப்பிடுகிறேனென்றால் தப்பித்தவறி யாராவது சந்தத்தோடு மரபுக் கவிதை எழுதினால் அது கவிதை இலக்கியத்தில் பரிசோதனை முயற்சியென்பதாக விமர்சிக்கும் அளவுக்கு ஞானசிகாமணிகள் நம்மிடையே பெருகிவரும் இந்நேரத்தில் நல்ல கவிதையைப்பற்றிய பிரக்ஞை தேவை என்பதற்காகவே. "கவிதை" என்கின்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதையொன்றை பார்ப்போம்.

'கவிதை வேண்டுமானால்

சொற்களைக் கூராக்கு

இசையை ஒதுக்கிவிடு

உருவகங்களை உயிராக்கு

சிந்தனைகளை நேராக்கு

உபயோகமற்ற பாத்திரங்களை

ஏற்றிவைக்கும் மச்சிருட்டாக

கவிதையை நினைக்காதே"

க.நா.சுப்ரமண்யம் நல்ல கவிதையை அடையாளம் கண்டுகொள்ள அழுத்தம் திருத்தமாக வரைவிலக்கணம் கூறுகிறார்:

'பொதுவாக ஒரு நான்கு விஷயங்கள் சொல்லலாம். மரபுக்கவிதைக்கும், புதுக்கவிதைக்கும் பொதுவான விஷயங்கள் இவை. வார்த்தைச் சேர்க்கைகள் காதில் ஒரு தரம் ஒலித்து உள்ளத்தில் மீண்டும் எதிரொலி எழுப்புகிறதா என்பது முதல் கேள்வி. இரண்டாவதாக எந்தக்காலத்திலுமே வாழ்க்கை எந்தக் காலத்து மனிதனுக்கும் சிக்கலானதாகத் தானிருந்து வந்திருக்கிறது. அந்தந்தக்காலத்துக் கவிதை நல்ல கவிதை. அந்தக்காலத்து சிக்கலை அப்படியே தருகிறது நமக்கு. அப்படி இன்றையபுதுக்கவிதை இன்றைய வாழ்க்கைச் சிக்கலையும், புதிரையும் போலவே முதலில் புரியாதது போல இருந்து படிக்க படிக்கப் புரியத் தொடங்குகின்றதா என்பது மூன்றாவது கேள்வி. கடைசியாக கேட்டுக்கொள்ள வேண்டிய நான்காவது கேள்வி இது. நள்ளிரவில் விழித்துக் கொள்ளும்போது இந்தக்கவிதையில் ஒரு அடியாவது திடுதிப்பென்று காரண காரியமில்லாது மனசில்தானே தோன்றி புது அர்த்தம் தருகிறமாதிரி இருக்கிறதா? எந்தக் கவிதையைப் படித்துவிட்டு இந்த நான்கு கேள்விகளுக்கும் ஆம்..ஆம்..ஆம்..ஆம்.. என்று பதிலளிக்க முடிகிறதோ அந்தக்கவிதை நல்ல கவிதை, உயர் கவிதை என்றுநாம் முடிவு கட்டிவிடலாம். 'புதுக்கவிதை' மட்டும்தான் புதுக்கவிதை என்பதில்லை. பழங்கவிதையும் இன்று வாசித்து அனுபவிக்கும் போது புதுக்கவிதை தான். கவிதைக்கு, எல்லா நல்ல கவிதைக்குமே புதுப்பித்துக் கொள்ளும் சக்தி உண்டென்பது எல்லாமொழி இலக்கியங்களிலுமே நிதர்சனமாக காணக்கிடக்கிற உண்மை.

சிலப்பதிகாரம் அதன் காலத்தில் மட்டுமல்ல இன்றும் புதுக்கவிதைதான். தமிழ் கவிதைக்கு கிழடு தட்டிய பருவமிது என்பதில்யாருக்கும் சந்தேகமிருக்க முடியாது. கவிதையரசி மீண்டும் முன்போலத் தமிழில் கொலு வீற்றிருக்க வேண்டும், உயிருள்ளவளாக இருக்கவேண்டும் என்றால் புதுமுயற்சிகள், புதுச் சோதனைகள் நடைபெற்றாக வேண்டும். யாப்பு, எதுகை,மோனை இருப்பதில் தவறில்லை. நல்ல கவிதைக்கு முட்டுக்கட்டை அதில் இல்லை. இன்றைய வாழ்கையின் சிக்கலை பிரதிபலிக்காமல் இன்றைய சூழலின் குழப்பத்தை எடுத்துக்காட்டாமல் பழமையான மனப்பான்மையே புதுக்கவிதை பிறப்பதற்குத் தடையாகவுள்ளது.

"சாதித்திருக்கிறாயா நீ..

என்றது ஒரு கேள்வி

என்னிடம் இப்பொழுது

பதில் இல்லை

என் உடல் மரித்தபின்

எழும் கல்தூண் முன் கேள்..!"

'சாதனை' என்கிற தலைப்பில் எஸ்.கே. மதுசூதனன் (ஆத்மாநாம்)

எழுதியதொரு கவிதை இது. மரணத்தின் பின்தான் மகத்துவங்கள்

தெரிய வருகிறது.

"ஐன்ஸ்டீனை ஒரு கனவில் நான் கண்டேன்

ப்ரின்ஸ்டன் பல்கலைக்கழகப் புல்வெளியில்..

அது வசந்தகாலம்.

மண்டியிட்டு அவரது இளம்கட்டை விரலை

முத்தமிட்டேன்

போப்புக்குச் செய்வது போல.

அவரது இளம் முகம் ரோஜாக்குமிழியிட்டது

தனியான பிரபஞ்சத்தை

கண்டுபிடித்தேன் நான் ஒரு

கன்னியைப் போல..



மெஸ்கலின் அனுபவத்தில் இருந்து...

பேசினேன் நான்.

''ஆம்... அதுவே தன்னைப் பிறப்பித்துக்கொண்டது"

திறந்த வெளியில் பிரபஞ்சமாய்

வெயிலில் நாங்கள்

மதிய உணவுக்காக உட்கார்ந்தோம்

டென்னிஸ் க்ளப்பில்

பேராசிரியர்களின் மனைவிகள்.

எதிர்பார்த்தது போலவே எங்கள் சந்திப்பு

முடிவற்று.. தொடர்ந்தது

அவர் முஷ்டியை முத்தமிட்ட

என் செயல்

எதிர்பாராமல் புனிதமாயிருந்தது

ஏனெனில்,

அணுகுண்டைப் பற்றி நான்

பேச்செடுக்கவில்லை."

அணு ஆயுத எதிர்ப்புப்பற்றி வலிமையான குரல் கொடுத்த ஒரேயொரு அமெரிக்க கவிஞர் என்ற வகையில் இலக்கிய உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்தவர் அலென் கின்ஸ்பேர்க். (Allen Ginsberg) அவருடைய புகழ் வாய்ந்த கவிதைகளில் ஒன்றான கிறிஸ்துமஸ் பரிசு (X'mas Gift) என்ற கவிதையின் தமிழாக்கம் மேலுள்ளது. ●

NAVA LAW COMPUTEK COLLEGE
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமையான சமூகங்கள் வலிமையான மருத்துவமனைகளை உருவாக்குகின்றன

## ஸ்காபுரோ மருத்துவமனைக்கு ஆதரவளிக்கும் தொழிலதிபர் சுகுமார் கணேசன்



சுகுமார் கணேசனின் ஸ்காபுரோ உணவகத்தில் (தென்னிந்தியாவின் புகழ்பெற்ற சைவ உணவகம் சரவணபவனின் கிளை) பணம் செலுத்தச் செல்லும் அனைவரிடமும் ஒரே கேள்வி கேட்கப்படுகின்றது:

"உங்கள் ஸ்காபுரோ மருத்துவமனைக்கு உதவ உங்களுக்கு விருப்பமா?" என்பதே அந்தக் கேள்வி

1992ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்த சுகுமார் கணேசன் இரண்டு விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியதாக கூறுகின்றார். அவை பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம். தனது குடும்பத்துடன் குடியேற, ஒரு தொழில் முயற்சியை ஆரம்பிக்க தனக்கு ஒரு பொருத்தமான நாட்டை அவர் தேடிக்கொண்டிருந்தார். "உலகிலேயே அதிக வசதிகள் நிரம்பிய, பல கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு இடம் இது," என அவர் கனடா குறித்து கூறுகின்றார்.

புலப்பெயர்வின் பின்னர் ஸ்காபுரோ மருத்துவமனைக்கு ஆதரவளிக்கும் விடயத்தில் தன்னை விரைவில் ஈடுபடுத்திக்கொண்டார் சுகுமார் கணேசன். "இந்த நாட்டில் சுகாதார அமைப்பு மிகச்சிறப்பாக உள்ளது — ஆனால் நாம் அதற்கு ஆதரவளிக்க வேண்டும்." என்று விளக்குகின்றார்.

கனடிய சமூகத்திற்கு தனிப்பட்ட முறையிலும் தனது தொழில் மூலமாகவும் உதவிகளை செய்துள்ளார் சுகுமார் கணேசன். SUGSHE நிறுவன குழுமத்தின் தலைவராக உள்ளார் இவர். பல்வேறு தொழில்களுக்கு மத்தியில், கனகாம்பிகை தங்க மாளிகை, மற்றும் சரவணபவன் உணவகத்தின் உள்ளூர் கடைகள் போன்றவற்றையும் நிர்வாகிக்கின்றது இந்த குழுமம்.

ஸ்காபுரோ மருத்துவமனைக்கு நிதி திரட்ட, சமூகத்தில் உள்ள கலாச்சார குழுக்களுக்கு, பல மனிதநேய சங்கங்கள் உதவுகின்றன. இந்த முயற்சிகள் அனைத்தும் 'நான் எனது ஸ்காபுரோ மருத்துவமனைக்கு ஆதரவளிக்கிறேன்' பிரச்சாரத்தின் ஒரு பகுதி. இந்தப் பிரச்சாரம் பல புதுமையான நிதிதிரட்டும் அணுகுமுறைகளைக் கையாளுகின்றது.

சுகுமார் கணேசன் தனது உணவகங் களிலும், நகைக் கடைகளிலும் மருத்துவமனை யின் 'புதிதாகப் பிறந்த குழந்தை மற்றும் குழந்தைப் பராமரிப்பு' திட்டத்திற்கு நிதிதிரட்ட நன்கொடைப் பெட்டிகளை வைத்துள்ளார்.

மருத்துவமனைக்குப் புதிய MRI இயந்திரம் வாங்க சுகுமார் கணேசன் நிதி சேகரிப்பொன்றை முன்னெடுத்தார். 2014ஆம் ஆண்டு அக்டோபரில், $12,000 பணமும், ஜூலை 2015இல் $50,000 பணமும் திரட்டிக் கொடுத்தார். இவர் திரட்டிக்கொடுத்த நிதியில் வாடிக்கையாளர்களின் நன்கொடை,ஊழியர்கள் மற்றும் அவரது நிறுவன உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்பும் அடங்கும்.

சுகுமார் கணேசன் ஸ்காபுரோ மருத்துவமனைக்கு மட்டும் ஆதரவளிக்கவில்லை, இவரது தாயாருக்கு இங்கு டயாலிஸிஸ் சிகிச்சை அளிக்கப்பட்டதால் இவருக்கு தனிப்பட்ட முறையில் இந்த வைத்தியசாலையுடன் ஒரு தொடர்பு உள்ளது.

பாதுகாப்பு மற்றும் கவனிப்பிற்கு அதிக இடம் மற்றும் தொழில்நுட்ப ஆதாயங்கள் ஆகியவை அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லை. சமூகத்தின் தாராள ஆதரவுடன், இந்த மருத்துவமனை உலத்தரம் வாய்ந்த சிகிச்சையைத் தொடர்ந்து அளிக்க இயலும்.

இந்த மருத்துவமனையில் உள்ள வசதிகளை நீங்கள் பயன்படுத்தினால், ஒவ்வொருமுறை நீங்கள் உதவும்போதும் அந்த உதவி இந்த மருத்துவமனைக்கு எவ்வளவு உதவிகரமாக இருக்கும் என்பதனை நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள்," எனக்கூறுகின்றார் கணேசன் சுகுமார். ●


# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

V. SRI
Certified Insolvency Counsellor

CREDIT SOLUTION CENTRE
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sajan** Shan B.Sc
Sales Rep.
416-451-8992



**Sasi** Kunaratnam D.I.T
Broker
416-358-8638

W www.hometeam360.ca www.futurecondos.ca

T 416 289 3333 F 416 289 4535 A 885 Progress Avenue Suite 209 Toronto ON M1H 3G3

RE/MAX
Realtron Realty Inc., Brokerage
Independently Owned and Operated

hometeam360

# FOR SALE

### 20 Bonecho Crt




**Tapscott/ McLevin**

Gorgeous 3 Bedroom Built By Fernbrook Homes. New Painted Double Garage, Front Of Mall, Library, School,Minutes To Ttc And 401 Hway,Close To Church And Mosque Very Convenient Location. Extended Walk - In- Closet In Master Bedroom.

### 103 The Queensway #2907




**Lakeshore/ Windermere**

Beautiful Luxury 1 Bedroom Pent House Water Front Condo With An Gorgeous Panoramic South West Lake And City View. Floor To Ceiling Window With 10 Ft Ceilings. Open Concept Upgraded Kitchen W/Kitchen Granite Counter Top And Staineless Steel Appliances.

### 3351 Markham Rd #108



**Markham/ Steeles**

**Total Area:715 Sq Ft**
**Commercial Property**



**Mohan** PANCHALINGAM
Sales Representative
Dir: 647.321.7575
E: mohan_panch@hotmail.com
Bus: 416.287.2222 | Fax: 416.282.4488

RE/MAX COMMUNITY
Realty Inc, Brokerage
1265 Morningside Ave., # 203
Toronto ON M1B 3V9
Each Office Independently Owned and Operated


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



























# Royal Brokers
## Annual Awards Night - 2016

RE/MAX THIPAN RAJ
NAVA LAW
THE GUARDIAN
INFORCE LIFE
NS DENTAL
COMPUTEK COLLEGE
Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உங்கள் வசதிக்கு ஏற்ற, அதிபயன் தரும் ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும். உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு. வரிக் கழிவு பெற்ற சேமிப்பு. ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!

**Term Life Insurance**

| Age | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 18 | 15 | 19 | 15 | 21 | 17 | 28 | 22 | 43 | 31 | 67 | 48 |
| 500K | T20 | 36 | 25 | 37 | 27 | 40 | 30 | 56 | 40 | 88 | 60 | 148 | 97 |
| 1 Mill | T20 | 68 | 45 | 68 | 48 | 75 | 53 | 106 | 75 | 171 | 115 | 288 | 188 |
| **Permanent Life Insurance - Premium Never Change** | | | | | | | | | | | | | |
| 200K | WL | 81 | 71 | 98 | 89 | 121 | 105 | 150 | 131 | 196 | 166 | 233 | 200 |
| 500K | WL | 188 | 164 | 232 | 201 | 289 | 251 | 364 | 313 | 476 | 401 | 590 | 488 |
| 1 Mill | WL | 363 | 310 | 450 | 387 | 566 | 484 | 712 | 606 | 935 | 791 | 1129 | 965 |
| **Critical Illness Insurance- 100% Money Back** | | | | | | | | | | | | | |
| 50K | T75 | 44 | 42 | 56 | 51 | 70 | 65 | 90 | 85 | 120 | 113 | 177 | 148 |
| 100K | T75 | 76 | 72 | 96 | 88 | 123 | 112 | 157 | 145 | 212 | 205 | 321 | 265 |

- கொடிய நோய்க்குரிய காப்புறுதி
- அடமானக்கடனுக்குரிய காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
- 20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி
- **Disability Insurance**
- **Final Expense Insurance**
- பிரயாணக் காப்புறுதி
- சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி

**முதலீட்டுத் திட்டங்கள்**
**• RRSP • RESP • TFSA**



**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "When it comes to lending, we make it happen"

- 2nd Mortgages
- Bad Credit, No Problem
- No Income, No Problem
- Consolidate Debts
- Tax & Mortgage Arrears
- Pay Off High Interest Credit Cards
- Renovations
- Private Mortgages

**We specializes in private mortgage lending with unlimited funds. Satisfaction is guaranteed and we will get you on the road of financial freedom and peace of mind.**

GGC Good Grade Capital Incorporated
FSCO Admin. Lic. #:12577
www.ggcapitalinc.com
akila@ggcapitalinc.com

- New Immigrants Welcome
- Bad Credit
- Self Employed
- Open Mortgage
- Pre Approval
- Non-residents

## MORTGAGE APPROVED... I AM HERE TO FIND THE RIGHT PRODUCT FOR YOU....

- 1ST AND 2ND MORTGAGES
- PURCHASES, REFINANCES AND RENEWALS
- COMMERCIAL LOAN
- BUSINESS OPERATING LINE
- CONSTRUCTION LOAN
- OWN PRIVATE FUNDING
- EQUIPMENT LEASING & FINANCING
- WE OFFER CONSTRUCTION DRAW MORTGAGES...
- CONSUMER PROPOSALS AND BANKRUPTCIES
- HOME EQUITY TAKE OUT
- CREDIT SETTLEMENTS

GOOD GRADE MORTGAGES
Your Mortgage Architects
Brokerage Lic. No. 12311
www.goodgrademortgages.ca
Akila@goodgrademortgages.com

**Akila Senthil**, AMP
CEO, Principal Broker
Broker Licence #: M08002166
C: 416-895-4321
T: 905-366-4322, F: 905-366-4326
2600 Skymark Ave, Building 10, Unit 104A, Mississauga ON L4W 5B2
2761 Markham Road, Unit A3, Toronto ON M1X 0A4



# Meta Networks

Meta Networks
For All Your Electric & Electronic Needs




வீட்டுக்கு உள்ளும் வெளியிலும் Pot Light & Spot Light பொருத்துவதற்கு இப்போது 25% கழிவு வழங்கப்படுகிறது.
குறிப்பு: இச்சலுகை குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே

25 % OFF Until May 15th




<< We Are Experts In fixing Pot Lights & Designing >>

தரமான, விரைவான, நிறைவான சேவை


Call Us For Free Estimate 416 300 9964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா மத்திய வங்கியும் வட்டி விகிதமும்

செல்வா செல்வதுரை
Real Estate Broker
Home Life Galaxy Real Estate Ltd



மத்திய வங்கி மீண்டும் வட்டி வீதத்தை (Bank rate) ஐ அதே 1/2 விகிதத்திலேயே தொடர்ந்தும் வைத்திருக்க தீர்மானித்துள்ளது. ஏனெனில் கனடாவின் பொருளாதாரம் தொடர்ந்தும் சிக்கலான நிலைமையிலேயே உள்ளது. கனடாவின் பொருளாதாரத்தை ஒருவர் மிக அழகாக வர்ணித்திருக்கிறார். அதாவது இது ஒரு DONUT ஐ போல எனவும், இது இதன் நடுப்பகுதியில் எட்டிப் பார்த்தால் ஒரு பெரிய ஓட்டை என்றும், கடையில் பார்த்தால் நல்ல இனிப்பான சிஸிணிகிவி போல இருப்பதையும் அவதானிக்கலாம் என விளக்கம் தந்துள்ளார். கனடாவின் பொருளாதார நிலைமையும் அப்படித்தான். நன்றாக ஊர்ந்து கவனித்தால் கனடாவின் பொருளாதாரம் கனிப்பொருள் (RESOURCE BASE) சார்ந்ததாக இருப்பதால் இந்த ஏற்றுமதி சந்தையின் மந்த நிலை காரணமாக நடுவில் ஒரு ஓட்டையும் மற்றும் Real Estate சந்தையில் ஒரு வேகமான அசூர வளர்ச்சி காரணமாக ஒரு CREAMY நிலையும் தென்படுகிறது.

கனடாவின் பொருளாதாரம் எப்பவுமே ஒரு (Resource) கனிப்பொருள் ஏற்றுமதியை நம்பியே எப்பொழுதும் இருந்திருக்கிறது. எமது (Manufacturing) உற்பத்தி செய்யும் திறன் உலக சந்தையில் வரவர குறைந்து கொண்டு வருகின்றது என ஒரு புள்ளிவிபரம் கூறியுள்ளது. இதனால் நமது அரசு Reserch இற்காக செலவிடும் தொகையை அதிகரிக்க வேண்டும். மேலும் அரசு சிறு கைத்தொழிலாளர்களையும் ஊக்குவிக்க புதிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நமது அரசு இந்த Manufacturing தொழிற்சாலைகளை ஊக்குவிக்க எடுக்கும் நடவடிக்கை போதாமையே இன்று நாம் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சனைக்கு காரணமாகும். இந்த அரசு இந்த தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு புதிய (Inovative) முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஏற்றாற் போல் policy மாற்றங்களை கொண்டு வரவேண்டியது அவசியமாகும். இப்படியே போனால் நாம் 50 ஆண்டுகளிற்கு பின் மேலும் பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரும்.

ஆகையினால் இப்போது இருந்து தகுந்த திட்டங்களை நீண்ட கால அடிப்படையிலும், குறுகிய கால அடிப்படையிலும் அரசு திட்டமிடல் வேண்டும். கனடா மாதிரி ஒரு வல்லரசு போதிய அளவு கனிமவளங்கள் கொண்ட நாடு இதற்கான திட்டங்களை இப்பொழுது இருந்தே போடாவிடில் எதிர்கால சந்ததியினர் கஷ்டங்களை சந்திக்க நேரிடும். கனடிய அரசு எதிர்நோக்கும் இந்த பிரச்சனைகளை சமாளிக்கும் திறன் உள்ளதாக இருக்கின்றதா? என்பது கேள்விக் குறிதான். தற்போது உள்ள நிலவரம் என்னவென்றால் ஒரு பிரச்சனையை சமாளிக்க எத்தனித்தால் இன்னுமொரு பிரச்சனையை எதிர்நோக்க வேண்டி வரும். உதாரணமாக கனடிய பொருளாதாரத்தை ஊக்குவிக்க மத்திய வங்கி வட்டி வீதத்தை குறைத்தே ஆகவேண்டும். ஆனால் அதை செய்ய நேர்ந்தால் ஏற்கனவே சூடாக உள்ள வீட்டு சந்தை மேலும் சூடு பிடிக்கும். பின்னர் வீட்டின் விலை கட்டுப்பாடு இல்லாமல் உயரும். அது மீண்டும் ஒரு வீட்டு சந்தை சரிவு ஏற்பட்டால் அது பெரும் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும். இல்லாமல் வட்டி விகிதத்தை உயர்த்தினால் வீட்டு விலை உயர்வை கட்டுப்படுத்த முடியும். ஆனால் மற்றைய துறைகள் வியாபார ரீதியாக மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும். ஆக வட்டி வீதத்தை உயர்த்தவோ குறைக்கவோ முடியாத இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

## வட்டி வீதம் குறையுமா?

இதனால் வட்டி வீதத்தை உயர்த்தவும் முடியாது அல்லது குறைக்கவும் முடியாமல் கனடிய மத்திய வங்கி திண்டாடுகிறது. ஆனாலும் மத்திய வங்கி தொடர்ந்து நீண்ட காலத்திற்கு இந்த வட்டி வீதத்தை இப்படியே வைத்திருக்க முடியாது. ஆகையால் அடுத்த தடவை அல்லது இன்னும் 3 தொடக்கம் 6 மாத காலத்தில் வட்டி வீதத்தை குறைத்தே தான் ஆகவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே மத்திய வங்கியின் வட்டி குறைப்பை நாம் இந்த ஆண்டில் எதிர்பார்க்கலாம். ஆனாலும் எமது வீட்டுக்கடன் வட்டி வீதத்தில் பெரியளவு மாற்றம் இருக்க மாட்டாது என நான் கருதுகிறேன். வணிக வங்கிகள் Bank Rate குறைந்தாலும் சில சமயங்களில் வேறு புறக்காரணிகளால் தமது வட்டி விகிதத்தை குறைக்காமல் முன்னர் விட்டிருக்கிறார்கள். இந்த தடவையும் அதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும் சில நிர்ப்பந்தத்தினால் சிறியளவு மாற்றத்தை அவர்கள் கொண்டு வரலாம். இன்று Equitax எனும் ஒரு Credit நிறுவனம் குறிப்பிட்ட அறிவித்தலின்படி கனடிய மக்கள் சென்ற வருடங்களில் எதிர்பார்த்ததை விட தமது கடன் தொகை மீள செலுத்தியுள்ளார்கள் எனவும் Bankruptcy rate குறைவடைந்துள்ளதையும் தெரிவித்துள்ளனர்.

## வரலாறு காணாத வீடு விற்பனை - இது தொடருமா?

வரலாறு காணாத வீடு விற்பனை கடந்த மாதம் GTA இல் இடம் பெற்றுள்ளதாக TORONTO REAL ESTATE ஙிளிகிஸிஞ் (TREB) அறிவித்துள்ளது. இது வீடு விற்பனையாளர்களுக்கும், விற்பவர்களுக்கும் ஒரு நற்செய்தியாகும். ஏனெனில் இவ்வளவு வீடுகள் விற்பனையானது என்றால் வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கையும் அதிகமே ஆகும். இது பொருளாதாரத்திற்கு நல்லது என்றாலும் இதை இப்படியே விட்டால் எதிர்வரும் காலத்தில் வீடு வாங்குபவர்கள் மிகவும் பணசிக்கல்களில் மாட்டிக் கொள்வார்கள். குறிப்பாக இளம் சந்ததிகள் ஏற்கனவே தங்களால் இவ்வளவு விலையில் வீடு வாங்க முடியாமல் அவஸ்தைப்படுவதாக கூறியுள்ளனர்.

VANCOUVER இலும் TORONTO பெரும்பாகத்தில் வசிப்பவர்களும் இந்த விலை உயர்வினால் பெரிய அவஸ்தைபடுவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. இந்த விலையேற்றம் ஒருபுறமிருக்க இந்த ஆண்டு மில்லியன் டொலர் வீடுகளுக்கு அதிக அளவு வரவேற்பு (Demand) இருக்குமென அதிர்வு கூறப்பட்டுள்ளது.

இது எப்படி சாத்தியமாகும் என்று நீங்கள் கருதலாம். பெருமளவில் வெளிநாட்டிலிருந்து பெருமளவு பணவரவு நாட்டுக்குள் வருவதாலும், பெரும்பாலான பணம் Real Estate இல் முதலிடப்படுவதாலும் இத்தகைய விலை அதிகரிப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

பொதுமக்கள் இந்த பணவரவையும் இதன் முதலீட்டையும் மட்டுப்படுத்த அரசு ஏதாவது செய்ய மாட்டாதா என ஆதங்கம் தெரிவித்துள்ளனர். கனடா மாதிரி ஒரு திறந்த பொருளாதாரத்தில் இம்மாதிரியான பணவரவை தடுப்பது மிகவும் கடினமான காரியமாகும். ஆகையால் அரசு வேறுவிதமான கடின நடவடிக்கைகளை கையாள வேண்டியுள்ளது.

இதன் காரணமாக முதலாவதாக கடந்த மாதத்திலிருந்து அரசு வங்கி கடன் நிபந்தனைகளை கடினப்படுத்த முயற்சி மேற்கொண்டு, முன்னர் 5% முதலீட்டுடன் வாங்க கூடியதாக இருந்த சட்டம் இப்போது முதல் $500,000 டொலருக்கு 5% முதலீடும் அடுத்த $500,000 டொலர் வரைக்குமான தொகைக்கு 10% என உயர்த்தியுள்ளது. அதாவது நீங்கள் $700,000 டொலருக்கு வீடு வாங்குவதாக எடுத்துக் கொள்வோம். நீங்கள் முதலிட வேண்டிய தொகை (Down Payment) முதல் $500,000 க்கும் 5% படி $25,000 மிகுதி $200,000 க்கும் 10% படி $20,000 = மொத்தம் TOTAL DOWN PAYMENT $45,000 ஆகும்.

முன்னர் இத்தொகை $35,000 டொலர் ஆக இருந்தது. இந்த அரசால் கொண்டு வரப்பட்ட மாற்றம் ஏழைகளை வீடு வாங்கவிடாமல் தடுக்குமே ஒழிய பணக்காரர்களை எந்த விதத்திலும் பாதிக்காது. குறிப்பாக இது இளம் வயதினரைத் தான் வீடு வாங்க முடியாமல் தடுக்கும்.

## இளம் வயதினர் எதிர்காலத்தில் எப்படி வீடு வாங்கலாம்

இளம் வயதினர் வீடு வாங்க முதலீட்டு தொகையை (Down Payment) எப்படி சேர்ப்பது என்று குழம்பி இருப்பீர்கள். ஆகையால் சில தகவல்களை இங்கு தரலாம்.

1. RRSP யில் முதலிடுவது. இதில் முதலிட்டு நீங்கள் TAX REFUND பெற்றுக் கொள்வதுடன் இப்பணத்தை மீள வங்கியில் இருந்து வட்டியில்லா கடனாக பெற்று வீடு வாங்குவதற்கு பாவிக்கலாம். நீங்கள் கடனாக பெறக்கூடிய தொகை ஆக கூடியது ஒருவருக்கு $25,000 டொலர் மட்டுமே.

2. TFSA - Tax Free Saving Account — இந்த சேமிப்பு திட்டத்தில் நீங்கள் வருடம் ஒன்றுக்கு $5500 டொலர் செலுத்தி அதை வட்டி வரியில்லாமல் சேமிக்கலாம்.

3. உங்கள் பெற்றோரிடம் வீடு, வியாபாரம் இருந்தால் அவர்கள் அந்த வீட்டுக்கு எதிராக கடன் பெற்று உங்களிற்கு உதவலாம்.

4. நீங்கள் சேமிக்கும் பணத்தை முதலீடு செய்து அதை பெருக்குவிக்கும் வழிகளை ஒரு சிறந்த Investment Advisor ஊடாக செய்து கொள்ளலாம். ●

THIPAN RAJ · NAVA LAW · THE GUARDIAN · INFORCE LIFE · NS DENTAL · COMPUTEK COLLEGE · Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத் திருநாள் பெரிய வெள்ளி

"இதுவரை கடந்து சென்றுள்ள அத்தனை நூற்றாண்டுகளையும் நன்கு ஆராய்ந்து உலக வரலாற்றில் தனி ஒருவர் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களின் தாக்கத்தை அளவிட்டால் இவ்வுலகில் வாழ்ந்தவர்களில் அதிமுக்கியமானவர் இயேசு என்பது மிகத் தெளிவாகிறது."

2000 வருடங்களுக்கு முன்னர், மத்திய கிழக்குப் பகுதியில் பாலஸ்தீன் பிரதேசத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் சம்பவம் நிகழ்ந்தது. இந்த நிகழ்வு மனித வரலாற்றில் பாரிய தாக்கத்தையும் பல்வேறு சமூகவியல் மாற்றங்களையும் தோற்றுவித்தது. பிரபஞ்சம் முழுவதையுமே இயக்கும் சர்வ வல்லமை உடையவரான இறைவனின் ஏக குமாரன் கிறிஸ்து இருளான இந்த உலகிற்கு அருளான ஒளியாக இவ்வுலகில் அவதரித்த இச்சம்பவம், பாவங்களால் கறைப்பட்டிருந்த மனித சமுதாயத்திற்கு விரைவான விடியலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை உருவாக்கியது.

அன்று சாதாரணமானதெனக் கணிக்கப்பட்ட இந்த நிகழ்வு பின்னர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியமை வரலாற்று உண்மை. இறைகுமாரன் இயேசுவின் பிறப்பு என்னும் இச்சம்பவம், உலக வரலாற்று வருடங்களை கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.) என்றும் கிறிஸ்துவுக்கு பின் (கி.பி.) என்றும் வேறுபடுத்தி அளவிடும் தன்மையுடையதாக மாறுவதற்கான அடிப்படையாக இருந்தது. இதனை நோக்கும் போது இந்த நிகழ்வின் தனித்துவமான முக்கியத்துவம் புலனாகின்றது.

செல்வச் செழிப்புடையவராக, மாடமாளிகையில் பிறக்கும் வல்லமை கொண்டவரான தேவகுமாரன் தன்னை ஏழ்மைப் படுத்தி மாட்டுத்தொழுவத்தில் பிறந்து பணிவின் பெருமையை வெளிப்படுத்தினார். இவ்வுலகில் 33 வருடங்கள் வாழ்ந்த இயேசு மனித இனத்தின் மீட்புக்காக சிலுவையில் உயிர் நீத்த போது மீண்டும் அவர் தன்னைத் தாழ்த்தினார்.

தன்னலமற்ற தியாகமும், பிறர் வாழ தன்னை ஈந்திட்ட தன்மையும் கொண்டவராக வாழ்ந்து, ஒளி தந்து கரைந்து கல்வாரி மலையுச்சியில் சிலுவை மரத்தில் உயிரிழந்த இயேசுவின் மரணம் பாவத்தின் அடிமைத்தனங்களை நீக்கி மனித இனத்தின் விடிவிற்கான வாழ்வைத் தொடங்கி வைத்தது.

உலக வரலாற்றில் ஒருவரது பிறப்பு மட்டுமன்றி, அவரது மரணமும் அத்துடன் அவை இரண்டிற்கும் இடைப்பட்ட வாழ்க்கைக் காலமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது என்றால் அது தேவகுமாரன் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு மட்டுமே என நிச்சயமாக வலியுறுத்திக் கூறலாம்.

வருடத்தில் வரும் அத்தனை வெள்ளிக்கிழமைகளிலும் புழழன குசனையல என அழைக்கப்படும் பெரிய வெள்ளி மட்டும் உலகளாவிய வகையல் தனித்துவம் மிகுந்ததாக, அசாதாரண முக்கியத்துவம் பெற்றது ஏன்?

- இறைவனின் ஏக குமாரனாகிய இயேசுக் கிறிஸ்து மனித குலத்தின் விடிவுக்காக தியாக வேள்வியில் சிலுவை மரத்தில் தன்னுயிரை நீத்த புனித நாள் — பெரிய வெள்ளி!
- களங்கம் எதுவும்; அற்றவரான தேவகுமாரன் மனித இனத்தின் பாவங்களைத் தானாகவே வலிந்து ஏற்று கல்வாரி மலையுச்சியில் பலியாகிய தியாக தினம் — பெரிய வெள்ளி!
- அன்பின் ஆழம் எதுவரை செல்லும் என மனித இனத்திற்கு தேவன் உணர்த்திய உன்னத நாள் — பெரிய வெள்ளி!
- பெத்லேகம் நகரில் கிறிஸ்து பிறந்த போது திசை தெரியாமல் தடுமாறிய மூன்று அரசர்களுக்கு, குழந்தை இயேசு பிறந்த இடத்தை சென்றடைய வழிகாட்டியது — ஓர் விடிவெள்ளி. அதேபோன்று ஓர் கிறிஸ்தவனை தனித்துவமாக இனங்காட்டும் அடையாளமான சிலுவை மரத்தில் இயேசு தன்னைப் பலிக்கடாவாக்கிய நிகழ்வினை மிகத் தெளிவாக இனங்காட்டுவது — பெரிய வெள்ளி!

சிலுவையின் பாதையில் மட்டுமே விடுதலைக்கான விடியல் உண்டு என்று தன்னுயிரை நீத்து உணர்த்தியவர் தேவகுமாரன் இயேசுக்கிறிஸ்து. அதேவேளை இயேசுவின் மரணம் உலக மக்கள் அனைவருக்காகவுமே நிகழ்ந்தது என்பது மறுக்கவும் மறைக்கவும் முடியாத உண்மை.


அவமானத்தின் சின்னம் என கருதப்பட்ட சிலுவை எவ்வாறு மீட்பின் சின்னமாக மாறியது?

ரோம தேசத்தின் அரச கலாச்சாரத்தில் மிகவும் கொடிய குற்றவாளிகள் மட்டுமே சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டனர். இயேசுவின் போதனைகளை எதிர்த்தவர்கள் அவர் மீது பல்வேறு வகையான போலியான குற்றங்களை சுமத்தி அவரை எப்படியும் சிலுவையில் மரணிக்கச் செய்ய வேண்டுமெனத் தீவிரமாக செயற்பட்டனர்.

தமது சொந்த நலன்கள் பாதிக்கப்பட்டதன் விளைவாக இயேசுவின் எதிரிகள் அவரை சிறைப்பிடிக்க நயவஞ்சகமாக திட்டம் திட்டினர். மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற அந்தப் புனிதரை எவ்வாறு பிடிப்பது என அவர்கள் ஆலோசனை செய்தனர்.

எனவே கிறிஸ்துவின் 12 சீடர்களில் ஒருவனாகிய யூதாசை தமது வலையில் சிக்கவைத்து இயேசுவின் எதிரிகள் அவனுக்கு 30 வெள்ளிக் காசை வஞ்சகமாக வழங்கி இயேசுவை சிறைப்பிடிக்க வழிவகுத்தனர்.

மனித இனம் ஆரம்பமாகிய காலம் முதல் இன்றுவரைக்கும் கூட இருந்தே குழிபறிக்கும் தன்மையும் நம்பிக்கைத் துரோகமும் தொடர்ந்து நடைபெற்று வருவது வேதனைக்குரிய விடயங்களாகிவிட்டன.



தேவகுமாரனை சிலுவையில் அறைந்து கொல்லும் முயற்சியில் அவரது எதிரிகள் வெற்றி பெற்றனர். ஆனால் வெற்றி என அவர்கள் கணக்கிட்டது பாரிய தோல்வியாக மாறியது. ஏனெனில் சிலுவை மரணம் மனித இனத்தின் வாழ்விற்கான விடிவெள்ளியாக மாற்றம் அடைந்தது. எனவே இறைகுமாரனின் திருப்பாடுகளின் வெள்ளியானது சோகமான வெள்ளி என்பதைவிட மானிடத்தின் மீட்புக்கான விடிவெள்ளி என நாம் நிச்சயமாக நம்பலாம்.

துன்பப்படும் ஒவ்வொரு மனிதனும் சிலுவையின் வழியில் விடியலைக் கண்டடைவான் என்பது இயேசு தரும் நம்பிக்கை. சிலுவையில் தன்னுயிர் நீத்த இறைகுமாரன் மரணத்தை வெற்றி கொண்டவராக 3வது நாள் உயிர்த்தெழுந்த போது அவரது சிலுவை மரணம், முழு மனித இனத்திற்கான நம்பிக்கையை ஊட்டி புதுவாழ்வு வழங்கும் நிகழ்வாக அமைந்தது.

சமுதாயத்தின் பாவக்கறைகளை நீக்க வேண்டும் என இயேசு செயற்பட்டபோது, அவரது போதனைகளால் பாதிக்கப்பட்ட அவரது எதிரிகள் அவரை ஓர் புரட்சிவாதி எனக் குற்றம் சாட்டினர். ஆனால் கிறிஸ்து செய்த புரட்சி என்ன?

அவர் அன்பிற்காக புரட்சி செய்தார். நண்பனுக்கு மட்டுமல்ல பகைவனுக்கும் அன்பு காட்ட வேண்டும் என்று புரட்சி செய்தார். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களுடன் உறவாடி சமத்துவ புரட்சி செய்தார்.

நீதிக்கான நியாயமான போராட்டத்தை சிலுவைகளும் மரணங்களும் தடுத்து நிறுத்த முடியாது. என்றோ ஒருநாள் அத்தனை தியாகங்களும் பிரவாகமாகப் பொங்கி எழுந்து வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதே இயேசுவின் வாழ்வு தரும் நம்பிக்கை நிறைந்த செய்தியாகும்.

மரணிப்பதனால் விடிவு ஏற்படும்!

இழப்புகளால் உரிமைகள் பாதுகாக்கப்படும்!

கல்வாரி மலை உச்சியில் இடம்பெற்ற சிலுவை மரணம் இந்த உண்மையை உரத்த ஒலியுடன் பறைசாற்றுகிறது.


மரணம் என்பது மனித வாழ்க்கை வட்டத்தின் இறுதிவார்த்தை அல்ல!

கருவறையில் தொடங்கி கல்லறையில் முடிவது அல்ல!

இதனை சிந்திக்க அழைக்கும் தியாகத் திருநாளே பெரிய வெள்ளி ●.

எஸ். ஆர். ராஜபாலன்

THIPAN RAJ NAVA LAW THE GUARDIAN INFORCE LIFE AJAX NS DENTAL COMPUTEK COLLEGE Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழர் வாழ்வியல் பற்றிய செங்கை ஆழியானின்

# பார்வையும், பதிவுகளும்!

**வல்வை. ந.அனந்தராஜ்**

'சாஹித்திய ரத்னா' என்ற இலக்கியத்திலான உயர் விருதினைப் பெற்று தமிழ் இலக்கிய உலகுக்குப் பெருமை சேர்த்த செங்கை ஆழியான் அவர்கள் தனது பணியை இடையில் நிறுத்தி எம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற அந்தத் துன்பகரமான செய்தியை மீண்டும் அசைபோட்டு;ப பார்க்க முடியவில்லை.

“செங்கை ஆழியான்” என்ற புனைப் பெயரில் பல நூற்றுக் கணக்கான இலக்கியங்களையும், அறிவு சார்ந்த நூல்களையும், படைத்து உலகத் தமிழர்களால் நன்கு அறியப்பட்ட ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்த கலாநிதி கந்தையா குணராசா. அவர்கள் சிலகாலம் சுகவீனமுற்ற நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் காலமகிவிட்ட அந்தச் செய்தி உலகத் தமிழர்களையே ஒரு கணம் உலுப்பிவிட்டது.!

யார் இந்தச் செங்கை ஆழியான்.?

வளம் பல நிறைந்தும் வளமே இல்லாத தீவகத்தின் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அன்னம்மா தம்பதிக்கு எட்டாவது மகனாக 25 ஜனவரி 1941 இல் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் வசித்த பொழுது பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையிலும் இடைநிலை மற்றும் சிரேஸ்ட இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தனது மூன்றாம் நிலைக் கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்று புவியியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியே றினார். 1984ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தையும், 1991ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் தெரிவு செய்யப்பட்ட செங்கை ஆழியான் அப்பொழுது வவுனியாவில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பொழுது,பெற்ற அனுபவங்களும்,அவர் பல்கலைக் கழகத்தில் பெற்ற புவியியல் சிறப்புப் பட்டமும், யாழ் மாநகர சபை ஆணையாளராகக் கடமையாற்றிய பொழுது அவரது அனுபவங்களும், பின்னர் யாழ் பல்கலைக் கழகத்தின் பதிவாளராகப் பெற்ற அனுபவங்களும் அவரை ஒரு புதிய உலகத்திற்கு அழைத்துச் சென்றது.

செங்கை ஆழியான் ஒரு பல்துறை ஆளுமை பெற்ற எழுத்தாளர் என்பதை அவரது இலக்கியங்களினூடாகப் பார்க்கலாம். மக்களை நேசிப்பவன் எவனோ, அவனே மக்களின் மனங்களைப் புரிந்து கொண்டுள்ளவனாகத் தன்னை வளர்த்துக் கொள்வான் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த செங்கை ஆழியான தனியாக ஒரு துறையில் நின்றும் இலக்கியங்களைப் படைக்கவில்லை. அவரது பார்வை பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்வதாக இருந்ததாலேயே அவரிடம் இருந்து பல நூற்றுக் கணக்கான அற்புதமான இலக்கியங்களையும், அறிவு நூல்களையும் தமிழுலகம் பெற்றுப் பயனடையக் கூடிய தாக இருந்தது. அந்த வகையில் ஆக்க இலக்கியத் துறையிலும்,சமுக சேவையிலும் அவர் ஆற்றிய பணிகளைப்பின்வரும் வகுதிகளுக்குள் உள்ளடக்கலாம்:

- தமிழ் புனை கதை இலக்கியம்
- கல்வி மற்றும் புவியியல் அறிவு சார்ந்த ஆக்கங்கள்.
- பொது அறிவு, மற்றும் பொது உளச்சார்பு சார்ந்தவை
- பண்டைய இலக்கியங்களின் தொகுப்பு நூல்களின் ஆக்கங்கள்
- தமிழர் வாழ்வியல் பற்றிய பார்வைகளின் ஆவணப்படுத்துகைகள்.
- சமுக சேவையில் அவர் ஆற்றிய பணிகள்
- நிர்வாக சேவையில் அவரது அனுபவப் பகிர்வுகள்

ஆம்.. அந்த வகையில் செங்கையாழியான் ஆற்றிய பல் பரிமாணம் கொண்ட பார்வைகளை விரித்து எழுதுவதாயின அவற்றைப் பலதொகுதிகளைக் கொண்ட நூல்களாகவே தொகுக்க முடியும்.

ஆனால், இன்று ஈழத் தமிழ் மக்கள், தமது அடையாளத்தை இழந்து, அவர்களின் வாழ்வியல் கோலங்களையும், தமிழர்களின் தனித்துவமான வரலாறுகளையும் இழந்து போய்க் கொண்டிருக்கும் நிலையில் செங்கையாழியான் அவர்கள் எமது மண்ணில் தமிழ்ரகளுக்கு என இருந்த தமிழ் அரசின் பெருமை பற்றியும், காலத்திற்குக் காலம் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளினாலும், சிங்கள அரச படைகளினாலும் தமிழினம் பட்ட அவலங்களையும், தமிழர்களின் இழக்கப்பட்டு வரும் பூகோள நலன் சார்ந்த வாழ்வியலையும் நூல் வடிவில் மிகச் சிறப்பாக ஆவணப்படுத்தியமையினால் தமிழர்களின் வாழ்வியலின் இருப்பை நிலை நிறுத்தியிருக் கின்றார்.

அவர் ஒரு உயர் அரச அதிகாரியாக இருந்த போதும், அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையாகவும், “ஆமாம்” போடும் அரச சேவகனாகவும் இருந்திருந்தால், அவர் இன்னும் உயர் பதவிகளைப் பெற்று சுகபோக வாழ்வை அனுபவித்திருக்கலாம். ஆனால் மக்களையும், தாய் மண்ணையும் நேசித்த ஒரே காரணத்தினால் இந்த மண்ணில் அவை தொடர்பான ஆவணப்படுத்துகைகள் நாளைய சந்ததிக்கு ஒரு வரலாறாக அமைந்து விட்டது.

அவற்றுள் யாழ்ப்பாணத் தமிழரசர்கள் தொடர்பான சரித்திர ஆய்வு நூலை மிக எளிய நடையில் எழுதியதன் மூலம் பிரித்தானியரின் வருகைக்கு முன்னர், யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய தமிழ் பிரதேசங்களை உள்ளடக்கியதாக தமிழர்களுக்கான ஒரு வீரம் செறிந்த அரசு ஒன்று இருந்ததுடன், நீண்டகாலமாக அன்னியனுக்கு அடிபணியாது இருந்த வரலாற்றை யாழ்ப்பாண அரச பரம்பரை, நல்லை நகர் நூல், மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், யாழ்ப்பாணச் சரித்திரம் விளக்கவுரை மற்றும் களம் பல கண்ட யாழ். கோட்டை உள்ளிட்ட பல வரலாற்று நூல்களை எழுதியதன் மூலம் ஈழத் தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளமை அவரது தூரநோக் கிலான ஒரு பார்வையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கென ஒரு அரசு இருந்ததெல்லாம் ஒரு புனை கதையே ஒழிய அவை உண்மையான வரலாறுகள் அல்ல என்றும்,அவற்றைப் பாடநூல்களில் உள்ளடக்கக்கூடாது என்றும் கூறிவரும் சிங்கள இனவாத புத்திஜீவிகளுக்குச் சாட்டையால் அடிப்பது போல் அவரது இந்த வரலாற்று நூல்கள் அமைந்திருந்தன.

சிங்களப் பேரினவாத அரச சக்திகளின் அனுக்கிரகத்துடன் யாழ்ப்பாணத்தைப் பல தடவைகள் எரித்து அழித்த வரலாறுகளை இன்றைய இளம் சமுகம் மறந்து போய் இருக்கும், ஆனால் செங்கை ஆழியான் அவர்கள் யாழ்ப்பாண பொது நூல் நிலையம் பல இலட்சக் கணக்கான நூல்களுடன் அரச படைகளினால் எரியூட்டப்பட்டது தொடக்கம், யாழ்ப்பாணத்தின் வர்த்தக நிலையங்கள், வீடுகள்,

RE/MAX THIPAN RAJ | NAVA LAW | THE GUARDIAN GINI | INFORCE LIFE | NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களது படைப்புக்களை மெருகூட்டி சிறந்த எழுத்தாளர்களாக மிளிரச் செய்ததில் செங்கை ஆழியானுக்கு நிகராக எவரும் இல்லை.**

ஆலயங்கள் போன்றன பல தடவைகள் அரச படைகளினால் எரித்துச் சாம்பராக்கப்பட்ட பொழுது, எல்லாமே முடிந்து போய்விட்டது என்ற ஒரு விரக்தி யிலையில தமிழினம் தவித்த போது அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில அவரால் ஆக்கப்பட்ட வரலாற்று ஆவணங்களாக இன்றும் பெருமையுடன் பேசப்படுகின்ற "இருபத்து நான்கு மணிநேரம்" "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது", "பன்னிரண்டு மணி நேரம்". "இதயமே அமைதி கொள், "ஈழத்துச் சிறுகதை வரலாறு", மற்றும் "யாழ்ப்பாண இராத்திரிகள்", "இரவு நேரப் பணிகள்" போன்ற வரலாற்று ஆவணங்கள் புனைகதை வடிவில் மிகவும் சுவையாக எழுதப்பட்டுள்ளமையால், அவை இன்றைய சந்ததிகள் எல்லோராலும் விரும்பி வாசிக்கக்கூடிய நூல்க ளாக இருக்கின்றன. அன்று நிகழ்ந்த அரச பயங்கரவாதம் மற்றும் சிங்களப் படைகளின் கொடூரங்களை புனைகதைகளாகவும்,விவரணச் சித்திரங்களாகவும், வரலாற்று நூல்களாகவும் எழுத்துவடிவில் ஆவணப்படுத்தியமையால், இன்றைய சந்ததியினருக்கு அவை வரலாற்று நூல்களாக இருக்கின்றன.

செங்கை ஆழியான் இத்தகைய அரச பயங்கரவாதங்களை ஆவணப்படுத்தியிருக்காவிட்டால், யாழ்ப்பாணத்தில் மிலேச்சத்தன மான படுகொலைகள் இடம் பெற்றமையையோ அல்லது, பல கோடிக் கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டும், எரியூட்டப்பட்டும் அழிக்கப்பட்டமை தொடர்பான வரலாறுகளே தடயம் இல்லாது மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போய் இருக்கும்.

பல கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த நூல்களைத் தன்னகத்தே கொண்டு, அரிய நூல்களையும், சுவடிகளையும், வரலாற்று ஆவணங்களையும் தன்னகத்தே கொண்டு ஆசியாவிலேயே மிகச் சிறந்த நூல் நிலையம் என்ற பெயரைக் கொண்ட "யாழ்ப்பாணம் பொது நூலகக் கட்டிடம்" சிங்கள அமைச்சர் ஒருவரின் வழிகாட்டலில், பொலிசாரினால் ஒரே இரவில் எரித்து சாசமாக்கப்பட்ட அந்தப் பகழ் பெற்ற நூல் நிலையம் இன்று எங்கே இருக்கின்றது? அவ்வாறான ஒருநூல் நிலையம் எரிக்கப்பட்டதா? என்று கேட்கும் அளவிற்கு அழிக்கப்பட்ட சுவடுகளே இல்லாத நிலையில் அந்த இடத்திலேயே எரிந்த நிலையில் இருந்த அழகிய நூலகக் கட்டிடத்தை அப்படியே எவ்விதமாற்றங்களையும் ஏற்படுத்தாது, புனரமைப்புச் செய்து அன்றைய அரச கொடூரத்தை உலகின் கண்களில் இருந்து மறைத்த சிங்கள அரசின் இராஜ தந்திரத்திற்கு யாழ்ப்பாணச் சமுகமும், புத்திஜீவிகளும், தமிழ் அரசியல் வாதிகளும் பலியாகிப் போனது போன்ற ஒரு தவறை எதிர்காலத்தில் செய்யமுடியாத அளவில் செய்கை ஆழியானின் வரலாற்று ஆவணப்படுத்துகை காலமாக காலமாக எமது வாழ்வியலின் போக்கைப் பேசிக் கொண்டே இருக்கும்.

கலாநிதி க.குணராசா என்ற இயற்பெயரை உடைய செங்கை ஆழியான் இவற்றை விட மாணவர்களுக்கும், மற்றும் பொதுத் தேர்வுகளுக்கும் தோற்றவுள்ள மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில், சிறுவர் கதைகள், வரலாற்று நூல்கள், ஆய்வு நூல்கள், புவியியல் பாட நூல்கள்,சுருட்டுக் கைத்தொழில் போன்ற தொழில் வழிகாட்டல் நூல்கள் போன்ற பன்முகப் பரிமாணமுள்ள இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

ஈழத்தின் சிறுகதைத் துறை வரலாற்றில் செங்கை ஆழியான் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து, சுமார் 200 சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ளார். அவரது ஆக்கங்கள், இலங்கை இந்தியா, கனடா, பிரான்ஸ், லண்டன் போன்ற நாடுகளில் வெளியாகும் பல்வேறு சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. அதே போன்று சிங்களப் பத்திரிகைகளான ராவய, சிலுமின, லங்காதீப ஆகியவற்றல், இவரது தமிழ்ச் சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் செங்கை ஆழியான் சிறுகதை ஆசிரியராக மட்டுமல்லாது, பிரபலமான ஒரு நாவலாசிரியராக வும் பேசப் படுகின்றார். அவர் இதுவரை அவரது 45 நாவல்கள் நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பாக நந்திக் கடல், சித்திரா பௌர்ணமி,ஆச்சி பயணம் போகிறாள், முற்றத்து ஒற்றைப் பனை, காட்டாறு, யானை, இரவின்முடிவு, வாடைக்காற்று, ஜன்மபூமி, கந்தவேள் கோட்டம், கடற்கோட்டை கிடுகுவேலி போன்ற புகழ் பெற்ற நாவல்களையும் பூதத்தீவு புதிர்கள், ஆறுகால் மடம் ஆகிய சிறுவர் புதினங்களையும் எழுதியுள்ளார்.

இவற்றுள் வாடைக்காற்று நாவல், கடற்றொழில் சமுகத்தின் வரலாற்றை அற்புதமாக வெளிப்படுத்தி யுள்ளது. அவரது சிந்தனைக்கு உயிர் கொடுப்பது போல், வாடைக்காற்று நாவல் தத்ரூபமான முறையில் திரைப்படமாகவும் வெளியிடப்பட்டு புகழ் பெற்ற ஒரு ஈழத்துத் திரைப்படமாக இன்றும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று இவரது யானை என்ற நாவல், The Beast என ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. செட்டிக் குளத்தில், பிரதேச செயலாளராக இருந்தபொழுது,வவுனியா மக்களின் வாழ்வியலை ஆவணப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட "காட்டாறு" என்ற நாவல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு "வனமத கங்கா" என்ற பெயரில் கொடகே பதிப்பகத்தினரால் வெளியிடப் பட்டதைத் தொடர்ந்து, அவருக்கென சிங்கள வாசகர் வட்டம் ஒன்றும் உருவானது, செங்கை ஆழியானின் இலக்கியத்திற்குக் கிடைத்த கௌரவமாகும்.

மறைந்து போன எழுத்தாளர்களின் இலக்கியப் பங்களிப்புக்கள் அன்றைய சஞ் சிகைகளிலும், பத்திரிகைகளிலும் மட்டுமே வெளிவந்ததால்,அவற்றை வாசித்துப் பயனடையக் கூடிய வகையில், இன்றைய இளைய சமுதாயத்தினால் முடியாது போய்விட்டது. அந்த வெற்றிடத்தை நீக்கும் வகையில் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் போட்டது போல்; பல தொகுப்பு நூல்களை வெளியிட்டு அன்றைய எழுத்தாளர்களின் வாழ்வியல் சிந்தனைகளைத் தொகுத்து வெளியிட்டமை செங்கைஆழியானின் மிகப்பாரிய ஒரு இலக்கியப் பணியாகப் பேசப்படுகின்றது. அவற்றுள் அவரது முயற்சியினால் தொகுக்கப்பட்ட நூல்களாக, மறுமலர்ச்சிச் சிறுகதைகள், சம்பந்தன் சிறுகதைகள், முன்னோடிச் சிறுகதைகள், சிரித்திரன் சுந்தரின் நானும் எனது காட்டூன்களும், ஈழகேசரிச் சிறுகதைகள், முனியப்ப தாசன் சிறுகதைகள், புதுமைலோலன் சிறுகதைகள்,சுதந்திரன் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள் மற்றும் ஈழநாடு பத்திரிகையின் சிறுகதைகள் போன்ற தொகுப்பு நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டும் தமிழ் இலக்கியத்திற்கு மேலும் அணிசேர்த்துள்ளார்.

செங்கை ஆழியானின் உதிரத்தில் ஊறிப்போயுள்ள தமிழ்த் தேசிய உணர்வுக்கும், தமிழர் வாழ்வியலை ஆவணப்படுத்தவேண்டும் என்ற அவரது முயற்சிகளுக்கும் வித்திட்ட பெருமை அவரது மூத்த சகோதரரும்,அன்பு புத்தகசாலையின் ஸ்தாபகராகவும், தந்தை செல்வாவின் வழித்தடத் தைப்பின்பற்றிஇலங்கைத்தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினராகவும் அர்ப்பணிப்போடு செயற்பட்ட புதுமைலோலனுக்கே உரியது. தமிழ் படைப்பிலக்கியத்தை வளர்ப்பதில் பெரும் பங்காற்றிவரும் யாழ். இலக்கிய வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் பின்னர் அதன் தலைவராகவும், இலங்கை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் செயற்பட்டதுடன். தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும், பண்டிதமணி க. கணபதிப்பிள்ளையின் நினைவாக வழங்கப்படும் சம்பந்தர் விருதுக் குழுவின் இணைப்பாளர் மற்றும் கனக செந்திநாதன் கலை விருது அமைப்பின் பணிப்பாளர் போன்ற பதவிளை வகித்து அவற்றிற்கும் பெருமை சேர்த்தவர். அவ்வாறான அமைப்புக்களையும் உயிர்ப்புடன் செயற்பட வைத்த பெருமையும் செங்கை ஆழியானுக்கே உண்டு.

இலக்கியப் பணிகளுக்கும் மேலதிகமாக பல்வேறு சமுக அமைப்புக்களில் தன்னை அர்ப்பணித்து சமுக சேவையிலும், மக்களை அறிவூட்டும் வகையிலும்; தன்னை இனங்காட்டியவர். அவரது பிறந்த இடமான, கலட்டி எச்சாட்டி மகமாரி அம்மன் தேவஸ்தானம், வில்லூன்றி புனித தீர்த்தக் கேணிப் பரிபாலன சபை, வண்ணை கோம்பயன் மணல் மயான பரிபாலன சபை, கலஜோதி சனசமுக நிலையம் ஆகிய பொது அமைப்புக்களினதும் தலைவராகவும் இருந்து தான் சார்ந்த மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியவர்.

இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களது படைப்புக்களை மெருகூட்டி சிறந்த எழுத்தாளர்களாக மிளிரச் செய்ததில் செங்கை ஆழியானுக்கு நிகராக எவரும் இல்லை. அன்பான அரவணைப்பும், கவர்ச்சியான பேச்சுவன்மையும், நிர்வாகத் திறனும், உன்னதமான ஆளுமையும் கொண்ட செங்கை யாழியான் ஈழத்து இலக்கிய உலகில் சாகாவரம் பெற்றவர் என்பதை அவரது எழுத்துக் களும், இலக்கியப்படைப்புக்களும் இன்றுமட்டுமல்ல இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு அவரது பெயரைப் பதித்து நிற்கும்.

அந்த வகையில் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தனக்கென ஒரு இடத்தை பதித்த செங்கை ஆழியானுக்கு 2009இல் சாஹித்திய ரத்னா விருதை இலங்கை அரசு வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. அவரது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஒன்றிணைந்து அவரது இலக்கியங்களை வகைப்படுத்தி தொகுத்து வெளியிட்டு தமிழ் இலக்கிய உலகுக்கு அணிசேர்ப்பத அவருக்கு நாம் செலுத்தும் அஞ் சலியாகும் ●

RE/MAX THIPAN RAJ | NAVA LAW | THE GUARDIAN | INFORCE LIFE | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOUSE FOR SALE




**Ajax**
Bedrooms:4 | Washrooms:3




**Ajax**
Bedrooms:4 | Washrooms:4




**Ajax**
Bedrooms:4 | Washrooms:4




**Toronto**
1,000 Sq Ft




**Land For Sale**
**Toronto**




**Toronto**
Bedrooms:3+1 | Washrooms:2




**Toronto**
Bedrooms:3+1 | Washrooms:3




**Markham**
Bedrooms:4+1 | Washrooms:4




**Toronto**
Bedrooms:3+2 | Washrooms:3




**Toronto**
Bedrooms:3 | Washrooms:4




**Uxbridge**
Bedrooms:3+1 | Washrooms:4




**Markham**
Bedrooms:3+1 | Washrooms:4

We Offer, Not 1 but 2 Experienced Professionals Working Together To BUY/SELL YOUR HOME



Chairman's Club Award 2014

Chairman's Club Award 2015

" TOP 5% SALES REPRESENTATIVE IN CANADA"

## HELEN & FRANCIS ANTHONIPILLAI

SALES REPRESENTATIVE

INFO@HELEN-HOMES.CA
416.830.5724

INFO@AGENTFRANCIS.CA
416.854.4183

www.familyestates.ca

HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE* OFFICE 905.201.9977 FAX 905.201.9229
7 EASTVALE DR 205, MARKHAM, ON L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

RE/MAX THIPAN RAJ
NAVA LAW
THE GUARDIAN GINI
NS DENTAL
COMPUTEK COLLEGE
Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைப் பூக்கள்

# இசைஞானி இளையராஜா - இசையாய் வாழ்பவர்

இந்தியாவில் உள்ள தமிழ்நாடு தேனி மாவட்டத்தில் பண்ணையபுரம் என்ற இடத்தில் 1943ம் ஆண்டு ஜுன் மாதம் 2ஆம் திகதி பிறந்தவர் தான் இசைஞானி இளையராஜா. அவர் பிறந்தவேளை அவருக்கு இடப்பட்ட பெயர் ஞானதேசிகன் என்பதாகும். இன்று இந்தியாவிலேயே மிகச் சிறந்த இசையமைப்பாளர்களில் ஒருவராக மிளிர்வதற்கு காரணம் அவருக்கு இசை மீதிருந்த ஞானமும் பக்தியுமாகும். சிறிய வயதில் 'ராசையா' என்ற பெயரில் பாடசாலையில் பதிவுப் பெயர் செய்யப்பட்ட இவர் தனராஜ் என்பவரிடம் வாத்தியக்கருவிகளை இசைக்கும் பயிற்சியை மேற்கொண்டார். அவரே இவருக்கு "ராஜா" என்ற பெயரை சூட்டியவராவர். ஆனால் பஞ்சு அருணாசலம் "அன்னக்கிளி" என்ற பெயரில் ஒரு திரைப்படத்தில் ராஜா இமைசயமைத்த வேளை "இளையராஜா" என பெயர் சூட்டினார். அவ்வேளையில் ஏ.எம். ராஜாவும்ஒருஇசையமைப்பாளராக விளங்கியமையால் "இளையராஜா" என்ற இந்த பெயர் மிகவும் பிரபலமாயிற்று.

இளையராஜா ஒரு வாத்தியக்கருவி இயக்குநர் திரைப்பட இசைக்கோப்பாளர், பாடகர், பாடலாசிரியர், படத்தயாரிப்பாளர், நடிகர் என்ற பல்வேறு பரிணாமங்களையும் பெற்றுக் கொண்ட ஒரு மேதையாக விளங்குகிறார். கிட்டார், கீபோட், ஹார்மோனியம், பியானோ என்றவாறாக பல இசைக்கருவிகளையும் இயக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது. படிப்படியாக கீழைத்தேச இசைக் கருவிகளுடன் மேலைத்தேச கருவிகளையும் சேர்த்துக் கொண்டமையால் உலகப்புகழ் பெற்ற இசையமைப்பாளரானார். இதனால் தான் 5000 பாடல்களுக்கு இசையமைக்கவும் 1000 திரைப்படங்களுக்கு இசையமைக்கவும் முடிந்தது. பல பின்னணிப் பாடகர்கள், பல நடிகர்கள் என்று இசைப் பட்டாளத்தையே கட்டியாண்ட பிதாமகனாக அவர் உயர்ந்து நிற்கிறார். சொந்தக்குரலிலும் 400 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார்.

இவரது பாடல் இன்று வரை திரும்ப திரும்ப இன்பந் தருவதற்கு இவர் கையாண்ட கிராமப்புற நாட்டார் பாடல்களே காரணமாகும். இவர் SYMPHONIC ORCHESTRATION (இசை இயற்றுநர், கருவிகளின் ஒத்திசைவாளர்) என்ற நிலைக்கு உயர்ந்தார். இந்திய இசைக்கருவிகளையும், புடாபெஸ்ட் நவீன இசைக் கருவிகளையும் ஒன்றாக்கி, பாடல் களுக்கு இசை அமைத்தது அவரது தனித்துவம். அவர் தானாகவே பாட்டுக்களுக்குரிய இசைவடிவங்களை வகைப்படுத்தி நவீன பாடல்களுக்குள்ளும் வலம் வரலானார். இப்பயணத்தின் போது 1993இல் லண்டனில் உள்ள "Royal Philharmonic Orchestra" வில் இணைந்து முழுமையான இசைப்பாடல்களை செய்து காட்டிய முதல் இந்திய கலைஞரானார்.

1975ல் பஞ்சு அருணாசலம் தயாரித்த அன்னக்கிளி படமே இவர் திறமையை உலகிற்கு காட்டியது. "அன்னக்கிளி உன்னைத் தேடுதே" என்ற இவரது முதல்பாடல் இன்று கேட்டாலும் இனிப்பதொன்று. இவர் 1980 நடுப்பகுதியில் தென்னிந்திய படத்துறை உலகில் ஆழமாக கால் பதித்தார்.

இளையராஜாவுக்கென்று தனி இசைவடிவம் எப்போதும் இருக்கும். இவரது இசையில் எவரும் கற்பனை பண்ண முடியாத இசைகள் எப்போதும் இருக்கும்; இவரது தொழில்நுட்பம் எவருக்கும் முடியாததொன்று. குயில்கள் பாடும், தென்றல் வீசும், கிளிகள் பேசும், காகங்கள் கரையும், சிட்டுக்கள் கீச்சிடும், அருவிகள் பாயும். எல்லாமே அவரது வாத்தியக்கருவிகளின் வெளிப்பாடு தான். அதற்கேற்ற இசைக்கருவிகள் எல்லாமே அவரிடம் எப்போதும் இருக்கும். இவரது இசையில் BOSSANOVA. DANCE MUSIC, FLAMENOCO, ACOUSTIC, மேலைத்தேச நாட்டார் இசை, இந்திய எளிமை, நயம், பராம்பரிய இசை, யிகிஞ்ஞீ இசை, ROCK AND ROLL. POP, PSYCHEDELIC PATHOS, MARCH, என்று எண்ணற்ற இசைவடிவங்கள் எப்போதும் இருக்கும். தமிழினத்தின் மன அழுத்தம், மன இறுக்கம் என்பவற்றிற்கெல்லாம் இவரது பாடல்களே மாமருந்து. படுக்கைக்கு போகும் போது இவரது இசையை கேட்டபடி நித்திரை கொள்பவர்கள் எத்தனையோ லட்சம் பேர்.

திரைப்படம் தவிர்த்த பல பாடல் ஆல்பங்களுக்கு இவர் சொந்தக்காரர். இவர் இந்திய மேலைத்தேச இசையுடன் HOW TO NAME IT (1986) என்பது கர்நாடக இசைக்கலைஞர் தியாகராஜருக்காக வழங்கப்பட்டது; இரண்டாவதாக NOTHING BUT WIND (1988) வெளியானது. இப்பாடல் புல்லாங்குழல் மேதை ஹரிபிரசாதச் சாருஸ்யாவால் இசைக்கப்பட்டது. இதில் 50 இசைக்கருவிகள் பயன்பட்டன. குரு ரமண கீதம் (2004) ரமண ரிஷிக்காக வெளியானது. திருவாசகம் (2005) என்ற



RE/MAX THIPAN RAJ NAVA•LAW NS DENTAL COMPUTEK COLLEGE HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயரிலான ஆல்பம் வெளியானது. மாணிக்கவாசர் இயற்றிய திருவாசகத்தை அமெரிக்க பாடல் எழுத்தாளர் ஷிஜிணிறிபிணிழிஷிசிபிகீகிஜிஸி ஆங்கிலத்தில் இயற்றியும் தமிழும் கலந்து புடாபெஸ்ட் இசைவு சார் பல்லியம் (Symphony Orchestra) மூலம் வெளியிட்டார். அண்மையில் கிறிஸ்துவர்களுக்காக அவர் வெளியிட்ட ஆல்பம் The Music Messiah என்பதாகும். உலக தரம் வாய்ந்த இசையால் இது வெளியிடப்பட்டது.

இவரது சில பாடல்கள் உலகத்தமிழர்களின் இதயத்தில் என்றும் வாழக்கூடியவை. இளையராஜா இசையமைத்த 'ராக்கம்மா கையை தட்டு' பாடல் எஸ்.பி. பாலாவும், சுவர்ணலதாவும் தளபதி (1991) படத்திற்காக பாடிய பாடல். இது London BBC யால் தெரிவு செய்யப்பட்ட 10 பாடல்களில் ஒன்றானது. இவர் இசையமைத்த நாயகன் (1987) TIME MAGAZINE தெரிவு செய்த 100 சிறந்த படங்களில் ஒன்றாக இவர் இசையமைத்த பல படங்கள் ஆஸ்கார் பரிசுக்காக அனுப்பப்பட்டன. சுவாதி முத்தயம் (1986) நாயகன் (1987), தேவர் மகன் (1992), அஞ்சலி (1991), குரு (1997), ஹே ராம் (2000) என்பனவாகும். 1996ல் நடைபெற்ற 'விமிஷிஷி கீ ளி ஸி லி ஞி" அழகு ராணிப்போட்டிக்கு இசை வழங்கினார். இதனை "INDIA 24 HOURS" என்று அழைத்தனர்.

இவரது பாடல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், மராத்தி, சமஸ்கிருதம், பஞ்சாபி ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளன.

இசைஞானி இளையராஜாவுக்கு கிடைத்த விருதுகள் கணக்கற்றவை. தேசிய திரைப்பட விருதுகள் இவரது சிறந்த இசை நெறியாள்கைக்கு (Best Music Director) என வழங்கப்பட்டவை. தெலுங்கு மொழியில் வெளிவந்த சாகர சங்கமம் (1984) தமிழ்மொழியில் வெளிவந்த சிந்துபைரவி (1986) தெலுங்கு மொழியில் வெளிவந்த ருத்ர வீணா (1989), மலையாள மொழியில் வெளிவந்த PAZHASI RAJA (2009) என்பனவற்றிற்காக வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் நடைபெற்ற WORLD FEST - HOUSTON சர்வதேச திரைப்படவிழாவில் 'விஸ்வ துளசி' பட இசை அமைப்புக்காக றெமி தங்கப்பதக்கம் (2005) வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் இசைக்கான 'வாழ்நாள் சாதனையாளர்' விருது (2015) வழங்கப்பட்டுள்ளது.

தென்இந்தியாவில் நடைபெற்ற திரைவிழாக்களில் பல விருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த இசை நெறியாளர் விருதுகள் வரிசையில் வாழ்நாள் சாதனையாளர் தென்னிந்தியாவிற்கு உரியதென (1989) வழங்கப்பட்டது. அத்துடன் சிறந்த பின்னணி இசைக்காகவென (1989) வழங்கப்பட்டது. அத்துடன் சிறந்த பின்னணி இசைக்காக பொபிலிராஜா (தெலுங்கு) (1990) வழஙகப்பட்டது. தளபதி (தமிழ்) (1991), காசி (தமிழ்) (2001), பிதாமகன் தமிழ் (2001), MANNASSINAKKARE (மலையாளம்) (2003) ACHVITE AMMA (மலையாளம்) 2005, இணத்தே சிந்தா விசாயம் மலையாளம் (2008) நான் கடவுள் (தமிழ்) சிறந்த பாடலாசிரியர் (2009), பாக்யதேவதா மலையாளம் (2009) கதாதுடாருன்னு (மலையாளம்(2010) சிறிராம ஜெயம் (தெலுங்கு) (2011) நீ தானே என் பொன்வசந்தம் தமிழ் (2012), படப்பாடல்களுக்கு வழஙகப்பட்டன. இவற்றில் தென்னிந்திய மொழிகளில் அவருக்கு இருந்த ஞானம் மிகவும் வியப்புக்குரியது.

கேரளாவில் நடைபெற்ற திரைப்படவிழாவில் சிறந்த 'சம்மோகனம்' திரைப்பட இசைக்கான விருது (1994), தனபானி திரைப்பட இசை நெறியாளர் விருது (1995) கள்ளு கொண்டோரு பெண்ணு பட பாடல் இசை நெறியாளர் விருது (1998) வழங்கப்பட்டுள்ள — கேரள அரசின் மூலம் 'NISHAGANDHI PURASKARGAM' விருது (2016)ல் வழஙகப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசாங்கத்தினால் 'கலைமாமணி விருது (1988), தமிழக திரைப்பட விருதுகளும் பலவாகும. 16 வயதினிலே (1977), நிழல்கள் (1980), அலைகள் ஓய்வதில்லை (1981), அக்னி நட்சத்ரம் (1988), வருஷம் பதினாறு, கரகாட்டக்காரன் (1989), அஜந்தா (2009) அனைத்தும் சிறந்த திரைப்பட இசைக்கானதாகும்.

நோர்வேயில் நிகழ்ந்த தமிழ் திரைப்படவிழாவில் அழகர்சாமியின் குதிரை படத்திற்கான சிறந்த திரைப்பட இசைநெறியாளர் (2011) விருது கிடைத்தது. Sangeet Natarc Akademic Award விருது இசை படைப்பாற்றல் மற்றும் பரிசோதனை என்ற விருது (2012) ல் கிடைத்தது.

மத்திய பிரதேசத்தில் லதாமங்கேஷ்கார் விருது (1998) வழங்கப்பட்டது. பல 1988, 1991, 1990, 2011 ஆகிய வருடங்களில் சிறந்த இசை நெறியாளர்களுக்கான நந்தி விருதுகள் கிடைத்தன. கோவா (இந்தியா) வில் நடைபெற்ற 46ஆவது சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் "வாழ்நாள் சாதனையாளர்" விருது வழங்கப்பட்டது.

இசைஞானி இளையராஜா ஏற்கெனவே 4 முறை இந்தியாவின் உயரிய தேசிய விருதை பெற்றிருக்கிறார். தற்போது 'தாரை தப்பட்டை' படத்திற்காக சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருதை ஐந்தாவது முறையும் பெற்று தமிழர்களுக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த வேளையில் இவருக்கு வழங்கப்பட்ட விருது 'இசைஞானி' என்பதாகும். 1988 முதல் இசைஞானி பட்டமே அவருடன் கூட வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமெரிக்க அரிசோனா பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் ஆகியன கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. தொடர்ந்து வரும் விருதுகளுக்கு கணக்கில்லை. எல்லாவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல இந்திய அரசு பத்மபூஷன் விருதினை (2010) வழஙகி கௌரவித்துள்ளது.

மில்லியன் கணக்கான உலகத் தமிழர்கள், மற்றும் பல்வேறு இந்திய மொழியில் உள்ளவர் எல்லோரும் இளையராஜாவின் இசையில் கட்டுண்டு போயுள்ளனர். தனது இசை மாமருந்தினால் எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தி வரும் இவரது ஆத்ம பலம் மிக உயர்ந்ததாகும். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ளது அநீதியா என்பதை விசாரிப்பது அவசியம் என ஐநா மனித உரிமை மையம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கைக்குள் நடக்கவுள்ளதாக நம்பப்படும் விசாரணைகள், சர்வதேச சட்டவிதிகளுக்கமைவாக நீதியாக நடைபெறுகின்றனவா என்பதைத் துறைசார் வல்லுனர்களூடாக மேற்பார்வையிட்டு அறிக்கை தயாரிக்கவென, கண்காணிப்புக்கும் பொறுப்புக்கூறலுக்குமான குழு ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசு நியமித்துள்ளது.

தங்களது பிரச்சார செயற்பாடுகளில் சில காலம் சற்று மந்தகதியில் பயணிப்பதுபோன்று வெளியே தென்பட்டாலும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதல்வராக நிர்வாகத் தலைமை வகிக்கும் உருத்திரகுமாரன் மற்றும் அவருடன் கூடிய உயர்மட்ட செயற்பாட்டாளர்களது அரசியல் ரீதியான இராஜதந்திர செயற்பாடுகள் எந்தவிதத்திலும் தாமதமின்றித் தொடர்ந்தமை பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சர்வதேச நாடுகளுடன் பேணப்படும் உயர்மட்ட உறவுகள், அவசியமான வகையிலான அந்நாடுகளுக்கான அழுத்தங்கள், ஐக்கிய நாடுகள் சபை சார்ந்த தகைசார் வல்லுனர்களுடனான ஐக்கியமான செயற்பாடுகள், ஜெனீவா மனித உரிமை அமர்வுகளில் ஈழப் பிரச்சனை குறித்த தெளிவை உருவாக்கும் முன்னெடுப்புக்கள், சர்வதேச மனிதஉரிமை செயற்பாட்டாளர்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளும் வலுவூட்டல்களும் ஐயந்தெளிவு சந்திப்புக்களுமென, நாடுகடந்த தமிழீழ அரசின் அந்தரங்க அரசியல் முன்னெடுப்புக்கள், யாருடைய பிரச்சாரப் புகழ்ச்சியுமின்றித் தொடர்கிறது.

இதன் இன்னுமொரு மிகக் காத்திரமான முன்னெடுப்பாகவே, இந்த கண்காணிப்புக்கும் பொறுப்புக்கூறலுக்குமான குழு, மிகவும் அனுபவமும் பட்டறிவும் தகுதரமும் கொண்ட சர்வதேச சட்டவல்லுனர்களை உள்வாங்கி நாடு கடந்த தமிழீழ அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மாதாந்த செலவே பல ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என்பதை அறிந்ததும், இதன் அங்கத்தவர்கள்கூட இந்த முயற்சியை ஆதரிக்கத் தாமதம் காட்டினார்கள். இருந்தாலும், பல மாதங்கள் — வருடங்களாக எடுத்த முயற்சியால் கைகூடி வந்துள்ள இந்த வாய்ப்பை அவ்வளவு எளிதில் தட்டிக்கழித்துவிட யாருக்கும் விருப்பிருக்கவில்லை.

ஏற்கனவே சர்வதேச மனித உரிமை விடயங்களில், குறிப்பாக உலகில் மனித அவலமும் இனஅழிப்பும் நடைபெற்ற நாடுகளில் பாதிக்கப்பட்ட இனங்களுக்காக பல அழுத்தங்களுக்கு மத்தியிலும் நீதியுடன் போராடி நீதி பெற்றுக்கொடுத்த சர்வதேச சட்டவல்லுனர்களை, தமிழீழத்தில் இடம்பெற்ற அநீதிக்காக வாதாடுவதற்கு இணங்க வைப்பதென்பது ஒரு முயற்கொம்பு முயற்சியே.

நடக்கமுடியாத இந்த அதிசயம், இப்போது நிஜமாகியிருக்கிறது. கடந்த டிசம்பரில் இணக்கப்பாடு காணப்பட்ட இந்த உயர்மட்ட சர்வதேச சட்டநிபுணர் குழு, 2016ம் ஆண்டு டிசம்பர் வரையில் தொடர்ந்து ஈழப்பிரச்சனை தொடர்பாக செயற்படும். ஐ.நா. மனித உரிமை அவையில் கண்ட இணக்கப்பாட்டிற்கமைவாக, நீதியாக விசாரணை முன்னெடுக்கப்படுகிறதா, தவறிழைத்தவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்களா, சர்வதேச சட்டங்கள் சீராகப் பின்பற்றப்படுகிறதா, சாட்சியங்கள் சுதந்திரமாக விசாரிக்கப்படுகின்றனவா, விசாரணைக்கு இணங்கும் சாட்சியங்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா, அவர்களுக்கு மிரட்டலோ கையூட்டோ வழங்கப்படுகிறதா போன்ற இன்னோரன்ன நிலைமைகளைத் தெளிவாக விசாரித்து சுதந்திரமான அறிக்கை சமர்ப்பிப்பதே இந்தக் குழுவின் நோக்கம்.

சர்வதேச கிரிமினல், மனித உரிமை மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் புலமைபெற்ற துறைசார் சட்ட வழக்கறிஞர்கள் ஐவர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்த பின்வரும் பழுத்த ஓய்வுபெற்ற நீதிபதிகள் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்:

Marie Guiraud (France)

Peter Haynes QC (UK)

Richard J Rogers (UK)

Heather Ryan (USA)

Justice Ajit Prakash Shah (India)

Geoffrey Robertson QC will act as a consultant to the Panel, providing additional independent advice.




இந்த நிலையில் புலம்பெயர் தமிழரிடம் உள்ள பாதைகள் மூன்று.

முதலாவது, பல்வேறு தரப்புகளாலும் முன்னெடுக்கப்படும் சர்வதேச விசாரணைகளை, அதிகபட்ச ஆதரவோடு அழுத்திச்சொல்ல முண்டு கொடுப்பது. விசாரணைக் கவுன்சில் அமைத்தல், ஆதாரங்கள் திரட்டல், சாட்சியங்களை வழங்குதல், பாதிப்புக்களை உரத்துச் சொல்லுதல், பரப்புரைப் போருக்கு உதவுதல் என்று பல்வேறு வகையிலும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க கை கொடுப்பது.

இரண்டாவது, சர்வதேச ஜனநாயகத்தினூடாகப் பயணித்து உரிமை கேட்கும் போரை, உன்னிப்பாய் உந்தித் தள்ளுவது. ரோமையில் இருந்தால் ரோமனாக இரு என்ற கோட்பாட்டிற்கமைய, மேற்குலகில் பயணிப்பதற்கு அவர்கள் பாவிக்கும் 'கௌரவமான' ஜனநாயகத்தின் வழியொற்றி நடப்பது தவிர்க்கமுடியாதது. தமிழினமும் அதன் வழியொற்றி தடம்பதித்து, இராஜதந்திர அரசியல் செய்து, நாடுகடந்த அரசியல் பலத்தை உருவாக்குவது காலத்தின் கட்டாயத் தேவை.

மூன்றாவதாக, புலம்பெயர் தமிழர்களின் நிதிப் பலத்தை வேகமாக அதிகரிக்க உதவுவது. நிதிப் பலமே நாளைய தமிழர் தாயகத்தின் நிரந்தர வலு. உரிமையை மீளப்பெறுவதற்கு நிதி அடிப்படை. எனவே, தமிழ் வர்த்தக நிறுவனங்களில் கொள்வனவு செய்வது, சிங்களத்தின் பொருட்களை நிராகரிப்பது, தமிழ் தொழில் வல்லுனர்களை மட்டுமே அனைத்து துறைசார்ந்தும் பயன்படுத்த முயற்சிப்பது என்று, தமிழர் நிதியை தமிழர் சமூகத்தில் சேர்க்க முனைவது, அதனூடே தமிழின நிதிவலுவை உறுதியாக்குவது.

இந்த மூன்று முக்கிய நிலைப்பாடுகளில் உறுதியும் புரிதலும் நமக்கு அவசியம். தனது உரிமையைத் தக்கவைக்க, தனது மண்ணை மீட்டெடுக்க, தன் உயிரையும், தன் உறவுகளையும், தன் சொந்தச் செல்வங்களையும்கூட இழக்கத் துணிந்தவன் தமிழன். பல நூற்றாண்டுகளாக பல்வேறு பாதைகளூடாகச் சொல்லப்பட்டு வருகின்ற ஒரே உண்மை என்னவெனில், தனதுரிமை பெற்று தமிழ்மண்ணை தமிழினமே ஆழும் காலம்வரை அடங்க மறுப்பவன் தமிழன் என்பதே. புதுமாத்தளனிலிருந்து ஆரம்பித்திருக்கும் புலம்பெயர் தமிழினத்தின் பணி, மண்ணுக்காய் ஆகுதியான அந்த அற்புத ஜீவன்களின் ஆத்மா சாந்தியடையும் வரை, அதாவது அவர்களின் கனவு நனவாகும்வரை, அடங்க நினைப்பது அபத்தம்.

THIPAN RAJ · NAVA LAW · THE GUARDIAN · NS DENTAL · COMPUTEK COLLEGE · Allstate HARRY KULASEGARAM
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


CELEBRATING 25 Years

# COMPUTEK COLLEGE

EST. 1991

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Registered as a Private Career College under the Private Career Colleges Act. 2005.



UN-EMPLOYED?

UNDER-EMPLOYED?

SECOND CAREER

& OTHER FUNDING OPTIONS AVAILABLE

CALL FOR DETAILS

*We cordially invite you to our Silver Jubilee*

# *Gala Open House*

*April 23rd 2-5 pm*
*At our* ***New 20,000 sq. ft.***
*Toronto Campus*

**OPEN HOUSE SPECIAL**

| | |
|---|---|
| Bank Teller | $100 |
| Food Handler | $25 |
| Food Service Worker | $100 |
| Excel | $50 |
| Word | $50 |
| A+ | $195 |
| CCNA | $195 |
| MS Server | $195 |

This offer is valid on April 23rd 2-5 pm only

**Toronto Campus**

2425 Eglinton Ave E. Suite 400. Scarborough, ON M1K5G8

**416-321-9911**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ekuruvi NIGHT 2016

## BIZTHA MARKETING EXCELLENCE AWARD

- Connecting Roots Award
- Web and Online Marketing Award
- Commitment to Service Award
- Making a Difference Award
- Pioneer in Tamil Media Award
- Industry Initiative Award



**03 APRIL**

**5:30 Sunday April 03rd 2016| Chandni Grand | 3895 McNicoll Ave, Scarborough**

**இகுருவி விழாவின் பிரதம விருந்தினராக அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்**



சர்வதேச ரீதியில் அறியப்படும் தமிழ் அரசியல் கருத்தாளர்களில் நிலாந்தன் பிரதானமானவர். இலங்கைத்தீவின் அரசியலில் பெரும் தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய பிரதான அரசியல் மற்றும் பத்தி எழுத்தாளராக இவர் விளங்குகின்றார். அரசியல் ஆய்வாளர். பத்தி எழுத்தாளர். கேலிச் சித்திரக் கலைஞர். கவிஞர் என பன்முகங்களை கொண்ட நிலாந்தன் இலக்கியம் தொடர்பாக ஆய்வு கட்டுரைகளை தொடர்ந்தும் எழுதுபவர். சமகால அரசியல் குறித்த இவரது பதிவுகள் பல்வேறு நாடுகளிலும் ஒலி மற்றும் ஒளி ஊடகங்களிலும் பத்திரிகை மற்றும் இணைய ஊடகங்களிலும் தொடர்ந்தும் வெளியாகி வருகின்றன.

RE/MAX THIPAN RAJ | NAVA LAW PROFESSIONAL CORPORATION | THE GUARDIAN GINI ANNARASA | INFORCE LIFe Financial Service Inc. | AJAX NS DENTAL | COMPUTEK COLLEGE | Allstate HARRY KULASEGARAM

416-272-8543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org